மஞ்சரி

கர - பங்குனி

எலிஸபெத் ராணி

நத்தைகள் சங்கம்

நட்சத்திரத்தில் பெயர் பொறித்தவன்

சிரித்த முகம்
(குஜராத்திக் கதை)

நம்பாதவன்
(வெளிநாட்டுக் கதை)

-6-
அணா

நம்பிக்கை

மனிதன் நம்பிக்கை (சிரத்தை) மயமானவன். நம்பிக்கை அவனவன் உள்ள இயல்புக்குத் தக்கபடி இருக்கும். எவனுக்கு எதில் நம்பிக்கை உண்டா கிறதோ, அவன் அதுவே ஆகிறான்.

—பகவான் கண்ணன், 'கீதை'யில்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, சங்கர், மகான், சுசி.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 5] [இதழ் 4

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

ராஜ்ய அசெம்பிளிகளுக்கும் இந்தியப் பார்லிமெண்ட் மக்கள் சபைக்கும் தேர்தல்கள் அநேகமாக நடந்து முடிந்தன. சென்னை, திருவாங்கூர்-கொச்சி, பெப்ஸு, ஒரிஸ்ஸா, ராஜஸ்தான்- இந்த ஐந்து ராஜ்யங்களைத் தவிர மற்ற அனைத்திலும் காங்கிரஸே பலத்த பெரும்பான்மை பெற்றிருக்கிறது. ஒரிஸ்ஸாவில் சரிபாதிக்கு ஒன்றிரண்டு ஸ்தானங்கள் குறைவு. ராஜஸ்தானில் சரிபாதிக்கு ஒன்றிரண்டு ஸ்தானங்களே அதிகம். மற்ற மூன்றிலுமோ பெரும் பள்ளம் விழுந்திருக்கிறது. ஆனால், இப்படிப் பெரும்பான்மை பெறாத ராஜ்யங்களிலும் மற்றக் கட்சிகளையும் தனிப்பட்டவர்களையும்விடக் காங்கிரஸே மிக அதிகமான ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது. இனியும் இந்திய அரசாங்கம் நிசசயமாகக் காங்கிரஸ் மந்திரி சபையிடந்தான் இருக்கப் போகிறது. காங்கிரஸ் பெரும்பான்மை பெற்ற ராஜ்யங்களிலும் அதுவே மந்திரி சபை அமைக்கும். ஒரிஸ்ஸாவில் காங்கிரஸுக்கு ஒன்றிரண்டு ஸ்தானங்கள் குறைவானாலும், தேர்தலுக்குப் பிந்திய முதல் காங்கிரஸ் மந்திரி சபை, அங்கேயே அமைந்துவிட்டது. வெற்றி பெற்ற மற்றவரில் சிலர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்ததால், அதன் பலம் அங்கே பெருகியிருக்கிறதாம். பெப்ஸுவில்கூடத் தனிப்பட்ட பல அங்கத்தினர் காங்கிரஸில் சேர்ந்துவிட்டதால், காங்கிரஸுக்குப் பெரும்பான்மைப் பலம் ஏற்பட்டு விட்டதாம். சென்னை, திருவாங்கூர்-கொச்சி- இந்த இரண்டின் நிலைமையும் என்ன ஆகப்போகிறது என்று இனித்தான் தெரிய வேண்டும். இந்த ராஜ்யங்களில்கூட எவருடைய மந்திரி சபை அமைந்தாலும், நிர்வாகப் போக்கில் காங்கிரஸின் செல்வாக்கை அடியோடு நிராகரிக்க முடியாது. ஏனென்றால், இந்திய சர்க்கார் காங்கிரஸிடமே இருப்பதோடு, இந்த ராஜ்ய அசெம்பிளிகளிலும் காங்கிரஸே பெரும்பான்மைப் பலம் பெற்றிருக்கிறது. புரட்சிக் கொள்கைகளைக் கொண்டவர்கள் இங்கெல்லாம் ஒன்றிரண்டு பேர் மந்திரிகளாக வந்தாலும் புரட்சிகரமான மாறுதல் எதையும் செய்து விட முடியாது. ஆகவே, இனியும் ஓர் ஐந்து வருஷத்துக்கு இந்தியாவில் எங்கும் காங்கிரஸ் அரசாங்கமே நடக்கப்போகிறது. பிரிட்டனிடமிருந்து அதிகாரம் மாறிய நாள் முதல் இன்றுவரையில் காங்கிரஸ் செய்யாது விட்ட குறைகளையும் செய்த பிழைகளையும்

பாராட்டாமல், அது சாதித்த சாதனைகளையும் அதன் பழைய வரலாற்றையும் மட்டுமே மதித்து, இந்திய மக்கள் அதற்கு இன்னுமொரு சந்தர்ப்பம் அளித்திருக்கிறார்கள். அது பழம் பெருமையும் பழங்கொள்கைகளும் பேசியே வாழ்ந்து கொண்டிராமல், உன்னதமான முறையில் காலத்துக்கேற்ற கொள்கைகளுடன் ஆட்சிபுரிந்து தேசத்துக்கு நலம் புரிய வேண்டும்.

* * *

பிரிட்டனின் ஆறும் ஜார்ஜ் மன்னர், பிப்ரவரி ஆறும் தேதி காலமானார். அவர் நம் காமன் வெல்த்தின் தலைவராகவும் இருந்தார். அவர் மறைவு, ஆங்கிலேயருக்கெல்லாம் பெருந் துக்கம் தந்தது. அவர்கள் துயரத்தில் நாமும் பங்கு கொண்டோம். இந்தியா ஒரு குடியரசாயிருந்தாலும், காமன்வெல்த்தில் அங்கம் வகித்து வருகிறது. இது இந்தியா, பிரிட்டன், இதர காமன்வெல்த் நாடுகள் அனைத்தின் பெருந்தன்மையையும் காட்டுவது மட்டும் அல்ல; அனைத்துக்கும் பெருமையும் கொடுப்பது. அந்தக் காமன்வெல்த்தின் தலைவராக நாம் அன்போடு ஏற்ற ஆறும் ஜார்ஜ் காலமானார். அவருடைய அண்ணனும் இன்று விண்ட்ஸர் டியூக்காக இருப்பவருமான எட்டாம் எட்வர்டு 325 நாள் பிரிட்டிஷ் மன்னராக ஆட்சி புரிந்துவிட்டு, 1936 டிசம்பர் 10-ஆம் தேதி முடி துறந்ததால்தான், ஆறும் ஜார்ஜுக்குப் பட்டம் கிடைத்தது. வாலி ஸிம்ஸன் என்ற அமெரிக்க மாதை எட்டாம் எட்வர்டு காதலித்து மணக்க விரும்பியது பிரிட்டிஷ் பிரதம மந்திரி பால்டுவினுக்குச் சம்மதமில்லை. அதனாலேயே அவர் பட்டம் துறந்தார். அவரும் சமீபத்தில் ஆறும் ஜார்ஜுக்கு நடந்த சவச் சடங்கிலே கலந்து கொண்டார். மன்னர்கள் வரலாம், போகலாம்; சிம்மாசனம் காலியாக இருக்க முடியாது. ஆறும் ஜார்ஜின் வாலிப மகள் இரண்டாவது எலிஸபெத் உடனே அரசியாகப் பதவி ஏற்றுவிட்டாள். அவளைக் காமன்வெல்த்தின் தலைவி என்ற முறையில் இந்தியாவின் சார்பாக நேரு வாழ்த்தியிருக்கிறார். இரண்டாவது எலிஸபெத், 'குட் க்வீன் பெஸ்' என்று நற்பெயர் வாங்கிய முதல் எலிஸபெத்தைப் போல் பேரும் புகழும் தங்க நெடுங்காலம் வாழ்ந்து பிரிட்டனில் ஆட்சி புரிவாளாக!

அதே பாடம்

நான் என் புது வருஷத் தீர்மானங்களை எழுதி ஒரு ஜாபிதா தயாரித்துக்கொண்டேன். ஒரு தீர்மானம் இது: 'மகள் ஜேனெட் என்ன செய்தாலும் சரி; அவளிடம் மிகவும் பொறுமையாய் நடந்துகொள்ளவேண்டும். அப்படி அவளுக்கு என்ன வயசாகிவிட்டது? 15 தானே! இந்த வயசில் கொஞ்சம் துறுதுறுப்பு இருக்கத்தான் இருக்கும்.'

பிறகு ஏதோ தற்செயலாக என் மகளின் புது வருஷத் தீர்மானங்களின் ஜாபிதாவைப் பார்த்தேன். அவைகளில் ஒன்று இது எனக் கண்டேன்: 'அம்மா என்ன செய்தாலும் சரி; அவளிடம் மிகப் பொறுமையாய் நடந்துகொள்ளவேண்டும்.'

—மிஸஸ் ஸி. ஆர். நோலீன்

எலிஸபெத் ராணி

★

உலகத்தில் மற்ற ராணிகளுக்கு இல்லாத தனிப்பெரும் ஆட்சி உரிமை இன்று பிரிட்டிஷ் ராணியாக வந்திருக்கும் எலிஸபெத்துக்கு உண்டு. அதோடு, பலநிற ஜாதியாரும் மனமொத்து வாழும் காமன்வெல்த்தின் தலைவியாக இவள் விளங்கப் போகிறாள்.

விக்டோரியா மகாராணிக்குப் பிறகு மறுபடியும் இங்கிலாந்தில் ஒரு ராணி - இரண்டாம் எலிஸபெத் - பட்டத்துக்கு வந்திருக்கிறாள். 350 வருஷங்களுக்குமுன் எலிஸபெத் என்ற ராணி ஆண்டபோதுதான் இங்கிலாந்து சீரும் சிறப்பும் கொண்டு விளங்க ஆரம்பித்தது. அப்போது அது கடற்போரில் ஸ்பெயினை வென்று பலம் பொருந்திய நாடாக மாறியது. விக்டோரியா ஆண்ட காலத்திலும் இங்கிலாந்து மேன்மையுற்றே விளங்கியது. ஆகவே, இந்த இரண்டாவது எலிஸபெத் ராணியின் காலத்திலும் அது பெயரும் புகழும் பெற்று விளங்கும் என்று பிரிட்டிஷ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

எலிஸபெத் 1926 ஏப்ரல் 21-ஆம் தேதி லண்டனில், தாய்வழிப் பாட்டனாரான ஸ்ட்ராத்மோர் பிரபுவின் மாளிகையில் பிறந்தாள். ஐந்தாம் ஜார்ஜுக்குப் பிறந்த முதல் பேத்தி இவள். தந்தையையே உரித்துக்கொண்டு வந்திருந்தாள் எலிஸபெத். பின்னால் இவளுக்கு அவரைப் போலவே சுபாவமும் இருப்பது தெரிந்தது. குழந்தைக்குப் பெயரிடும்போது, ஏசுநாதர் ஞானஸ்நானம் செய்த புண்ணிய நதியான ஜார்டனிலிருந்தே நீர் தருவித்து அதைத் தலையில் தெளித்தார்கள்.

மிஸ் நைட் என்ற தாதி இவளை வெகு சிரத்தையாகக் கவனித்து வந்தாள். குழந்தையாக இருந்தபோது இவளை லிலிபெட் என்று செல்லமாக அழைப்பார்கள். தாதியிடத்தில் இவளுக்கு வெகு அன்பு. "ஆலா, ஆலா" என்று அவளை எலிஸபெத் அழைப்பது வழக்கம். தாயும் தந்தையும் வெளியூர் போகவேண்டியிருந்தால், குழந்தை எலிஸபெத் பெரும்பாலும் ஸ்ட்ராத்மோர் தாத்தா வீட்டில்தான் இருப்பாள். முதல் தடவை இப்படிப் புறப்பட்டுப் போகும்போது இவள் தாய் வெகு அன்போடு ஒரு பவழமாலையைக் குழந்தையின் கழுத்தில் போட்டுவிட்டுப் போனாள். அது வெகுநாள் வரையில் இவள் கழுத்தில் இருந்தது.

சிறுவயதிலே இவள் எப்போதும் சிரித்த முகமாக இருப்பாள். நாலு வயதிருக்கும்போது தன் தாயுடன் ஒரு நாள் கோச்சில் வெளியே புறப்பட்டாள் எலிஸபெத். அப்போது ஜனங்களெல்லாரும் தொப்பியை எடுத்து இவளுக்கு மரியாதை செய்தார்கள். அதைப்

பார்த்து இவள், "ஏன், அம்மா, அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"நீ குட்டி ராஜகுமாரியோ இல்லையோ? அதனால்தான்" என்றாள் தாய்.

உடனே எலிஸபெத், "நீகூடச் சின்ன வயதில் குட்டி ராஜகுமாரி தானே, அம்மா?" என்று கேட்டாள்.

தாய் இதை எதிர்பார்க்கவில்லை; பிறகு, "இல்லை. பின்னால் ராஜகுமாரரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டதாலேயே ராஜவம்சத்தைச் சேர்ந்தவளானேன்" என்று ஒருவிதமாகப் பதில் சொன்னாள்.

எலிஸபெத் அதோடு விட்டால் தானே? "நான் பெரியவளாகி யாரையாவது கல்யாணம் பண்ணிக்கொண்டால் அவரும் ராஜகுமாரர் ஆவாரோ இல்லையோ?" என்று கேட்டு வைத்தாள்.

தாய் முதலில் என்ன பதில் சொல்வதென்று புரியாமல் தயங்கினாள். பிறகு, "அதை அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியாதே, அம்மா" என்றாளாம்.

எலிஸபெத் எப்போதும் எல்லாரிடமும் சகஜமாகப் பழகுவாள். தன் தங்கை மார்க்கரெட்டிடம் இவளுக்கு அன்பு அதிகம். சிரித்த முகமாக இருப்பாள். இவளுக்கு ஐந்து வயதானதும் கைச் செலவுக்கென்று இவள் பெற்றோர் தமாஷாக ஒரு பர்ஸில் காசு வைத்துக் கொடுத்தார்கள். இவளுக்கு எவ்வளவு பெருமை தெரியுமோ? கடைக்குப் போய்த் திரும்பியதும் "ஆலா, ஆலா! என் பணத்தைக் கொண்டு நான் என்னவெல்லாம் வாங்கியிருக்கிறேன், பார்த்தாயா?" என்று தன் தாதிக்குக் காட்டுவாள்.

1936-ஆம் ஆண்டு வரைக்கும் இவளுக்குப் பட்டம் கிடைக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. இவளுடைய பாட்டனார் ஐந்தாம் ஜார்ஜ் 1936 ஜனவரி 20-ஆம் தேதி காலமானார். பிறகு இவள் பெரிய தந்தை எட்டாம் எட்வர்டு பட்டத்துக்கு வந்தார்; 1936 டிசம்பரில் வாலி ஸிம்ஸன் என்ற அமெரிக்க மாதை மணக்க விரும்பினார். அவள் தன் முந்திய கணவனை விவாகரத்துச் செய்துகொண்டவள்; தவிர, ராஜவம்சத்தைச் சேர்ந்தவள் அல்ல. ஆகவே, அந்தத் திருமணத்தை அப்போது பிரதம மந்திரியாயிருந்த பால்டுவின் ஆட்சேபித்தார். தாம் காதலித்தவளை மணக்க முடியாத அரச பதவி தமக்கு வேண்டாமென்று எட்வர்டு அரசு துறந்தார். அதனால் எலிஸபெத்தின் தந்தை ஆறாம் ஜார்ஜ் பதவிக்கு வந்தார். அதனாலேயே இவள் இளவரசியானாள்.

1936 டிசம்பர் 11-இல் இவளுடைய தந்தை பட்டத்துக்கு வந்தார். அப்போது இவளும் இவள் தங்கையும் தங்கள் தந்தை கடற்படை உடையுடன் வெளியே செல்வதைக் கண்டார்கள்.

"அப்பா திரும்பிச் சிற்றுண்டி அருந்த வரும்போது, அவரை நீங்கள் இரண்டு பேரும் தலை பணிந்து வணங்கவேண்டும். இன்று மட்டும் அல்ல; ஆயுட் காலம் வரையில் இனி அவரை நீங்கள் காணும் போதெல்லாம் இப்படி வணங்க வேண்டும்" என்று தாதிமார் இவர்களுக்குச் சொன்னார்கள்.

அன்று காலை முழுவதும் சகோதரிகள் இருவரும் தங்கள் பாடங்களைப் படிக்கவில்லை; அப்பாவுக்குத் தலைபணிந்து வணங்குவதெப்படி



குடும்ப சகிதம் பிரிட்டிஷ் ராணி

என்ற பயிற்சியில் முனைந்துவிட்டார்கள்.

எலிஸபெத்துக்கு 12 வயசானதும் இவளைப் பிரிட்டிஷ் பட்டத்திளவரசி என்று தீர்மானித்தது இவளுக்குப் பார்லிமெண்ட் 6,000 பவுன் வருஷ அலவன்ஸ் வழங்கத் தொடங்கியது. அப்படியிருந்தும் இவளுக்கு 14 வயது ஆகும் வரையில், இவள் கைச் செலவுக்கென்று கிடைத்தது வாரம் ஒன்றுக்கு ஒரு ஷில்லிங்கு தான்!

ஒரு சமயம் இவளும் இவள் தங்கை மார்க்கரெட்டும் ராயல் மிண்ட் என்ற பிரிட்டிஷ் நாணய வார்ப்புச்சாலையைப் பார்க்கச் சென்றார்கள். அங்கே இங்கிலாந்து பாங்கின் பிரசித்தி பெற்ற தலைவர் நார்மன் மாண்டேகு இருந்தார். தங்கக் கட்டிகளை ஏராளமாய் அடுக்கி வைத்திருந்தார்கள். இவளுடைய அப்பாவின் தலை முத்திரைகளை நாணயங்களில் பதித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், இவற்றால் ராஜகுமாரிகளுக்கு ஆச்சரியம் உண்டாகவில்லை.

செங்கல் குவியல்போல் இருந்த தங்கக் கட்டிகளைப் பார்த்ததும்,

"இவ்வளவுதானா!" என்று எலிஸபெத் அலுத்துக்கொண்டாள்.

"இவை உண்மையான தங்கக் கட்டிகள்தான்; சந்தேகப்படாதே. நீயும் உன் தங்கையும் உங்களால் தூக்க முடிந்த தங்கக் கட்டியை, இங்கே நீங்கள் வந்ததற்கு ஞாபகார்த்தமாக எடுத்துச் செல்லலாம்" என்று எலிஸபெத்திடம் பாங்கித் தலைவர் சொன்னார்.

அக்காளும் தங்கையும் முடிந்த மட்டும் முயன்றும் ஒரு கட்டியைக் கூடத் தூக்க முடியாமல் ஏமாந்து திரும்பினார்கள்.

தான் ஒரு தீர்மானத்துக்கு வந்தால் எலிஸபெத் அதைச் செய்தே முடிப்பாள். மகாயுத்தத்தின்போது இங்கிலாந்தில் தரைப் படையில் பெண்கள் பகுதியில் சேர வேண்டுமென்று இவளுக்கு விருப்பம். இவள் தந்தைக்கு முதலில் அது பிடிக்கவில்லை. ஆனால் இவளது உறுதியைப் பார்த்ததும், 'சரி' என்று சம்மதித்து விட்டார். அப்போது இவளுக்கு வயது 18. அங்கே சலுகை எதுவுமின்றி மற்றப் பெண்களைப் போலவே எல்லா வேலைகளையும் செய்து பழகினாள். நன்றாக லாரி ஓட்டக் கற்றுக்கொண்டாள்.

1947 பிப்ரவரி மாதம் இவளுக்கு வயது 21 இருக்கும்போது காமன்வெல்த்திலுள்ள மக்களுக்கு ரேடியோ மூலம், "உங்கள் எல்லாருக்கும் அரசகுடும்பத்துக்கும், நான் உள்ள வரையில் தொண்டு புரியும்படி ஆண்டவன் அருள வேண்டும்" என்று ஒரு செய்தி விடுத்தாள். இது மற்றவர் எழுதிக் கொடுத்ததுதான். ஆயினும் எலிஸபெத்துக்கும் இந்தக் கருத்து உள்ளூற இருந்ததால் குரலில் உருக்கம் இருந்தது. இவள் குரல் தாயின் குரலைப் போலவே இருக்கும்.

குறித்துக்கொடுத்த கால அட்டவணைப்படி இவள் நடக்கத் தவற மாட்டாள். ஒரு சமயம் ஒரே நாளில் பல இடங்களைப் பார்வையிட வேண்டியிருந்தது. கடைசியில் ஓர் ஆஸ்பத்திரிக்குப் போய் நோயாளிகளைப் பார்வையிடும் போது இவளுக்குத் தலை சுற்றியது. ஒரு கம்பத்தின் பக்கம் சாய்ந்தாள். கூட வந்தவர், "இதோடு நிறுத்தி விட்டுப் புறப்பட்டுப் போய்விடலாமா?" என்று கேட்டார். அதற்குள் எலிஸபெத் சமாளித்துக் கொண்டு முழு நேரமும் எல்லாவற்றையும் கவனித்துவிட்டுத்தான் திரும்பினாள்.

எலிஸபெத்துக்கு நடனம் ஆடுவதில் நல்ல தேர்ச்சி உண்டு. கணக்கென்றால் இவளுக்குப் பிடிக்காது. தையல் வேலையிலும் இவளுக்குப் பிடிப்பில்லை. ஆனாலும் மனசு வைத்தால் எதை வேண்டுமானாலும் கற்றுக்கொண்டு விடுவாள். இவளுக்குச் சித்திரம் எழுத வரும்.

எலிஸபெத் பள்ளிக்கூடமே போனதில்லை. ஆனால் வீட்டிலேயே மேரியன் க்ராபோர்டு என்ற பெண்மணியிடமும், மார்ட்டன் என்பவரிடமும் பல விஷயங்களைக் கற்றறிந்தாள். நன்றாகப் பியானோ வாசிப்பாள். சற்றுக் கூச்சமுண்டு; என்றாலும் தமாஷாகப் பேசிப் பழகுவாள். யாருக்காவது, ஏதாவது கஷ்டம் என்று தெரிந்தால் உடனே அவர்களுக்கு ஒத்தாசை செய்வாள். விஷயத்தைப் பட்டவர்த்தனமாகச் சொன்னால்தான் இவளுக்குப் பிடிக்கும்; கூழைக் கும்பிடு என்றால் இவளுக்கு ஆகவே ஆகாது.

இவள் கணவரான பிலிப் மவுண்ட் பாட்டன், கிரீஸ் மன்னராக இருந்த ஜார்ஜின் பேரர்; இந்தியாவின் கடைசி வைசிராயான மவுண்பாட்டன் பிரபுவின் சகோதரி மகன். கிரீஸுக்கு அருகில் மத்திய தரைக் கடலிலுள்ள கார்பூ தீவில் இவர் பிறந்தார். சிறுவயதில் இவருடைய தந்தையைச் சில புரட்சியாளர் கைது செய்துவிட்டார்கள். அதனுல் அங்கிருந்து இவரும் இவர் சகோதரரும் ஓடி அலேய நேர்ந்தது. அப்போது எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிருர். தம் தாயின் வம்சப் பெயரையே இவர் வைத்துக் கொண்டார். பிரிட்டிஷ் கடற்படையில் மகாயுத்த காலத்தில் வேலே பார்த்து வந்தார். வெளி நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் பிரிட்டிஷ் மக்களோடு சகஜமாகப் பழகி அவர்கள் அன்புக்குப் பாத்திரமானுர். சண்டை முடிந்தபின் இவர் பிரிட்டிஷ் பிரஜையே ஆகிவிட்டார். 1947-நவம்பர் மாதம் இவருக்கும் எலிஸபெத்துக்கும் விவாகம் நடந்தது. எடின்பர்க் டியூக் என்று இப்போது இவரை அழைக்கிருர்கள். இவர் உடலுறுதியும் உற்சாகமும் உள்ள வாலிபர். இவர்களுக்கு இப்போது இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. மூத்த குழந்தை இளவரசன் சார்லஸ்; கைக் குழந்தை இளவரசி ஆன். தம்பதிகள் இருவருக்குமே குடும்பம் என்ருல் மிகவும் பற்றுதல்.

சமீபத்தில் இவர்கள் இருவரும் தென்னுப்பிரிக்காவுக்குப் போயிருந்தார்கள். அப்போதுதான் ஆருரம் ஜார்ஜ் மன்னர் இறந்த செய்தி இவர்களுக்குக் கிடைத்தது. உடனே இருவரும் விமானத்தில் பறந்து லண்டன் வந்து சேர்ந்தார்கள். எலிஸபெத் இப்போதே சிம்மாசனம் ஏறிவிட்டாலும் கூடிய விரைவில் முறைப்படி வைபவமாக முடிசூட்டு விழா நடத்துவார்கள்.

வரும் ஆகஸ்ட் 7-ஆம் தேதியே முடிசூட்டு விழாவை நடத்தி விடலாம் என்று அரண்மனே அதிகாரிகள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருர்கள். அரசி இந்தத் தேதியை அங்கீகரித்தால், அப்படியே நடக்கும். ஆகஸ்ட் 7 வியாழக்கிழமை. விக்டோரியா ராணி, நாலாவது வில்லியம், நாலாவது ஜார்ஜ் இந்த எல்லாருக்கும் வியாழக்கிழமைகளில்தான் முடி சூட்டினுர்கள். ஏழாம் எட்வர்டுக்கு முடி சூட்டவும் ஒரு வியாழக்கிழமையையே குறித்திருந்தார்கள். அன்று அவருக்கு உடல் நிலே சரியில்லாததால் தேதி மாறியது. பழைய மன்னர் காலமான அதே வருஷத்தில் புதியவர் முடி சூட்டப் பெறுவது 225 வருஷத்துக்குப் பிறகு இப்போதுதான் முதல் முதலாகப் பிரிட்டனில் நிகழும் நிகழ்ச்சி.

இந்தியா ஒரு குடியரசே என்ருலும் தானுகச் சம்மதித்துக் காமன்வெல்த்துக்குள்ளேயே இருக்கிறது. எலிஸபெத் ராணி பிரிட்டனுக்கு அரசியாகவும் காமன்வெல்த்தின் தலேவியாகவும் பதவி ஏற்றிருக்கிருள்.

அரசியல்வாதி

இந்தக் காலத்தில் அரசியல்வாதியாக வாழ்வது மகா கஷ்டம். ஏனென்ருல், மதில்மேலே உட்கார்ந்துகொண்டு அதே சமயத்தில் இரண்டு காதுகளேயும் தரையிலே பதிய வைத்துக் கேட்பது யாரால்தான் முடியும்? —ரெட் ஸ்கெல்டன்



ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

புறப்பாடு: ஆத்மானந்தத்தின் சுவையை உணர்ந்த வேங்கட ரமணர் பள்ளிக்கூடம் போய்க் கொண்டு வந்தார். ஆனால் எப்போதுமே தனிமையை நாடும் இயல்பு அவரிடம் குடிகொண்டு விட்டது. பள்ளிக்கூடத்தில் சரிவரப் படிப்பதில்லை. ஆசிரியர் ஏதோ கேள்வி கேட்டார். இந்த இளைஞர் தக்க விடை கூறவில்லை. அவருக்குத் தெரியுமா இவருடைய நிலை? மாயாவிகார மயக்கத்தில் ஆழ்ந்து உலகத்தில் சுழலும் ஆன்மாக்கள், 'இன்பம் எங்கே? வழி எங்கே?' என்று கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கப் பிறந்த இப்பெருமான் ஆசிரியர் கேட்ட ஆங்கில இலக்கணக் கேள்விக்கு விடை அளிக்கவில்லை. ஆகவே, இவரைத் தண்டிக்க வேண்டுமென்று ஆசிரியர் கருதினார். குறிப்பிட்ட இலக்கண பாடத்தைப் பலமுறை பார்த்து எழுதும்படி கட்டளையிட்டார். பெயின் என்பவர் எழுதிய ஆங்கில இலக்கணம் அது. அதில் ஒரு பாடத்தை எழுதிக் கொண்டுவந்து காட்டவேண்டும் என்று ஆசிரியர் சொல்லியிருந்தார்.

1896-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 29-ஆம் தேதி சனிக்கிழமை இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

வேங்கடரமணர் ஆசிரியர் சொன்னபடி இலக்கணபாடத்தை எழுதிக்கொண்டிருந்தார். இவருடைய தமையனாராகிய நாகசாமி ஐயர் இதைக் கவனித்தார். இவர் சரிவரப் பாடங்களைப் படிப்பதில்லை என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. பாடத்தைப் பல முறை

எழுதவேண்டியிருந்தது. ஆனால் இவருடைய மனமோ அடிக்கடி உள்முகப்பட்டது. சிறிது எழுதுவது, சிறிது கண்ணை மூடி இன்ப நிலையில் இருப்பது இப்படியாக ஒருவாறு இரண்டு முறை பாடத்தை எழுதினர். இன்னும் சில தடவை எழுதவேண்டும். ஆனால் இவருக்கு அதற்கு மேல் ஓடவில்லை. மை மாத்திரம் அல்ல; மனமே ஓடவில்லை. அது உள்முகப்பட்டு நின்றுவிட்டது. கண் மூடி மௌனியாகி நிஷ்டாபரராக இருந்துவிட்டார்.

தமையனர் நாகசாமி ஐயர் பார்த்தார். அவருக்கு இவர் நிஷ்டையில் இருக்கிறர் என்று தெரியவில்லை. பாடத்தைப் படிக்காமல் எழுதாமல் சோம்பேறியாகப் பொழுதை வீணுக்குகிறரென்றே எண்ணினர். அவருக்குச் சினம் உண்டாயிற்று. "இப்படிக்கெல்லாம் இருப்பவனுக்கு இங்கே என்ன வேலை?" என்று கடுமையாகச் சொன்னர். அவர் சொன்னது இவர் சோம்பேறியாக இருக்காமல் பாடத்தைச் சரிவரப் படிக்க வேண்டும் என்பதற்காகத்தான். 'இப்படிப் படிக்காமல் எழுதாமல் கண்ணை மூடிக்கொண்டு தூங்கினல் எப்படி முன்னுக்கு வர முடியும்? என்னுடைய கண் முன்னலேயே இப்படித் தூங்கி வழிகிறயே; கடமையைச் சிறிதும் உணராதவன், இப்படிப் படிக்கிறதாகப் பாவனை செய்வானேன்? நான் உன்னைப் படிக்க வைத்திருப்பதாக எண்ணி ஏமாந்து போவானேன்? படிக்காமல் போது போக்குகிறவனுக்கு இங்கே என்ன வேலை?' என்ற பல எண்ணங்களை எண்ணியே நாகசாமி ஐயர் அப்படிக் கூறினர்.



ஆனல் ஆத்மானந்தத் தேனில் வண்டாக நின்ற இவருக்கு நாகசாமி ஐயர் சொன்ன அந்த வார்த்தைகளே குரு உப்தேசமாயின. 'இந்த மாதிரி அகமுகமாக இருப்பவனுக்குப் பாசபந்தங்களிற் சுழன்று வாழும் கூட்டத்திலே என்ன வேலை? உனக்கு வேறு இடத்திலே வேலை இருக்கிறது; இங்கே வேலை இல்லை. இதை விட்டுப் போ; உன் திருவண்ணமலைக்குப் போ' என்று உபதேசித்தது போல இருந்தது. வேங்கடரமணருடைய உள்ளத்தின் ஆழத்தில் புதைந்திருந்த அருணசலம் இப்போது மேலெழுந்து சுடர் விட்டது.

அன்று பள்ளிக்கூடத்துக்கு இவரை வரச் சொல்லியிருந்தார் ஆசிரியர். அன்று அவர் மின்சார சக்தியைப்பற்றிச் சொல்லித் தருவதாக இருந்தார். வேங்கடரமணர் வேறுவகையான மின்சாரம் பாய்ந்த உடம்பை உடையவராகிவிட்டார். ஆகவே, சாமான்ய மின்சாரத்தைப் பற்றிய கவலை இவருக்கு எதற்கு?

ஆனாலும், தம் தமையனாரிடம் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டுமென்று சொன்னார். அவர் ஐந்து ரூபாயை இவர் கையில் கொடுத்து, "என் சம்பளத்தைக் கட்டிவிடு" என்று சொன்னார்.

இவர் அந்த ஐந்து ரூபாயில் மூன்று ரூபாயை மாத்திரம் எடுத்துக்கொண்டார். மிச்சமுள்ள இரண்டு ரூபாயையும் ஒரு சிறிய சீட்டையும் வீட்டில் ஓர் இடத்தில் வைத்துவிட்டார். அந்தச் சீட்டில் இவர் தம்முடைய புறப்பாட்டைப் பற்றிப் பின் வருமாறு எழுதினார்:

"நான் என் தகப்பனாரைத் தேடிக்கோண்டு அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிட்டேன். இது நல்ல காரியத்தில்தான் பிரவேசிக்கிறது. ஆகையால் இந்தக் காரியத்துக்கு ஒருவரும் விசனப்பட வேண்டாம். இதைப் பார்ப்பதற்காகப் பணமும் செலவு செய்ய வேண்டாம். உன் சம்பளத்தை இன்னும் செலுத்தவில்லை. ரூபாய் 2 இதோடு கூட இருக்கிறது."



ஏதோ ஒரு தேச படத்தைப் பார்த்தபோது திருவண்ணாமலை, திண்டிவனத்துக்குப் பக்கத்தில் இருப்பதென்று தெரியவந்தது. திண்டிவனத்துக்குப் போய்விட்டால் அங்கிருந்து திருவண்ணாமலைக்குப் போய்விடலாம் என்று எண்ணினார். கையில் மூன்று ரூபாயுடன் மதுரை ரெயில்வே ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டார்.

—(வாழ்வு)

சகஜ சமாதி: ஒருவன் மட்டும் வண்டியில் பிரயாணம் செய்கிறான். அப்போது அவனுக்குத் தூக்கம் வந்து விடுகிறது. மாடுகள் நடந்து கொண்டே இருக்கின்றன. பல இடங்களைக் கடந்து செல்கின்றன. வழியிலே சோலைகளும் ஊர்களும் இருக்கின்றன. அவற்றின் வழியே வண்டி செல்கிறது. வண்டி செல்வதனால் அதற்குள் தூங்கும் மனிதனும் அந்த வழியிலே சென்றவன் ஆகிறான். வண்டி ஓரிடத்தில் நிற்கிறது. சிறிது நேரம் கழித்து வண்டியில் இருந்தவன் விழித்துக் கொள்கிறான். அதற்கு முன் அவன் கடந்த வழி அவனுக்குத் தெரியாது. அங்கிருந்த காட்சிகளையும் அவன் அறியான். ஆனாலும் அவன் அத்தனை காட்சிகளையும் கடந்தே வந்திருக்கிறான். சகஜ சமாதியில் இருக்கும் ஆத்மஞானி உலகில் வாழ்ந்தாலும் அதில் ஈடுபடாமல், அதனால் வேறுபாடு அடையாமல் இருக்கிறான்.

—(வாக்கு)

மௌன உபதேசம்: ஒருவர் ரமண மகரிஷிகளை, "ஏன் தாங்கள் ஊரூராகச் சென்று ஜனங்களுக்கு உபதேசம் செய்வதில்லை?" என்று கேட்டார். அதற்கு இந்த மகா ஞானி கூறிய பதில் வருமாறு:

'நான் அதைச் செய்யவில்லை யென்று உனக்கு எப்படித் தெரியும்? மேடைமீது ஏறி ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்வதுதான் உபதேசமா? உபதேசம் என்பது அறிவைப் புகட்டுவது. மௌனம் ஒன்றினால்தான் உண்மையான உபதேசத்தைச் செய்ய முடியும். ஒரு மணி நேரம் ஆரவாரமான பிரசங்கம் ஒன்றை ஒருவன் கேட்கிறான். கேட்கும்போது உற்சாகமாக இருக்கிறான். பிறகு அந்தப் பிரசங்கத்திலே கேட்டபடி தன் வாழ்வைத் திருத்திக்கொள்ள அவன் முயற்சி செய்வதில்லை. பிரசங்கம் நன்றாயிருந்தது என்று சொல்கிறான். அது போதுமா? இன்னொருவன் பரிசுத்தமான ஒரு சந்நிதியில் அமர்ந்து சிறிது நேரத்தில் தன் வாழ்க்கை நோக்கம் முழுவதும் மாறிவிடுகிறான். இந்த இரண்டு உதாரணங்களில் எது சிறந்தது? பயனின்றி உரக்கப் பேசுவது நல்லதா? மௌனமாக அமர்ந்து ஆத்ம சக்தியை எங்கும் பரப்புவது நல்லதா? —(வாக்கு)

டாக்டரின் பாக்கி

ஒரு மளிகைக் கடைக்காரர், தம் கடைக்கு ஒரு டாக்டர் வெகு நாளாய்ப் பணம் பாக்கி வைத்திருக்கக் கண்டார். ஓர் ஆளை அழைத்து, "அந்த டாக்டரிடம் போய், நான் வரச் சொன்னதாகத் தெரிவி" என்று சொல்லி வசூலுக்கு அனுப்பினார். ஆள் போய்விட்டு, மிகவும் முகவாட்டத்தோடு திரும்பி வந்தான்.

"என்ன சங்கதி? டாக்டர் என்ன சொன்னார்?" என்று கேட்டார் மளிகைக் கடைக்காரர்.

"என்னத்தைச் சொன்னார்! எனக்கு உடம்பு சரியில்லையாம். என் நாக்கை நீட்டச் சொல்லிப் பார்த்தார். 'நாலைந்து வாரம் ஓடியாடி வேலை செய்யாதே. சும்மா வீட்டிலே படுத்திரு. அப்போதுதான் உன் உடம்பு குணமாகும்' என்று எச்சரித்தார்" என்றான் ஆள்.

—'மகஸீன் டைஜெஸ்ட்'

மணி பார்க்கும் தொழிலாளர்

தாமஸ் எடிஸன் என்ற பிரபல விஞ்ஞானி தமது முதல் தொழிற்சாலையை ஆரம்பித்தார். அதில் ஒரே ஒரு சுவர் மாட்டிக் கடிகாரம் வாங்கிவைத்தார். தொழிலாளர்களெல்லாரும் அந்தக் கடிகாரத்தையே ஓயாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதனால் வேலை தாமதப்பட்டது. எடிஸனும் நல்ல உழைப்பாளி. அவருக்கு இது பிடிக்கவில்லை. ஆனால், அவர் ஒன்றும் சொல்லவில்லை. பேசாமல் பல கடிகாரங்களை வாங்கித் தொழிற்சாலையின் பல மூலைகளிலும் மாட்டிவிட்டார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாய் மணி காட்டியது. இந்தக் கடிகாரக் குழப்பத்தைக் கண்ட தொழிலாளர்களுக்கு, மணி பார்ப்பதில் சிரத்தை போய்விட்டது. 'நேரம் என்னவானால் என்ன?' என்று வேலையிலே கவனம் செலுத்தினார்கள்.

—அரேஜான் விக்கான்கான்

அங்கதன் சோர்வு ★

குரங்குகளெல்லாம் சுக்கிரீவனின் கட்டளைப்படி கிஷ்கிந்தையில் வந்து கூடின. சுக்கிரீவன் மகிழ்ச்சியுடன் இந்தச் செய்தியை ராமனுக்குச் சொல்லியனுப்பினான். பிறகு சீதையைத் தேடி வருவதற்காகக் குரங்குகளைக் கூட்டங் கூட்டமாகப் பிரித்துப் பல திசைகளுக்கும் அனுப்பி இடையில் எந்த இடத்தில் என்ன என்ன இருக்கிறது, எந்த வழியாகப் போவது என்றெல்லாம் தெரிவித்தான். சீதையைப்பற்றிய செய்தியை ஒரு மாதத்துக்குள் அறிந்து கொண்டு திரும்பி வரவேண்டும் என்று அவைகளுக்கு உத்தரவிட்டான். ஹநுமான், ஜாம்பவான், நீலன், மைந்தன், த்விவிதன், அங்கதன் முதலியோரைத் தெற்குத் திசையில் யம ராஜதானி வரையில் போய்ப் பார்த்து வரும்படி சொன்னான்; "'சீதையைக் கண்டேன்' என்று எவன் முதலில் வந்து சொல்லுகிறானோ அவனை எனக்கு நிகராகச் செய்து சுகபோகங்களை அநுபவிக்கும்படி செய்வேன்" என்றான். இப்படியே சுஷேணன், மாரீசன் முதலிய குரங்குகளை மேற்குத் திசையிலும் சதபலி முதலிய குரங்குகளை வடக்குத் திசையிலும் போய்ப் பார்த்து வரும்படி சொல்லி அனுப்பினான். ஆயினும் ஹநுமானிடத்தில் மட்டும் சுக்கிரீவனுக்கு விசேஷ நம்பிக்கை இருந்ததை ராமன் அறிந்துகொண்டான். ஆகவே, தன் பெயர் பொறித்த மோதிரத்தை ஹநுமானிடம் கொடுத்து, "இதைப் பார்த்தால் சீதை என்னிடமிருந்து நீ வந்திருப்பதாகத் தெரிந்துகொள்வாள். உன்னுடைய உறுதி, முயற்சி

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.



எல்லாவற்றையும் கவனித்தால் இந்தக் காரியத்தை நீதான் நிறைவேற்றுவாய் என்று எனக்குத் தோன்றுகிறது. எப்படியாவது சீதை திரும்பவும் கிடைக்க நீதான் வழி தேடவேண்டும்'' என்று சொல்லி அனுப்பினான்.

பிறகு சுக்கிரீவனைப் பார்த்து, "பூமண்டலம் முழுதும் எப்படி உனக்குத் தெரியும்? இன்ன இன்ன வழியாகப் போகவேண்டும் என்று சொல்லியனுப்பினாயே!'' என்று கேட்டான். அப்போது சுக்கிரீவன் தன்னை வாலி விரட்டியபோது, தான் அவனுக்குப் பயந்து பூமி முழுதும் சுற்றி அலைந்ததாகச் சொன்னான்.

சுக்கிரீவனின் கட்டளைப்படி வெவ்வேறு திசைகளில் சென்ற குரங்குகள் திரும்பி வந்து, "சீதையை எங்கேயும் காணவில்லை. தெற்கேதான் அவள் இருக்க வேண்டும். ஹநுமான் நிச்சயமாக அவளைத் தேடி அழைத்துவருவான்'' என்று தெரிவித்தன.

தாரன், அங்கதன் முதலிய குரங்குகளுடன் ஹநுமான் கண்டு வனம், ரஜத பர்வதம் இங்கெல்லாம் சீதையைத் தேடினான். அப்படியும் அவளைக் காணாததால் மனச் சோர்வுற்றிருந்தான். மீண்டும் விந்திய மலையிலும் அதன் சாரலிலுள்ள காடுகளிலும் போய்த் தேடத் தொடங்கினான். அப்போது இருண்ட பள்ளம் ஒன்று தெரிந்தது. அதனுள் வெகு தூரம்போனதும் கடைசியில் ஓர் இடத்தில் வெளிச்சம் தெரியவே ஹநுமானும் அவன்கூட வந்தவர்களும் அதை நோக்கிச் சென்றார்கள். அங்கே ஸ்வயம்பிரபை என்ற

தவமாது ஒருத்தி இருந்தாள். அவள் இவர்களை உபசரித்தாள். இவர்கள் களை தீர்ந்து அவள் வரலாற்றைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தார்கள். பிறகு வெளியே செல்ல வழி தெரியாமல் திகைத்தார்கள். உடனே அவள் தன் யோகசக்தியால் அவர்களை வெளியே வந்து சேரும்படி செய்தாள்.

அங்கே அலைகள் கொந்தளித்து எழும் பயங்கரமான கடல் ஒன்று தெரிந்தது. அந்த மலைச்சாரலில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்தார்கள். சுற்றிலும் வசந்த காலத்து மலர்கள் பூத்திருப்பதைக் கண்டதும், "சுக்கிரீவ மகாராஜா சொன்ன ஒரு மாதக் கெடுவும் ஆகிவிட்டதே!" என்று ஹநுமானுடன் வந்த சில குரங்குகள் சோர்வுடன் சொல்லின. அப்போது அங்கதன், "சுக்கிரீவனின் உத்தரவை நிறைவேற்றாமல் நாம் திரும்புவதா? திரும்பினால் அவன் கொல்லாமல் விடமாட்டான். அதை விட இங்கேயே பட்டினி கிடந்து இறப்பது மேல். அதோடு சுக்கிரீவன் எனக்கு இளவரசுப் பட்டம் சூட்டவில்லை. ராமர்தான் சூட்டினார். ஏற்கனவே உள்ள விரோதத்தைக் காட்டி என்னை எப்படியாவது அவன் கொன்று விடலாம். நான் இங்கேயே சாகிறேன்" என்றான்.

மற்றக் குரங்குகளும் வருத்தத்துடன், "சுக்கிரீவன் இயல்பிலேயே கொடியவன். ஆகவே, நம்மை நிச்சயம் கொன்றுதான் விடுவான். மனைவியை இழந்து ராமர் வருத்தமுற்றிருப்பதால் இதைத் தடுக்கப் போவதில்லை. எப்படியாவது சீதையைக் கண்டுபிடித்துத்தான் கிஷ்கிந்தைக்குச் செல்லவேண்டும்" என்றன.

அப்போது தாரன் என்ற குரங்கு, "நண்பர்களே, ஏன் வருத்தப்படுகிறீர்கள்? நாம் இந்தப் பள்ளத்திலே தங்கிச் சுகமாக வாழ்ந்து வருவோம். இங்கே நம்மை இந்திரனோ ராமனோ சுக்கிரீவனோ ஒன்றும் செய்ய முடியாது" என்றது. மற்றக் குரங்குகளும் இதை ஆமோதித்தன.

இதைக் கேட்ட ஹநுமான், 'எங்கே அங்கதன் தனிக் குரங்கு ராஜ்யம் ஒன்றை ஸ்தாபித்து விடுவானோ?' என்று அஞ்சினான்; நயமாகவும் பயமாகவும் அங்கதனை வழிக்குக் கொண்டு வர எண்ணி, "அங்கதா, நீ உன் தகப்பனைப்போல் வானர ராஜ்யத்தை ஆளும் திறமை உள்ளவன். ஆனால் குரங்குகளின் மனம் நிலையாக இராதே! உன் உத்தரவை அவை கேட்குமா? ஜாம்பவான், நீலன் முதலியவர்களைச் சுக்கிரீவனைவிட்டுப் பிரிக்க முடியாது. சுக்கிரீவனோ மகா பலவான். அவனிடம் விரோதம் பாராட்டிக்கொண்டு நீயே தனியே நிற்க முடியுமா? இந்தப் பள்ளத்தில் இருக்கலாம் என்றால், இதையும் லட்சுமணனுடைய பாணங்கள் தகர்த்துவிடும். அப்போது மற்றக் குரங்குகளெல்லாம் உன்னைவிட்டுச் சுக்கிரீவனோடு சேர்ந்துவிடும்; நீ நிராதரவாக நிற்பாய். நீ எங்களோடு சேர்ந்து பணிவாக இருந்தால் சுக்கிரீவன் தனக்குப் பிறகு உனக்கே முடி சூட்டுவான். அவன் தருமத்தை மீறமாட்டான்" என்றான்.

அதற்கு அங்கதன், "சுக்கிரீவனிடம் ஒழுக்கம், நேர்மை, பராக்கிரமம், இரக்கம் ஒன்றுமே இல்லை. தமையன் மனைவியைத் தாயாக எண்ண வேண்டியிருக்க அவளை

அவன் சொந்தமாக்கிக்கொண்டது தருமமாகுமா? தமையன் உள்ளே போரிடும்போது குகை வாயிலை அடைத்தவனுக்குத் தருமம் எப்படித் தெரியப்போகிறது? அக்கினி சாட்சியாகக் கை தொட்டுச் சத்தியம் செய்துவிட்டு ராமரை மறந்தவன்தானே அவன்? லட்சுமணனைக் கண்டு நடுங்கிச் சீதையைத் தேடும்படி நமக்கு உத்தரவிட்டிருக்கிறான்; கடமையை எண்ணி ஒன்றும் இப்படிச் செய்துவிடவில்லை! பாவியும் நன்றி கெட்டவனும் சபல புத்தி உள்ளவனுமான சுக்கிரீவனை நல்லவன் என்றால் யார்தான் நம்புவார்கள்! அவனுடைய கட்டளையை நிறைவேற்றாமல் கிஷ்கிந்தைக்குத் திரும்பினால் சிந்துவாரின்றிக் கிடக்க வேண்டியதுதான். ராஜ்யத்துக்கு ஆசைப்பட்டுச் சுக்கிரீவன் என்னை ரகசியமாகக் கொல்லச் சூழ்ச்சி செய்வான். ஆகவே, இங்கே பட்டினி கிடந்து சாவதே மேல். நான் கிஷ்கிந்தைக்கு வரமாட்டேன். நீங்களெல்லாரும் திரும்பிப் போங்கள். என் தாய் ருமையினிடம் நான் சௌக்கியமாக இருப்பதாகச் சொல்லுங்கள். என் தாய் தாரைக்கும் ஆறுதல் சொல்லுங்கள். அவளுக்கு என்மேல் அதிக அன்பு. நான் இங்கே இறந்துவிட்டேன் என்று கேள்விப்பட்டால் அவள் உயிர் போய்விடும். என் சிற்றப்பனுக்கும் என் வணக்கத்தைத் தெரிவியுங்கள்'' என்று சொல்லி அங்கதன் தன்னைவிட வயதான மற்றக் குரங்குகளை வணங்கிப் பூமியில் தர்ப்பையைப் பரப்பி அதன்மேல் படுத்துக்கொண்டான். அவை சுக்கிரீவனை இகழ்ந்து கொண்டும் வாலியைப் புகழ்ந்து கொண்டும் அங்கதனுக்குப் பக்கத்தில் தாங்களும் தர்ப்பையைப் பரப்பிப் படுத்துக்கொண்டன.

சற்று நேரத்துக்கெல்லாம் ஜடாயுவின் சகோதரனான சம்பாதி என்னும் கழுகு அங்கே வந்தது. அந்தக் குரங்குகள் இறந்துவிட்டதாக எண்ணி அவைகளைக் கொத்தித் தின்ன நெருங்கும்போது அவை பேசிக்கொண்டிருக்கவே கவனித்துக் கேட்டது. ஜடாயு இறந்துவிட்டதை அறிந்து வருத்தமுற்றது. சீதையைத் தேடுவதற்காக அந்தக் குரங்குகள் வந்திருப்பது தெரிந்ததும் தன் கூர்மையான பார்வையினால் அவள் இருக்குமிடத்தை அறிந்துகொண்டது; ''சீதை இலங்கையில் இருக்கிறாள்'' என்று அவைகளிடம் சொல்லி அங்கிருந்து பறந்து சென்றது.

சிறுவனின் சங்கடம்

தன் தாயிடம் ஒரு சிறுவன் சொன்னது இது: ''இக்கட்டான ஒரு நிலைமையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன், அம்மா. என் கையெழுத்துத் தெளிவாயில்லை என்று கண்டிக்கிறாள் வாத்தியாரம்மாள். தெளிவாய் எழுதினாலோ, உச்சரிப்பிலே பிழைகள் மலிந்திருப்பதாய்த் திட்டுவாள். என்ன செய்வது?''

—'டென்னென்னி ப்ராடக்ட்ஸ் நியூஸ்'

ஆடையலங்கார 'பாஷ'னிலே சில நுட்பங்கள்.

எது நாகரிக பாணி?

ரச்மி

'பாஷன்' என்று சொல்லுகிறோமே, அதாவது அழகாய் நாகரிகமாய் அலங்கரித்துக் கொள்வது - அதன் நுட்பம் நம்மில் எவ்வளவு பேருக்குத் தெரியும்? 'பாஷன்' தெரிந்தவர் என்று பெயர் பெற்றவர்கள் தம் அலங்காரத்தில் ஒரு குறையும் இல்லையென்று சந்தோஷமாயிருக்கிறார்கள். ஆனால் குறை கண்டு பிடிப்பவர்களோ, "ஐயோ! அழகு தெரியாமல் இப்படி நகைகளையும் புடவைகளையும் வாரிச் சுமந்துகொண்டிருக்கிறார்களே!" என்றுதான் அங்கலாய்க்கிறார்கள். ஆனால் அலங்கரித்துக்கொள்வதில், 'எது சரியான பாஷன்; எது வாஸ்தவமாய் அழகு?' என்று எப்படித் தெரிந்துகொள்வது? கண்ணுக்கு நேர்த்தியாய் அலங்கரித்துக் கொள்ள விரும்பும் ஒவ்வொரு பெண்ணுக்கும் இது ஒரு கடினமான விஷயந்தான். 'பாஷன்' என்றால் 'சரியான அலங்காரம்' என்று ஆங்கில அகராதியில் போட்டிருக்கிறது. எது சரியான அலங்காரம் என்று தெரிந்துகொள்ளத்தோன்றுகிறது அல்லவா? அப்படியானால், எங்கே, பக்கத்தில் உள்ள படங்களைப் பார்த்து இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள், பார்ப்போம்:

படம்-1: விலையுயர்ந்த ஆடைகள் என்றாலும் ஆடம்பரமில்லாமல் அணிந்துகொண்டிருக்கும் பெண்களைப்பற்றிப் புத்தகங்களில் அடிக்கடி படித்திருக்கிறோமே; இதோ படத்தில் உள்ள இரண்டு பெண்களில் ஒருத்தி அணிந்திருக்கும் புடவையின் விலை ரூ. 100; மற்றொருத்தி அணிந்திருக்கும் புடவையின் விலை ரூ.20. விலை அதிகமானது தான் ஆடம்பரமில்லாமல்தோன்றுகிறது. அது இரண்டில் எது?

படம்-2: உங்கள் வீட்டில் கல்யாணப் பேச்சு நடக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். பெண் பார்க்கக் கல்யாணப் பிள்ளையும் அவன் தாயாரும் வருகிறார்கள். அப்போது பெண் எந்தப் புடவையை அணியவேண்டும்?

படம்-3: அந்த அந்தச் சமயத்துக்குத் தக்கபடி ஆடை யணிவதே ஒரு கலைதான். இந்த இரண்டு விதப் புடவைகளில் எதை அணிந்து கொண்டால் கிரிக்கெட் மாட்சுக்குப் போகும்போது பளிச்சென்று அழகாயிருக்கும்?

படம்-4: புடவைத் தலைப்பை இந்த நாலு விதங்களில் எந்த விதம் வைத்துக் கட்டிக்கொண்டால் எடுப்பாகவும் அழகாகவும் இருக்கும்?

படம்-5: கரையில்லாத விலையுயர்ந்த கறுப்பு 'சில்பான் ஸாரி' ஒன்று வாங்கியிருப்பதாய் வைத்துக் கொள்ளுங்கள். அதற்கேற்ற ரவிக்கை, நகைகள் அணிந்து கொண்டால்தான் புடவை சோபிதமாக இருக்கும். சிவப்புப் பட்டுக்

காப்பிரைட்; ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் (ஆங்கிலம்; 5-1-'52) சென்னை.

அழகு எது ?-
கண்டுபிடியுங்கள்.







கயிற்றில் கோத்த ஓர் அழகிய முத்துவடம், நிறைய மணிகள் வைத்துத் தைத்த ஒரு மஞ்சள் 'ஸாட்டின்' ரவிக்கை, அதன் மேல் ஒரு தங்கக் காசுமாலை, ஒரு வைர ப்ரூச், கையில் வெள்ளிச் சரிகையில் பூப்போட்ட 'ப்ராகேடு ஹாண்டு பாக்' இவைகளில் எது அந்தப் புடவைக்கு ஜோடியாக இருக்கும்?

படம்-6: என்ன விதமாய்க் கூந்தலைக் கட்டிக்கொண்டால், எந்த வயதாயிருந்தாலும் எந்த விசேஷமாயிருந்தாலும் எவ்விதப் புடவை உடுத்தியிருந்தாலும் பொருத்தமாயிருக்கும்?

மேற்கூறிய எல்லாக் கேள்விகளுக்குமே சரியான பதில் சொல்லிவிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஐந்து கேள்விகளுக்கு (புருஷர்களாயிருந்தால் நான்கே போதும்) சரியான பதில் சொன்னால் அவர்கள் சரியான 'பாஷன்' தெரிந்தவர்கள் என்று மதிக்கலாம். ஆண்கள் மூன்று கேள்விகளுக்கும் பெண்கள் நான்கு கேள்விகளுக்கும் தக்க பதில் தெரிந்தவர்களாயிருந்தால் ஆடையலங்காரத்தின் அழகு ஏதோ கொஞ்சம் தெரிந்தவர்கள் என்று அவர்களை ஒப்புக்கொள்ளலாம். மூன்று கேள்விகளுக்குக்கூடச் சரியான பதில் தெரியவில்லை என்றால், அவர்கள் எப்படி வேண்டுமானாலும் அலங்கரித்துக்கொண்டு போகட்டும் என்று நாம் விட்டுவிட வேண்டியதுதான்.

இனி விடைகளைக் கீழே காணலாம்:

(1) முதல் கேள்வியில் 'b' படம் தான் சரியானது. நேர்த்தியான உயர்ந்த கதர்ப் புடவை; கையில் வெறும் முத்து வளைகள். a படத்திலுள்ள புடவை விலை சரசமான 'நிஞன்' புடவை. கைகளில் பூ பிராஸ்லெட்.

(2) இரண்டாவது கேள்வியிலும் 'b' படந்தான் மேலானது. ஏனென்றால், பெண்ணைப் பார்க்க வந்திருக்கும் இளைஞனுக்குப் பெண்ணுக்கு எவ்வளவு பணமிருக்கிறது என்று தெரிய வேண்டிய அவசியமில்லை. அவளுடைய இயல்பான தோற்றமும் அவள் தினசரி அலங்கரித்துக்கொள்ளும் விதமும் எப்படி என்றே தெரியவேண்டும்; அவ்வளவுதான்.

(3) மூன்றாவது கேள்விக்கு மூன்றாவது படத்திலுள்ள 'a' படம்தான் சரியான பதில். கிரிக்கெட் மைதானத்து வெயிலுக்கும் புழுதிக்கும் அந்தப் புடவைதான் லேசாகவும் சுகமாகவும் இருக்கும். b படத்திலுள்ள புடவை வெறும் பகட்டு. கண்ணுக்கு அழகில்லை. 'இந்த மாதிரி புடவை உடுத்தியிருப்பது யார்?' என்று எல்லாரும் ஆட்டத்தை விட்டு அவளையே திரும்பிப் பார்க்கச் செய்யும்.

(4) 'b' படத்தில் காண்பது தான் சரியானது. ஏனென்றால் தோளைச் சுற்றிப் பின்புறம் விழுந்திருக்கும் தலைப்பு இடையின் அழகை எடுத்துக் காட்டுகிறது. எவ்வளவு பருமனான இடையையும் அகன்ற முதுகையும் நாசுக்காய்ப் புடவைத் தலைப்பு மறைத்து விடுவதால், பருத்தவர், மெலிந்தவர் அனைவருக்குமே இப்படி அணிவது சௌகரியமாயிருக்கும். வலது தோளின்மேல் தலைப்பு வந்து மூடியிருப்பது இந்துக்களின் நாகரிகத்துக்கேற்றபடி அடக்கமாகவும் காணப்படும். 'a' படத்திலும் 'c' படத்திலும் காண்பதுபோல அணிவது மெல்லிய கொடி

போன்ற உடல்களுக்குத்தான் அழகாயிருக்கும். 'd' படத்தில் காண்பதுபோல் அணிவது உடம்பின் அழகையே முற்றும் கெடுத்துவிடும்.

(5) கறுப்பு 'சிஃபான்' புடவைக்கு 'a' படத்தில் உள்ளது போன்ற ஒரு வடம் முத்து மிகப் பொருத்தமாக இருக்கும்; மிகவும் அடக்கமாகவும் அழகாகவும் தோன்றும். மற்ற மூன்றும் டம்பமாயும், கண்ணுக்குக் கவர்ச்சியின்றி மட்டமாகவும் காணப்படும்.

(6) 'b' படத்தில் காணப்படுவது போல் தலை மயிரைக் கட்டிக் கொள்வதுதான் ரொம்பவும் நன்றாக இருக்கும். மற்ற விதங்களைப்போல் கட்டிக்கொண்டு பாருங்கள்; அப்போது உங்களுக்கே இது தெரியவரும்.

எவ்வளவு பத்திரம்!

வாலிபத் தாய் ஒருத்தி தன் குழந்தையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். பக்கத்து வீட்டுச் சிறுமி அப்போது அங்கே வந்து, சற்று நேரம் இதை வேடிக்கை பார்த்தாள். சிறுமியின் இடுப்பிலே ஒரு ஸெலுலாயிடு பொம்மை இருந்தது. அதன் ஒரு கையும் ஒரு காலும் இல்லை; உடம்பெங்கும் நசுங்கியிருந்தது.

வாலிபத் தாயைப் பார்த்து அந்தச் சிறுமி, "என் மாமி, உங்ககிட்ட இந்தப் பாப்பா வந்து எத்தனை நாளாச்சு?" என்று விசாரித்தாள்.

"மூன்று மாசம்" என்றாள் தாய்.

"அம்மாடி! மூணுமாசமாயும் இதை இவ்வளவு பத்திரமா வெச்சிண்டிருக்கிறேளே! எப்படி?" என்று வியப்புடன் கூச்சலிட்டாள் சிறுமி.

—ஆங்கிலத்திலிருந்து.

கீர்த்திமான்கள் கையெழுத்து

சரித்திரப் பிரசித்திபெற்ற கீர்த்திமான்கள் சில பேரின் கையெழுத்துத் தெளிவாயில்லை. ஷேக்ஸ்பியர் என்ற நாடகாசிரியரின் கிறுக்கெழுத்தை ஆராய்ந்து பார்த்துத் தெளிய வேண்டியதாயிற்று. ஹார்டின் என்ற கதாசிரியரின் நூல்களில் பல இன்னும் அச்சேறவேயில்லை. காரணம் அவர் கையெழுத்து யாருக்கும் புரியாததுதான். நெப்போலியன் சக்கரவர்த்தியின் சில கடிதங்கள், இதையெல்லாம் தோற்கடித்துவிட்டன. அவைகளை யுத்தகளத்தின் படங்கள் என்றே எண்ணிச் சிலர் ஏமாந்துவிட்டார்கள்.

—'தி கேபிள்கிராம்'

யாருக்கு என்ன பதவி?

புஷ்ஜி

தேர்தல்களின் பலனாக இந்திய அரசியலில் புரட்சிகரமான மாறுதல் ஏதாவது ஏற்பட்டுவிடுமோ? அப்படி அஞ்சத் தேவையில்லை என்பது இந்தக் கட்டுரையாளர் கருத்து. பாதித் தேர்தல்கள் நடந்தபோதே இது வெளி வந்துவிட்டதால், கவர்னர் நியமனம் முதலிய சில விஷயங்களில் இதில் கண்ட பெயர் ஹேஷ்யங்கள் இன்று பொருத்தமில்லை. ஆனால், நையாண்டியாக இருந்தாலும், கட்டுரையின் உட்கருத்து அரசியல் வாதிகள் அனைவருக்கும் ஓர் எச்சரிக்கையாகும்.

தேர்தல்கள் அநேகமாக முடிவடைந்துவிட்டன. உண்மையான ஜனநாயகவாதிகளுக்கெல்லாம் இந்தத் தேர்தல்கள் மெத்த அநாவசியமான ஒரு பந்தம் என்று தோன்றுகிறது. அது கிடக்கட்டும். தேர்தல்கள் முடிவடைந்து விட்ட இப்போது பல பிரச்னைகள் கிளம்பியிருக்கின்றன. அவைகளைப் பற்றியெல்லாம் அலசி ஆராயு முன்பு, முதலில் ஒரு விஷயத்தை நாம் குறிப்பிட விரும்புகிறோம்; அதாவது தேர்தல்கள் ஒருபோதும் முடிவடையத் தேவையே இல்லை என்பதைத்தான். பண்டிட்ஜி பேசுகிறமாதிரி பேசினால் தேர்தல்கள் பேராச்சரியமானவை என்றே சொல்வோம். ஆனால், மொரார்ஜி தேசாய்க்கு எற்பட்ட கதியைப் பார்த்தபின்பு அந்த விஷயத்தை நாம் விஸ்தரிக்கப் போவதில்லை. ஆகவே, தேர்தல்கள் அநாவசியம் என்பதையும் அவைகள் முடிவடையத் தேவையேயில்லை என்பதையும் மட்டும் குறிப்பிடுவதோடு அமைகிறோம். தேர்தல் சம்பந்தமான சகல வேலைகளையும் நாம் இன்னும் கொஞ்சம் இழுத்து நீட்டி விடுவதாக வைத்துக்கொள்வோம். தொகுதிகள் பிரிப்பதை நிரந்தர



இரண்டு பெண் மந்திரிகள்

மூலம்: சங்கர்ஸ் வீக்லி (ஆங்கிலம்: 10-2-'52), புது டில்லி.

ஏற்பாடாகச் செய்யத் தேவையில்லை. ஒவ்வொரு தேர்தலுக்கும் புதுப் புது எல்லை கட்டித் தொகுதிகளைப் பிரிக்கலாம். அப்போது நமக்கு ஓர் ஐந்து வருஷத்தில் மூன்று மாத காலத்துக்கு இந்த வேலை இருக்கும். பிறகு ஓட்டர் ஜாபிதா தயாரிக்கலாம். அதைத் தயாரித்த பிறகு அந்த ஜாபிதாவைத் திருத்தும் அலுவலை மேற்கொள்ளலாம். இந்த இரண்டு வேலைக்கும் குறைந்தது ஒரு வருஷ காலமாவது பிடிக்கும். அப்புறம் தேர்தல் தேதிகளைக் குறிப்பிடுவதற்கு ஆயத்தமாகும் வேலையில் ஈடுபடலாம். ஒவ்வொரு ராஜ்யத்திலும் தேர்தல் மூன்று மாத காலம் நீடிக்கத் தக்கபடி ஒவ்வொன்றுக்கும் இருபது தேதிகளைக் குறிப்பிடலாம். இதன் மூலம் நமக்கு நாலு வருஷ வேலை கிடைக்கும். கடைசியில் ஓட்டெடுப்பது, எண்ணுவது இரண்டிலும் புகலாம். ஒவ்வொரு தொகுதியின் ஓட்டையும் எண்ண ஒரு மாத கெடு ஏற்படுத்திக்கொள்ளலாம். பாலட் பெட்டியில் விழுந்திருக்கும் ஓட்டுக்களைப் பழுக்க வைக்க வேண்டுமே, அதற்கு ஆறு வாரத்திலிருந்து மூன்று மாத அவகாசம் அளிக்கலாம். இப்படியாக, மொத்தத்தில் ஒரு தேர்தல் வேலை ஐந்து வருஷத்துக்கு மேலே பிடித்துவிடும். கேவலம் பார்லிமெண்டு, அசெம்பிளி முதலியவைகளின் ஆயுள் சாதாரணமாக ஐந்து வருஷந்தானே? இந்த விதமாக நாம் ஏற்பாடுகள் செய்துகொண்டால், எந்தக் காலத்திலும் தேர்தல் என்பது நம்மை விட்டு அகலாது. மிக அற்பகாலத்துக்கு மட்டும் கூடுகிற பார்லிமெண்டு முதலியவை என்ன செய்தால் என்ன, செய்யாமல் போனால் என்ன? அதைப்

மாவோ - த்ஸே - டுங் இந்தியாவுக்கு வந்தால்...

பற்றியெல்லாம் நாம் கவலைப்பட அவசியமே இல்லாமற் போகும். சர்க்கார் கனஜோராக நடந்து கொண்டிருக்கும். மந்திரிகள் விமானத்தில் பறந்துகொண்டிருப்பார்கள். வருகிற தஸ்தாவேஜிகளில் காரியதரிசிகளே கையெழுத்துப் போட்டுவிடுவார்கள். கனம் மந்திரிகளிடம் சென்று, 'பிந்த்ரா பாபுவின் மருமகனுக்கு ஏன் வேலை கொடுக்கவில்லை?' என்பது போன்ற சமாதானங்களைச் சொல்லிக்கொண்டிருக்கும் தொல்லையெல்லாம் அவர்களுக்கு இராது. வயது வந்தவருக்கெல்லாம் ஓட்

டுரிமை உள்ள ஓட்டர் சமூகம் எந் நேரமும் கடவுளிடம் ஈடுபாடு கொண்டிருக்கலாம். ஜனநாயகம் பூர்த்திபாகும். ஆனல், நாம் சொல்ல வந்த விஷயத்தை விட்டு, வேறு எங்கேயோ சென்று விட்டோமே! இன்று நாம் எழுத வந்தது என்னவென்றால், தலைப்பில் சூட்சுமமாகக் குறிப்பிட்டிருக்கிறோமே, அதுபற்றித்தான்; யாருக்கு என்ன பதவி அளிப்பது என்ற விஷயத்தையே ஆராயப் போகிறோம். அதாவது, தேர்தலுக்குப் பின்னே என்ன நடக்க வேண்டும்?

நாடெங்குமுள்ள ஜனங்களுக்குத் துரதிருஷ்டவசமான ஒரு கிலி ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம்-அதாவது தேர்தல்களுக்குத்தான்-என்ன என்னவோ அர்த்தங்களைச் செய்துகொள்ளுகிறார்கள். "தெற்கே இடது சாரியார் வெற்றி பெற்றுவிட்டார்கள். இது அபாயம்" என்று சில வாலிபர் சொல்லுகிறார்கள். இடதுசாரி நல்ல இடதுசாரியாக இருந்தால், அதைப்பற்றி ஒன்றும் நாம் கவலைப்படவேண்டியதில்லை. சொல்லப் போனல், எவராயிருந்தாலும் சரிதான், அந்தப் பெண் அல்லது ஆண் நல்லவராக மட்டும் இருந்துவிட்டால், நமக்குக் கவலையே இல்லை. தெற்கே, வடக்கே, வேறு எந்தத் திக்கிலே வேண்டுமானலும் சரி, இடதுசாரி வெல்லட்டுமே. அது அல்ல உண்மையான பிரச்னை. இந்தியா மற்ற நாடுகளைப் போல் இல்லை. இங்கே, "வென்ற ஆசாமி யார்?" என்பது தான் உண்மையிலே நாம் கவலைப்படவேண்டிய விஷயம். மந்திரிகள், ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி, துணை மந்திரிகள் முதலிய பதவிகளையெல்லாம் அடைய ஆசைப்படும் ஆசாமிகள் இடதுசாரியிலே தோன்றுவார்களானல், அப்போதுதான் நாம் கவலைப் படத் தொடங்க வேண்டும். கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும், சில சமயம் புரட்சிகளையும் பற்றியே இடதுசாரிக்காரர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாகக் கொள்கைகளெல்லாம் ஜோராகவே இருக்கின்றன. இது எல்லாரும் அறிந்த விஷயம். ஆனல், கொள்கைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வது? கொள்கையே மந்திரியாகிவிடுமா? கொள்கை ஆட்சி புரிந்தால், ஓர் உதவி மந்திரி ராஜாங்க மந்திரியாகவும், ஓர் உதவிக் காரியதரிசி கூட்டுக் காரியதரிசியாகவும் எப்படிப் பதவி பெற முடியும்? சீர்திருத்தங்களும் ஜோர்தான்; சொல்லப் போனல், கொள்கைகளை விட மேலானவை. ஏனென்றால், சீர்திருத்தங்களின் மூலம் நாம் சில காண்ட்ராக்டுகளைப் பெற முடியும்; கொள்கைகளின் மூலமோ ஒரே ஒரு காண்ட்ராக்டைக்கூடப் பெற முடியாது. சீர்திருத்தங்களால் சிலருக்கு மிக நல்ல சான்ஸ் கிடைப்பதும் உண்டு. உதாரணமாக, ஆர். கே. படில், காடியால் இவர்களை எடுத்துக்கொள்ளலாம். சீர்திருத்தம் இல்லாவிட்டால், இவர்கள் எங்கே இருப்பார்கள்? 'யாருக்கு என்ன பதவி அளிப்பது?' என்ற விஷயத்தைப்பற்றிப் பேச நமக்கு வாய்ப்புக் கிடைப்பது சீர்திருத்தங்களால்தான். இங்கே நாம் முக்கியமாய் எடுத்துக்கொண்ட பொருளும் அதுவே. 'புரட்சிகளைப்பற்றிச் சிலர் பேசுகிறார்களே; என்ன செய்வது?' என்றால், புரட்சிதான் இந்தியாவுக்கு வராது என்று எல்லாருக்கும் தெரியுமே! புரட்சி எதற்காக

வரவேண்டும்? மாவோ-த்ஸே-டுங் இந்தியாவுக்கு வந்தால், அவரும் ஸ்ரீ அஜய் கோஷ் மாதிரிதான் பேசுவார். இந்தியாவில் புரட்சிக்காரர்கள் அப்படி மாறிவிடுகிறார்கள். பண்டிட்ஜி புரட்சிக்காரராக வந்தார். ஜயப்பிரகாஷ்ஜி புரட்சிக்காரராக வந்தார். எம். என். ராய் புரட்சிக்காரராக வந்தார். அவர்கள் எல்லாரும் இப்போது புரட்சி மறுப்பாளராக அமைந்து சௌக்கியமாயிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் பாய்களும் புரட்சிக்காரராகவே வந்தார்கள்; இப்போது அவர்கள் ஸ்ரீ அஜய் கோஷாகவோ புன்னேஸாகவோ இருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றி ஒன்றும் பரவாயில்லை.

அட, மறுபடியும் எதைப் பற்றியோ-அதுதான் புரட்சியைப் பற்றி - எழுதிக்கொண்டு போகிறேனே! ஸ்ரீ அசோக பாயின் கட்சிதான் தேர்தல்களிலே பெருந் தோல்வி அடைந்த கட்சி. அப்படியிருந்தும் புரட்சிகளின் காலம் மலையேறிவிட்டது என்று அவரே சொல்லுகிறார். கடவுள் கருணையால், புரட்சிகள் இந்தியாவில் தோன்று முன்பே மலையேறி விட்டன. அவை மலையேறிவிட்டதால் இப்போது அவைபற்றி நாம் பேசத் தேவையில்லை.

இனி முக்கிய விஷயத்தைக் கவனிப்போம்: யார் யார் 1 - ராஷ்டிரபதி, 2-உப ராஷ்டிரபதி, 3-பம்பாய் கவர்னர், 4 - உ. பி. கவர்னர், 5 - சென்னை கவர்னர், 6-ஒரிஸ்ஸா கவர்னர்? 7-ராஜ்குமாரி அமிர்தகௌர் என்ன ஆவது? 8-காகா காட்கில் இன்னும் சற்று உயர்ந்த பதவி பெறுவாரா? 9-அமோகமான ஓட்டுக்களால் பார்லிமெண்டு தேர்தலில் வெற்றி பெற்று வந்திருக்கும் உபாத்யாயஜிக்கு, அதமபட்சம் அயல் நாட்டு இலாகாவில் துணை மந்திரி பதவியாவது கிடைக்குமா? ஏனென்றால், இப்போது கேஸ்கர்ஜிதான் இன்னும் சற்றுப் பெரிய பதவி பெறத் தகுதி வாய்ந்தவரா யிருக்கிறாரே. 10 - ஷித்வாஜி இப்போதைய பதவியிலேயே தொடர்ந்து இருப்பாரா? அல்லது அவரை என்ன செய்வது என்று எவருக்குமே புரியாததால், ராஜாங்க உள் நாட்டிலாகா மந்திரி பதவியை அவர் பெற்றுவிடுவாரா? (பதினோராவது கேள்வி மிக மிக முக்கியமானது. இதனால் தான் அதைக் கடைசியாக வைத்துக்கொண்டோம்.) 11 - ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டுக்கு என்ன கிடைக்கும்? 12 - ராஜாஜியை லண்டனுக்கு அனுப்ப மாட்டார்களா? 13 - வி. கே. கிருஷ்ண மேனன் எங்கே போவார்? 14 - கே. எம். பணிக்கரை எந்த நாட்டுக்கு அனுப்புவார்கள்? இன்னும் எத்தனையோ கேள்விகள் இருக்கின்றன. முதலில் இவைகளுக்கு அதிகாரிகள் பதில் சொல்லட்டும். பொதுஜனங்கள் காத்திருக்கிறார்கள். இவைகளுக்குப் பதில் கிடைக்காவிட்டால், பத்திரிகைகள் சலிப்படைந்து, இடதுசாரி, புரட்சி என்ற விஷயங்களைப்பற்றியெல்லாம் பேசத் தொடங்கிவிடும்.

ராஷ்டிரபதி பதவிக்குச் சிறந்தவர் யார் என்பதுதான் ஏற்கனவே முடிவாகிவிட்டது. கா. கா. கமிட்டியின் கூட்டத்துக்குக்கூட ராஜாஜி வராததால் ராஷ்டிரபதி பதவிக்குப் போட்டி போட அவர் வரமாட்டார். ஆகவே, அந்த விஷயம் தீர்ந்தது. உபராஷ்டிரபதி விஷயந்தான் உண்மையான

ப்ரச்னே. கோர்ஜிக்கு நாம் வோட் செய்கிறோம். அவர் உபராஷ்டிரபதி பதவிக்கென்றே பிறந்தவர். பம்பாய் முதல் மந்திரி பதவியை இப்போது அவர் விரும்பாததால், உபராஷ்டிரபதி பதவியைவிரும்பக் கூடும். அதனால், கவர்னர் பதவியை எதிர்பார்ப்பவர்களின் எண்ணிக்கையிலும் ஒன்று குறையும்.

இனிக் கவர்னர்கள் விஷயத்தைக் கவனிக்கலாம். மோடி, பவநகர் இருவரும் ஏற்கனவே ரொம்ப ரொம்பத் தியாகம் செய்துவிட்டார்கள். எனவே, அவர்களை இன்னும் சிரமப்படுத்துவது சரியல்ல. அவர்கள் போகட்டும். அவர்களுடைய ஸ்தானங்களில் யார் யாரைப் போடுவது? மொரார்ஜி பாய் நல்ல கவர்னராயிருப்பார். மதுவை அண்ட விடமாட்டார். மெய்காப்பாளர் தங்கள் ராணுவ மது 'ரேஷ'னைக்கூடச் சண்டை போட்டு வாங்க நேரிடும். ஸ்ரீமதி பண்டிட் இனி அமெரிக்காவுக்குப் போக முடியாது. அவரோ பார்லிமெண்டுக்குள் நுழைந்துவிட்டார்; ஆகவே, மந்திரி சபைக்குள்ளும் நுழைந்தாக வேண்டும். ஏன் இரண்டு பெண் மந்திரிகள் வரக் கூடாது? கூடாதென்றால், ராஜ்குமாரி அமிர்தகௌரை என்ன செய்வது? அவர் வேண்டுமானால் ஒரிஸ்ஸா கவர்னராகப் போகட்டுமே. உபாத்யாயஜியைப்பற்றித் தான் நமக்குப் பெருங் கவலையாயிருக்கிறது.

கடவுள் படம்

ஒரு பெரிய புஸ்தகசாலையில் ஒரு சிறுமி உட்கார்ந்து பல வர்ணச் சாக்கட்டிகளை வைத்துக்கொண்டு, என்னவோ குறுக்கும் நெடுக்கும் கிறுக்கிக்கொண்டிருந்தாள். இதைப் பார்த்த ஒரு குமாஸ்தாவுக்குச் சங்கடமாயிருந்தது.

"என்னம்மா பண்ணுகிறாய்?" என்று சிறுமியைக் கேட்டார்.

"கடவுள் படம் வரைந்துகொண்டிருக்கிறேன்" என்று அவள் பதில் அளித்தாள்.

குமாஸ்தா ஆச்சரியம் அடைந்தவராய், "ஆனால், கடவுள் எவ்விதம் இருப்பார் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

"தெரியாது. அதற்காகவே அவர் படத்தை வரைந்துகொண்டிருக்கிறேன். அதைக் கண்டுபிடிக்க எனக்கு ஆசை."

—'க்வோட்'

கிழவரின் வியப்பு

ஒரு கிழவர் சொன்னார்: "இந்தக் காலத்து வாலிபர்களைப் பார்த்தால் எனக்கு வேடிக்கையாயிருக்கிறது. கலியாணம் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாய் வாழச் சொன்னால் அவர்கள் பயப்படுகிறார்கள். நான் கலியாணம் செய்துகொள்ளு முன்பு எனக்குப் பயமே ஏற்படவில்லை."

—'டீக்கெட்ஸ்'

ஓவியர் அவனீந்திரர்

மணீந்திர பூஷண்

சமீபத்தில் காலமான அவனீந்திரர், வங்காளத்தில் ஓவியக் கலைக்கு மறுமலர்ச்சி உண்டாக்கியவர். பெரும்புகழ் பெற்றவர். அவரைப்பற்றிய இந்த வரலாற்றை எழுதுகிறவர் அவருடைய சிஷ்யர்களுள் முக்கியமான ஒருவர். இவரும் ஓவியக் கலையில் பிரசித்தி பெற்றவரே.

அப்போது சாந்திநிகேதன் பிரம்மசரிய ஆசிரமத்தில் படித்துக்கொண்டிருந்தேன். பிரபல சிற்பியும் ஓவியருமான அஸித் ஹால்தார் எங்களுக்குச் சித்திரக் கலை போதித்து வந்தார். இவரும் நந்தலால் போஸும் அவனீந்திரநாதரின் சிஷ்யர்கள். அவனீந்திரருக்கு அஸித் ஹால்தார் கடிதம் எழுதும்போது என்னைப்பற்றிக் குறிப்பிடுவார். இப்படி எனக்கும் அவனீந்திரருக்கும் பழக்கம் ஏற்பட்டது. ஒரு சமயம் நான் எழுதிய ஒரு படத்தை அவருக்குத் தபாலில் அனுப்பினேன். இரண்டு நாள் கழித்துப் படம் திரும்பி வந்தது. அதன் பின்னால், 'தேவலை. படகை சீமை ரீதியில் ஏன் போட்டாய்?' என்று அவர் எழுதியிருந்தார்.

அப்போது அவர் கல்கத்தாவில் டாகுர் குடும்பத்துக்குச் சொந்தமான ஜோடாசாங்கோ மாளிகையில் இருந்து வந்தார். நாங்கள் மாசி மகத்தின்போது சாந்திநிகேதனத்திலிருந்து புறப்பட்டுக் கல்கத்தாவுக்குப் போவது வழக்கம். அப்போது அவனீந்திரர், 'இவர்கள் சிறுபிள்ளைகள் தானே; இவர்களோடு நமக்கென்ன வேலை?' என்று இருக்கமாட்டார்; வெகு சகஜமாகப் பழகுவார். சித்திரக் கலையில் யாருக்காவது உற்சாகம் இருப்பதாகத் தெரிந்தால் அவர்களுக்குப் பின்னும் அக்கறையோடு விஷயங்களைக் கற்றுக்கொடுப்பார்.

முதலில் அவர் மேல்நாட்டு ரீதியில்தான் சித்திரம் எழுதி வந்தார். பிரபல இத்தாலிய ஓவியரான சீஞர் கில்ஹார்டி என்பவரிடம் 'லைப் டிராயிங்' (வாழ்க்கையில் காண்பதை அப்படியே படமாக வரையும்) முறையைப் பழகிக் கொண்டார். 'வாட்டர்-கலர்' (ஜல வர்ண சித்திரம் தீட்டும்) முறையை ஆங்கில ஓவியரான மிஸ்டர் பாமர் என்பவரிடமிருந்து கற்றார். மேல்நாட்டு ஓவியர் வரிசையில் தம் பெயரும் விளங்கவேண்டும் என்று அவருக்கு ஆவல். அவருடைய குடும்ப லைப்ரெரியில் மொகல் காலத்துப் புத்தகம் ஒன்று இருந்தது. ஒரு நாள் தற்செயலாக அதைப் புரட்டிக்கொண்டிருந்தபோது அதில் உள்ள சித்திரங்களில் அற்புதமான வேலைப்பாடு அமைந்திருப்பதைக் கண்டார். அவருடைய வாழ்வில் அது முதல் பெரிய மாறு

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி), கல்கத்தா.



முதிர்ந்த வயதில்

தல் ஏற்பட்டது. புதிய உலகத்தையே கண்டுவிட்டதுபோல் மகிழ்ச்சி அடைந்தார். இந்தியக் கலை ரீதியில் அதுமுதல் சித்திரம் வரையத் தொடங்கினார். தாம் இப்படி முதல் முதல் எழுதிய 'கிருஷ்ண லீலா' படங்களை மிஸ்டர் பாமரிடம் காட்டினார். அவர், "இனிமேல் நான் சொல்லித் தருவதற்கு என்ன இருக்கிறது!" என்று ஆச்சரியப்பட்டு அவனீந்திரரைத் தட்டிக் கொடுத்தார்.

தென்னாட்டு ஓவியரான ராஜா ரவிவர்மா, அந்தக் காலத்தில் இந்திய ஓவியர்களில் தலை சிறந்து விளங்கினார். அவர் தம் கிழவயதில் ஒரு சமயம் கல்கத்தாவுக்கு வந்திருந்தார். முன்னாலேயே அவனீந்திரநாதரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால் அவரைக் கண்டு பேசி, "சரியான ஆசாமி. இந்த மாதிரி ஆர்வந்தான் இளம் பிள்ளைகளுக்கு இருக்கவேண்டும்" என்று பாராட்டினாராம்.

ஒரு சமயம் ஜோடாசாங்கோ மாளிகையில் நடந்த ஒரு விருந்தின் போது போஜன கூடத்தின் நடுவில் நான் வர்ணப்பொடியில் கோலம் தீட்டியிருந்தேன். அதைப் பார்த்ததும் அவருக்கு என்ன மகிழ்ச்சி தெரியுமா? "உன்னிடத்திலிருந்து இந்த வித்தையைக் கற்றுக்கொள்ளாமல் விடப்போவதில்லை" என்று தம் அறைக்கு அழைத்துக்கொண்டு போய்க் கோலம் போட்டுக் காட்டச் சொன்னார்.

கார்டில் சின்னச் சின்னதாகப் படம் வரைந்து தம் நண்பர்களுக்கும் மாணவர்களுக்கும் அனுப்புவார். ஒரு சமயம் நந்தலால் போஸ், "நான் சித்திரம் எழுதப் பழகியபோது அவனீந்திரர் அதிகமாக அதில் கை வைப்பதில்லை" என்று என்னிடம் சொன்னார். ஆயினும் 'வசந்தம்' என்ற படத்தை நந்தலால் வரையும்போது அவனீந்திரரே வர்ணம் தீட்டினாராம்.

நடிப்பதிலும் அவருக்கு மிகுந்த ஆர்வமுண்டு. ரவீந்திரர் எழுதிய 'பங்குனி' என்ற நாடகத்தில் ஒரு சமயம் அவர் குருவாகவும் நான் சிஷ்யனாகவும் நடித்தோம். முதல் முதலாக நடிக்கிறோமே, எப்படி இருக்குமோ என்று எனக்குத் திகில். பாதி ஆட்டத்தில் தாம் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்திருந்தபோது (குருவாக நடித்த) அவனீந்திரர் கவனமில்லாமல் தம் தர்ப்பாசனத்தைத் தாமே எடுத்துக் கொள்ளப்போனார். அப்போது சிஷ்யனான நான் வழக்கமாக அவரை அழைப்பது போலவே என்னை அறியாமல், "குருதேவ், நீங்கள் ஏன் எடுத்துக்கொண்டு

போக வேண்டும்? நான்தான் இருக்கிறேனே'' என்று சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி பேசி விட்டேன். அவருக்கு வெகு சந்தோஷம். மேடையிலிருந்து உள்ளே வந்ததும் 'சபாஷ்' என்று என்னைத் தட்டிக் கொடுத்து ஒரு பெரிய பொட்டலத்தை என் கையில் கொடுத்தார். அது நிறையச் சாக்கோலேட்!

நான் மெட்ரிகுலேஷன் தேறிய பின் டாக்கா காலேஜில் படிக்கப் போகிறேன் என்று கேட்டதும், "கல்கத்தாவில் இருந்துகொண்டே 'பிரைவேட்'டாகப் படி. சித்திரம் எழுத இன்னும் நன்றாகப் பழகலாம்'' என்றார். அப்போது அதில் எனக்கு அவ்வளவாக ஆர்வமில்லை. என்னவோ பிரமாதமாக இங்கிலீஷ் படிப்புப் படித்துவிட வேண்டுமென்று எண்ணம். ஆனால் பின்னால் சித்திரக் கலையிலேதான் ஈடுபட்டேன்.

ஒரு சமயம் அவர் மாணவர்களுக்குச் சிற்பக் கலையைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது இலங்கையிலே அநுராதபுரத்தில் உள்ள புத்தர் சிலையின் போட்டோ ஒன்றை எங்களுக்குக் காட்டி, "இதுதான் இந்தியச் சிற்ப ரீதிக்குச் சரியான உதாரணம்'' என்றார். பின்னால் இலங்கைக்குப் போயிருந்தபோது இந்தச் சிலையை நேரில் பார்த்தேன். குருதேவர் வர்ணித்தபடியே அதற்குச் சிங்க இடையும், யோகாசனமும், சுழிமுனை நோக்கும், ஒளிப் பிழம்பு போன்ற

பாலிய வயதில்

உடல் அமைப்பும் இருப்பதைக் கண்டு மெய்மறந்து நின்றேன்.

என் சித்திரங்களில் சொந்த மனோபாவம் குறைவாக இருப்பதையும் பலவித ரீதிகள் கலந்திருப்பதையும் பார்த்து அவர் ஒரு சமயம், "எத்தனையோ பூக்களிலிருந்து தேன் சேகரித்தாலும் உனக்கென்று தனிக் கூடு வேண்டாமா? அதைக் காணோமே!'' என்றார்.

கதை சொல்வதிலும் அவனீந்திரர் தேர்ந்தவர். சாந்திநிகேதனத்தில் இப்படி அவர் சொல்லும்போது குழந்தைகள் எவ்வளவு ஆவலோடு அதைக் கேட்பார்கள், தெரியுமா? குழந்தைகளுக்காக 'ராஜகாஹினி' (ராஜபுத்திரர் கதை), 'க்ஷீரேர் புதுல்' (பால் பதுமை) முதலிய கதைகளும், ரவீந்திரநாதரையும் சித்திரக் கலையையும்பற்றிச் சில நூல்களும் அவர் எழுதியிருக்கிறார்.

கார் அவசரம்

காரிலே சவாரி செய்யும் சிலர் அதிவேகமாக அடுத்த ஊருக்குப் போக விரும்பி, அடுத்த உலகத்துக்கே போய்ச் சேர்ந்துவிடுகிறார்கள்.

—எச். வி. ப்ரசன்னவ்

நத்தைகள் சங்கம்

ஜோனத்தான் ரூத்

★★★

‘என்னவோ நத்தை ஊர்வது மாதிரி ஊர்கிறானே!’ என்று ஒருவனைக் கேலி செய்வோம். ஆனால், அந்த நத்தைகளின் மாகாத்மியத்தைக் காணவும் உலகத்துக்கு உபதேசிக்கவும் ஒரு பெரிய சர்வதேசச் சங்கமே தோன்றி வளர்ந்து முடிந்த இந்த வரலாற்றைப் பாருங்கள். இது லண்டன் ‘எவ்வரிபடீஸ் வீக்லி’ என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

★★★

சமீபத்தில் பிரிட்டனில் ஒரு விசித்திரச் செய்தி பத்திரிகைகளில் இடம் பெற்றது. ‘மறுபடியும் நத்தைகள் தபால் பெட்டியைத் தாக்க ஆரம்பித்துவிட்டன’ என்பதுதான் அந்தச் செய்தி. வேல்ஸ் பிரதேசத்தில் உள்ள மெர்திர்மார் என்ற இடத்தில் இருக்கும் தபால் பெட்டியில் மூன்று நத்தைகள் தென்பட்டனவாம். பெரிய நத்தைப்படை ஒன்றைச் சேர்ந்தவையே இவை என்று சந்தேகிக்கிறார்கள்.

1946-ஆம் ௵ 9-ஆம் தேதி ஸாமர்ஸெட் பிரதேசத்தைச் சேர்ந்த வாட்செட் என்னும் இடத்தில் உள்ள ஒரு தபால் பெட்டிக்குள் இப்படித்தான் பல நத்தைகள் புகுந்தன. இதனால், பல பேருக்கு வந்த தபால் கடித உறைகள் மூளியாயிருந்தன. அவைகள்மீது தபால் அதிகாரிகள் ‘நத்தைகள் சாப்பிட்டுவிட்டன’ என்ற ஷராவை எழுதியிருந்தார்கள்.

இது நடந்த சில நாளைக்கெல்லாம், பிரெஞ்சு வட ஆப்பிரிக்காவில் ஒரு சம்பவம் நடந்தது. பல நத்தைகள் ஒரு தண்டவாளத்தில் படுத்து, பெரிய ரெயில்வண்டி ஒன்றையே நிறுத்திவிட்டன. இந்த நத்தைகளை விரட்ட, மேரிலாந்து கடற்கரையோரமுள்ள பல பெரிய சிப்பிகளை ஏவவேண்டியதாயிற்று.

கம்யூனிஸ்டுகளிடம் அநுதாபம் உள்ளவையோ என்னவோ தெரியவில்லை; பல பிரம்மாண்ட-மான நத்தைகள் ஒரு சமயம் திடீரென்று ஹாங்காங் நகருக்குள் தோன்றிச் சகல வண்டிப் போக்குவரத்தையும் தடுத்து நிறுத்திவிட்டன.

தெற்கு லண்டனைச் சேர்ந்த லாம்பெத் பகுதியில் ஒரு மனிதனின் தூக்கத்தை நத்தைகள் இரவெல்லாம் வந்து கெடுத்தனவாம். இதனால் தரை முழுவதும் உப்பைக் கொட்டிப் பரப்பிவிட்டே அவன் படுக்க நேர்ந்ததாம். இதற்காக அவன் வழக்கிட்டு, வீட்டு வாடகையைக் குறைத்துக்கொண்டான்.

இந்த நத்தை லீலைகளுக்கெல்லாம் காரணம் என்ன? மாஜி ஸிவில் ஸெர்வெண்டும் 1945-இல் ‘நத்தை பார்க்கும் சங்கம்’

ஒன்றைத் தொடங்கியவருமான மிஸ்டர் ஹென்னிக்கர் ஹீட்டன் என்பவர், "நத்தைகள் என்றுமே இப்படித்தான் செய்து வருகின்றன. ஆனால் என் சங்கம் தொடங்கிய பிறகே நத்தைகளைப் பற்றிய பிரக்ஞை எல்லாருக்கும் ஏற்பட்டிருக்கிறது" என்று சொல்கிறார்.

நத்தைகளைப் பார்த்து எத்தனையோ விஷயங்களை மனிதர்கள் கற்றுக்கொள்ளலாம் என்ற அபிப்பிராயம் திடீரென்று ஒரு நாள் அந்த மாஜி உத்தியோகஸ்தரின் மனத்தில் உதயமாயிற்று. அவர் சொல்கிறார்: "நத்தைகள் தங்கள் வீட்டைத் தங்கள் முதுகிலேயே சுமந்து செல்கின்றன. இதனால், அவை எந்த இடத்துக்குப் போனாலும், தங்கள் சொந்த வீட்டுக்குள்ளேயே சௌக்கியமாய்த் தங்குகின்றன; இந்தவிதமாக வீட்டுப் பிரச்னையைப் பரிபூர்ணமாய் அவை தீர்த்துக்கொண்டு விட்டன. கொஞ்சங்கூடப் பரபரப்பில்லாமல் வெகு நிதானமாய் ஊர்வதன் மூலம் நமக்கு அவை, நாம் எப்போது பார்த்தாலும் அதிவேகமாய் ஓடியாடி வேலை செய்துகொண்டிருப்பது அநாவசியம் என்று விளக்குகின்றன. ரெயில் தண்டவாளத்தில் அவைகள் படுத்து ரெயில் வண்டியையே தடைசெய்தது ஏன் தெரியுமா? 'இந்த யந்திரங்களால் தான் உலகத்தில் எதையெடுத்தாலும் அதிகாரிகள் குறுக்கிடுகிறார்கள்; வரவரச் சர்வாதிகாரிகளின் ஆட்சி வலுக்கிறது. யந்திரங்கள் இல்லாமல் இயற்கை வாழ்வு வாழ்வோரின் சுதந்தர பலத்துக்கு முன்னே இவையெல்லாம் வீணே' என்பதைக் காட்டத்தான்."

நத்தையின் நற்குணங்களை உலகத்தோருக்கு உபதேசம் செய்வது; அதன் பெருமையை நிலைநாட்டுவது; இலக்கியங்களில் நத்தையைப்பற்றிக் காணும் குறிப்புக்களையெல்லாம் திரட்டுவது; அதன் உள்ளத்தைத் தூண்டும் சங்கீதம் எது என்பதைக் கண்டுபிடிப்பது – இந்தக் காரியத்திலெல்லாம் தம் சங்க அங்கத்தினர்கள் ஈடுபட வேண்டும் என்று அவர் சொன்னார்.

சங்கத்துக்கு நிர்வாகிகளெல்லாம் நியமிக்கப் பெற்றார்கள். கௌரவ தர்மகர்த்தா, நூல் ஆராய்ந்து நத்தை விஷயங்களைச் சேகரிக்கும் நிபுணர், நத்தையின் சோட்டைத் தொடரும் சீமாட்டி, அயல்நாட்டு விஷயங்களையும் ராணுவ விஷயங்களையும் கவனிக்கும் பிரதானிகள் இவர்களெல்லாம் ஏற்பட்டார்கள். சீனாவிலிருந்து தகவல் அனுப்ப ஒரு நிருபர்கூட அமர்ந்துவிட்டார். நோட்டுப் புஸ்தகங்கள் அச்சிட்டார்கள். அவைகளின் தாள்களில் ஒவ்வொரு பக்கத்துத் தலைப்பிலும் நத்தையின் படமும் அதற்குக் கீழே 'ஸெம்பர் டோமி' என்ற லத்தீன் வாசகமும் பொறித்தார்கள். இந்த வாசகத்துக்கு, 'எந்நேரமும் வீட்டிலே' என்பது பொருள்.

நினைத்தவரெல்லாம் காசைக் கொடுத்துச் சங்கத்திலே அங்கத்தினராகச் சேர்ந்துவிடாதபடி நிர்வாகிகள் எச்சரிக்கை எடுத்துக்கொண்டார்கள். நத்தையின் வாழ்க்கையைத் தாமே கவனித்துப் புதுமையான தகவல்களைச் சேகரித்துச் சங்கத்துக்குத் தெரிவிப்பவர்மட்டுமே சங்கத்தில் சேரலாம் என்று விதி ஏற்படுத்திவிட்டார்கள். அங்கத்தினராய்ச் சேர விரும்பிய ஏராளமான அபேட்சகர்களின் மனுக்கள் வாரத்துக்கு வாரம் வந்து குவிந்தன. அவை

களில் பெரும் பகுதியும் இந்தப் பரீட்சையில் தோற்றுவிட்டதால், எத்தனையோ மனுக்களை ஹீட்டன் நிராகரிக்க நேர்ந்தது. என்றாலும், மெல்ல மெல்ல நத்தைபற்றி எண்ணற்ற தகவல்கள் காலக்கிரமத்தில் அவர் கைக்கு வந்து சேர்ந்தன.

நத்தைக்கு ஆயிரம் பல். வாசனை அறியும் சக்தி மிக உண்டு; 9 அடி தூரத்தில் உள்ள பொருள்களைக்கூட அது மோப்பம் பிடித்துவிடும். ஆனால், கண்பார்வை போதாது; கால் அங்குல தூரத்துக்கு அப்பால் உள்ள எதுவும் அதன் கண்ணுக்குத் தெரியாது. அதற்கு நீண்ட ஆயுள். ஒரே நத்தை அடிக்கடி ஆணாகவும் பெண்ணாகவும் மாறிக்கொண்டே இருக்கிறது. மணி ஒன்றுக்கு ·000363005 மைல் (அல்லது வருஷம் ஒன்றுக்கு 80 மைல்) விகித வேகத்தில் அது ஊர்கிறது. இந்தத் தகவல்களெல்லாம் ஹீட்டனுக்கு ஏற்கனவே தெரியும்.

இப்போது இன்னும் பல புதுப் புது விஷயங்களை அவர் கண்டுபிடித்திருக்கிறார். பொருட்காட்சிச் சாலையில் கண்ணாடிப் பெட்டிக்குள் காட்சிப் பொருளாக வைத்த சில நத்தைகள் 15 வருஷங் கழித்து மீண்டும் உயிர் பெற்றுவிட்டன. இங்கிலாந்தைச் சேர்ந்த ஸவுத் டவுன்ஸ் என்னும் இடத்தில் மழை பெய்தபோது மழைத்துளியோடு நத்தைகளும் வந்து விழுந்தன. இந்தியாவில் ஒரு காலத்தில் நத்தை ஓடுகளைக் கொண்டு ஒருவிதச் சங்கீதக் கருவி செய்தார்கள். இங்கிலாந்தில் மற்றோரிடமான நியூகாஸில் என்ற பிரதேசத்தில் கண்ணாடிவேலை செய்வோர், வருஷத்துக்கு ஒரு தடவை முன்பெல்லாம் நத்தை விருந்து சாப்பிடுவது வழக்கம்.

இம்மட்டுமா? இன்னும் பல விவரங்களையும் அவர் அறிந்துகொண்டார். ஒரு வகை நத்தைகள் மரத்தின்மீது மெல்ல மெல்ல ஏறி, பிறகு மரத்தின் பழுப்பு இலைகள் உதிரும்போது அவைகளில் சவாரி செய்துகொண்டு, பாரசூட் வீரர்களைப் போல் சட்டென்று தரையில் வந்து இறங்குகின்றன. ஜப்பானில் உள்ள ஒரு வகை நத்தைகளைப் பிரபுக்கள்தான் வளர்க்கலாம்; ஏழைகள் வளர்த்தால், அவர்களுக்கு அவை பல வித கஷ்டங்களை இழைத்துவிடும்.

இதையெல்லாம் கேட்டு, 'நத்தை பார்க்கும் சங்க'த்தினரெல்லாம் சோபாவில் படுத்த சோம்பேறிகளோ என்று நீங்கள் நினைத்துவிடாதீர்கள். சிறிதைப் பெரிதாகக் காட்டும் பூதக் கண்ணாடி, தூரதிருஷ்டிக் கண்ணாடி, நத்தை ஊரும் தடத்தைப் பின்பற்றிக் குறித்துக்கொள்ளுவதற்காகக் கட்டம் போட்ட காகிதங்கள் இந்தச் சாதனங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, கோடைக் காலத்தில் ஊரும் நத்தைகளைத் தேடிக் கண்டு பிடித்து, மூச்சைப் பிடித்துக்கொண்டு அவைகளை அவர்கள் ஆராய்ந்தார்கள். பிரிட்டனில் இப்படி நத்தை பார்த்துக்கொண்டிருந்த ஒருவரிடம் ஒரு பொழுதுபோக்காகத் 'தபால் தலைகள்' பரிமாறிக்கொள்ள விரும்பி ஓர் அமெரிக்கர் கடிதம் எழுதினார். உடனே ஹீட்டன், "நத்தை பார்க்கும் எவரும் தங்கள் முதற் கடமையான வேலையை விட்டு, வேறு விஷயத்தில் துளியும் கவனம்

செலுத்த நான் இடங்கொடேன்'' என்று கண்டித்துவிட்டார்.

நத்தைகளின் செவிப் புலனைச் சோதிப்பதற்காக, சங்கத்தின் சங்கீத வித்துவான் ஒருவர், ஹார்ப் என்ற நரம்புக் கருவி ஒன்றை வாசித்து நத்தைகளுக்கு ஒரு சங்கீதக் கச்சேரி நடத்தினர். இதைக் கேட்டு அவை உள்ளங் குழைந்ததாகத் தென்படவில்லை.

நத்தைச் சங்கத்தின் நடவடிக்கைகளையெல்லாம் பத்திரிகைகளும் தங்கள் கடமையில் பிறழாமல் அவ்வப்போது செவ்வனே வெளியிட்டு வந்தன. 'லண்டன் டைம்ஸ்' என்ற தலை சிறந்த தினசரிப் பத்திரிகை, 'பொழுது போக்காக நத்தை பார்ப்பதன் நன்மைகள்' என்பதுபற்றி ஒரு தலையங்கமே எழுதியது. "நத்தை பார்க்கும் வேலை பிரிட்டிஷாரின் குணத்தைக் கெடுக்கிறதா?'' என்று கேட்டது ஒரு பத்திரிகை. ஸோவியத் நாட்டின் 'பிராவ்டா' பத்திரிகையைச் சேர்ந்த இல்யா எஹ்ரென்பர்க் என்பவர், "லண்டனில் நத்தை பார்க்கும் கனவான்களெல்லாம் விஸ்கீ குடிப்பவர்கள்; மனஞ் சலித்துப் போனவர்கள். குஷியே இல்லாமல் ஒரேவிதமாய்ப் பொழுது போக்கிக்கொண்டிருப்பவர்கள்'' என்று மாஸ்கோ ரேடியோவில் கூச்சலிட்டார். "இல்லை, இல்லை. நத்தை பார்ப்பதற்குத் தெளிந்த புத்தியும் கூர்ந்த கண்ணும் வேண்டும். நத்தை பார்க்கும் எவரும் தங்கள் கடமையைச் செய்துகொண்டிருக்கும்போது விஸ்கீ குடிப்பது பற்றிக் கனவிலும் கருதார்'' என்று தட்சணமே ஹீட்டன் பதில் கொடுத்தார்.

பிரிட்டனில் உயிரோடு பிடிபட்ட நத்தைகளுக்குள்ளே மிகப் பெரியது மூன்றடி நீளம் இருந்தது. பெர்க்ஷயர் பிஷப் ஏற்பாடு செய்த தர்மசகாயக் காட்சியில் அதைக் காட்டினர்கள். அமெரிக்காவில் வர வர அதிகமான மக்கள், நத்தைகளை வீட்டிலே வைத்துச் செல்லமாக வளர்க்கிறார்களாம். நத்தை எந்தச் சாமான்மீதும் துளி மயிர் கிடக்க விடுவதில்லை என்றும், அற்பச் சந்தடிகூடச் செய்வதில்லை என்றும் அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். நத்தை ரேஸ் ஒன்றை, லண்டனில் நடத்தத் தொடங்கினர்கள். ஓர் அங்குல உயரமுள்ள மண்முட்டு ஒன்றை நத்தைகள் தாண்டவேண்டும் என்பது ஏற்பாடு. இந்த நத்தை ரேஸுக்கு விண்ட்ஸர் என்ற இடத்திலிருந்து சில நத்தைகளை அனுப்பினர்கள். "நத்தை ஓட்டப் பந்தயமா! இது நத்தை ஆராய்ச்சிக் கொள்கைக்கே நேர் முரண்பாடாயிருக்கிறதே!'' என்று ஆட்சேபித்தார் நத்தைச் சங்க அங்கத்தினர் ஒருவர்.

நத்தைகளைப்பற்றியே எங்கே பார்த்தாலும் பேச்சு. ஹீட்டன் சொன்ன ஒவ்வொரு சொல்லும், நத்தை ஊர்ந்த ஒவ்வோர் அசைவும் தஸ்தாவேஜில் ஏறின. நத்தைக்கு நியாயமாய்க் கிடைக்க வேண்டிய பெருமை கிடைத்துவிட்டது. சங்கத்தின் குறிக்கோள் நிறைவேறி விட்டது. ஆகவே, 1947-ஆம் ஞு ஆகஸ்டு மீ இங்கிலாந்தைச் சேர்ந்த பெர்க்ஷயர் என்ற பிரதேசத்தில் யாட்டென்டன் என்னும் இடத்தில் நடந்த ஒரு 'டீ-பார்ட்டி'யோடு நத்தைச் சங்கம் வெற்றிகரமாகக் கலைந்தது. சங்க அக்கிராசனர் தம் காரியாலய நத்தை ஓட்டுச் சங்கிலியைப் பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலைக்குக் கொடுத்துவிட்டார். நத்

தைச் சங்கங்களின் சர்வதேச பெடரேஷன் செக்ரெட்டரி - ஜெனரல் என்ற பதவியை வகித்த ஹீட்டன் அதைத் துறந்துவிட்டு, அகில கிரகங்களின் சங்கம் (இன்டர்-பிளானட்டரி ஸொஸைட்டி) என்பதில் சேர்ந்துகொண்டார். இதர கிரகங்களில் நத்தைகள் வாழ்ந்தால் அதை முதல்முதலில் தாமே கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆசையாயிருக்கலாம் ஒருகால்!

சங்கம் கலைந்த செய்தியைக் கேட்ட எவருக்கும் அதை நம்பவே முடியவில்லை. அவர்கள் வயிற்றிலே நெருப்பைக் கொட்டியதுபோல் இருந்தது. நேர்த்தியான ஒன்று - அழகான ஒரு கலை-போய்விட்டதே என்று பலர் வருத்தப்பட்டார்கள். நத்தை பார்க்கப் போவதாகச் சாக்குச் சொல்லிக்கொண்டு இரவெல்லாம் ஊர் சுற்றிய பல கணவன்மார், தங்கள் வீட்டுக்குள்ளே முகம் வாடி உட்கார்ந்திருக்க வேண்டியதாயிற்று. 'இல்வாழ்க்கையிலே கணவன், மனைவி இரண்டு பேருக்கும் பொதுவாய் இன்பம் தரக்கூடிய ஒரு பொழுதுபோக்குப் போய்விட்டதே!' என்று தென்னாப்பிரிக்கப் பத்திரிகை ஒன்று துக்கப்பட்டது.

உலகெங்கும் இருந்து நத்தை அன்பர்களின் கடிதங்கள் ஏராளமாய் இன்னமும் ஹீட்டனுக்கு வந்துகொண்டேயிருந்தன. யாத்திரிகர்களின் சகாயத்துக்காக ஏற்பட்டுள்ள பிரிட்டிஷ் சங்கம், பிரிட்டனில் நத்தை பார்த்து உல்லாசமாய்ப் பொழுது போக்க விரும்புவோருக்கு உதவியாக ஒரு புஸ்தகம் வெளியிட்டது. பிரிட்டிஷ் உல்லாச விழாவின்போது, நத்தைச் சங்கத்தின் பல பொருள்களையும் ஓரிடத்தில் காட்சியாக வைத்தார்கள்.

ஏதோ சில சமயம் தபால்பெட்டிகளுக்குள் நத்தைகள் பிரத்தியட்சமானால், ஒன்றும் பிரமாதமில்லை. ஆனால் தபால் காகிதத்தைக் கடித்துக் கடித்துச் சலித்துப் போன நத்தைகள், அதை விட்டுத் தபால் சிப்பந்திகள்மீது பாய்ந்துவிட்டால் என்ன செய்வது? இதற்கு ஈடாக அந்தச் சிப்பந்திகளுக்கு அபாயப் படி கொடுக்க வேண்டும் என்று ஒரு சமயம் ஒரு பத்திரிகை எழுதியது. தபால் சிப்பந்திகளுக்கா இதைச் சமாளிக்கத் தெரியாது! வாட்சட் என்ற இடத்துப் போஸ்ட்-மாஸ்டர் செய்ததுமாதிரி அவர்கள் செய்துவிட்டுப் போகிறார்கள். அந்தப் போஸ்ட்-மாஸ்டரின் தபால் பெட்டியை 1946-இல் சில நத்தைகள் படையெடுத்தன. உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா? ஒரு காகிதத்தை எடுத்தார். 'இனி நத்தைகள் இந்தப் பெட்டிக்குள் பிரவேசிக்கக்கூடாது என்று தடை விதிக்கிறோம்' என்று ஒரு நோட்டீஸ் எழுதினார். அதை அந்தப் பெட்டியின் மேலே பளிச்சென்று தெரியும்படி ஒட்டிவிட்டார்; அவ்வளவுதான்.

மெதுவாய் நடப்பது எப்போது?

"ஏன் தம்பி, ரொம்ப மெதுவாய் நடக்கிறாய்?" என்று பக்கத்து வீட்டுப் பையனைக் கேட்டேன்.

"ஏனென்றால் பள்ளிக்கூடம் போகிறேன்" என்றான் பையன்.

—'நியூயார்க் டெய்லி நியூஸ்'

மலேயாக் குழப்பம்

★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மலேயாவில் நடப்பது சுதந்தரக் கிளர்ச்சி என்று சில பேர் சொல்லுகிறார்கள்; இல்லை, அது கம்யூனிஸ்ட் கலகம் என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். பொதுவாகச் சொன்னால், அங்கே ஆங்கிலத் தோட்டக்காரருக்கு விரோதமாகக் கலகம் நடப்பது மட்டும் உண்மை. இந்த நிலைமையை விளக்குவது இது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மலேயாவில் நாலைந்து வருஷமாக நிலைமை குழப்பமாகவே இருந்து வருகிறது. சென்ற மகா யுத்தத்தில் பிரிட்டிஷார் கையை விட்டு ஜப்பானியர் கைக்கு மாறிய மலேயா மறுபடியும் பிரிட்டிஷார் கைக்கே வந்துவிட்டது. மலேயாவின் உண்மை நிலை இதுதான்: மலேயாக் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்ட கலகக்காரர்களில் முக்கால் வாசிப் பேருக்குமேல் சீனர்கள் தான். இவர்களில் சுமார் 5,000 பேர் கையில் துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் சிக்கியிருக்கின்றன. இவர்கள் தான் இந்தப் போரை மறைவில் இருந்தபடி நடத்துகிறார்கள். இவர்களுக்குக் கீழ்ப் பலபேர் கட்டுப்பாடாக இருந்து பலவித அலுவல்களைச் செய்து வருகிறார்கள். ஆயினும் இவர்களின் தலைமை ஸ்தானம் எது என்றுதான் இன்னும் தெரியவில்லை. அது சிங்கப்பூரில் இருக்கிறதோ, கோலாலம்பூரில் இருக்கிறதோ நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆனால் இந்தக் கூட்டத்தின் தலைவன் அநேகம் பேருக்குத் தெரிந்த ஆசாமிதான். சென்ற உலக மகா யுத்தத்தில் அவன் ஜப்பானுக்கு எதிராகப் போரிட்டுப் பின்னால் லண்டனில் நடந்த வெற்றி அணிவகுப்பிலும் கலந்துகொண்டவன்.

மின் யுவன் என்ற ஸ்தாபனந்தான் இந்தக் கலவரத்துக்கே மூலகாரணமாக இருக்கிறது. சுமார் 1,00,000 பேராவது இதில் அங்கத்தினர்களாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. காட்டு வழியாகப் போகும் கார், ரோந்துப் படை இவைகளைச் சுட்டும், ரப்பர்த் தோட்ட முதலாளிகளைக் கொன்றும் கலவரம் செய்யும் கலகக்காரர்களைவிட, ஆயுதமின்றியே அவர்களுக்கு உளவறிந்து சொல்லும் மின் யுவன் அங்கத்தினர்களால் தான் மலேயாவுக்கு ஆபத்து அதிகம். அதிகாரிகள் டெலிபோனிலோ தங்கள் வேலையாளிடமோ பேசும் போது ஜாக்கிரதையாகப் பேச வேண்டியிருக்கிறது. டெலிபோன் ஆபரேட்டரோ, அந்த வேலையாளோகூட மின் யுவனைச் சேர்ந்தவனாக இருக்கலாம்!

மலேயாவிலுள்ள காடுகளில் லேசில் நுழைய முடியாது. இதனால் காட்டுப் பிரதேசத்தில் இருக்கும்

கலகக்காரத் தலைவர்களை மலேயா போலீஸாரோ பிரிட்டிஷ் கூர்க்கப் படைகளோ போய்த் தாக்கினாலும் அவர்கள் சமாளித்துவிடுகிறார்கள். அந்தக் காடுகளில் 20 அடிக்கு அப்பால் என்ன இருக்கிறது என்று தெரியாது; அவ்வளவு அடர்த்தி. அதோடு மலைச்சாரல் பக்கம்; எப்போதும் மழை பெய்துகொண்டிருப்பதால் சதசதப்பாகவே இருக்கும். சற்று நின்றால் போதும்; பூட்ஸுக்குள் அட்டைப் பூச்சி ஒட்டிக் கொண்டுவிடும்; சருகுகள் அழுகும் நாற்றம் மூக்கைத் துளைக்கும்.

ரப்பர், தகரம் இந்த இரண்டுக்கும் பேர்போனது மலேயா. தகரச் சுரங்கங்களைப் பாதுகாத்துவிடலாம். அது ஒன்றும் சிரமமில்லை. ரப்பர்த் தோட்டக்காரர் பாடுதான் ஆபத்து. ஏற்கனவே ஜப்பானியரிடம் கைதியாக இருந்த ஒரு தோட்டக்காரர் எதிர்காலத்திலாவது நிம்மதியாக இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருப்பார். ஆனால் இப்போதோ வீட்டைச் சுற்றி முள்கம்பி வேலி நட்டு இரவெல்லாம் அக்கம் பக்கத்தில் 'ஸர்ச்-லைட்' போட்டுப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. டெலிபோன் கம்பி அறுபடாதிருக்கிறதா என்று முன் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். அவர் சீனக் கடைக்காரனிடம் ரப்பரை விற்கிறார். அவனேகூடக் கலகக்காரருக்கு அவர் எங்கே போகிறார், எங்கே வருகிறார் என்று உளவு தெரிவிக்கலாம். காட்டு வழியாகத் திரும்பும்போது என்ன நேருமோ யார் கண்டார்கள்? வீட்டுக்கு வந்தாலும் கலகக்காரர் வந்து கொல்லமாட்டார்கள் என்று என்ன நிச்சயம்? இப்படி இருக்கிறது ரப்பர்த் தோட்டக்காரரின் நிலைமை.

இதையெல்லாம் நேரில் பார்த்து வந்த கிரஹாம் கிரீன் என்ற அமெரிக்கர், 'லைஃப்' என்ற பத்திரிகையில், "கூர்க்கர்கள் கூலிப் படைகள்தான்; என்றாலும் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள். அதனால் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளுக்கு அவர்களிடத்தில் தனிப் பாசம். பிரிட்டிஷ் அதிகாரி ஒருவன் தலைமையில் 14 கூர்க்கர்கள் ஒரு சமயம் கலகக்காரர் பதுங்கியிருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்கப் புறப்பட்டார்கள். அவர்களோடு நானும் போயிருந்தேன். காடு, மலை குறுக்கே இருந்தாலும் கூர்க்கர்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. குறுக்காகப் பாய்ந்து விடுவார்கள். 'இரண்டொரு நாளில் பல பாதைகள் தட்டுப்படும். அவைகளில் ஏதாவது ஒரு சிறு புலன் கிடைத்தாலும் கிடைக்கலாம்' என்பதற்காகத்தான் இப்படிச் செய்கிறார்கள். இப்படிச் சிரமப்பட்டும் சிலசமயம் கலகக்காரர் விட்டுப் போன முகாம் முதலிய சில அடையாளங்கள் மட்டுந்தான் இருக்கும். ஆனாலும் புதிதாக ஓர் இடத்தைத் தெரிந்துகொண்டது நல்லது தானே?

"இங்கே ராணுவ பலத்தால் ஒன்றும் சாதித்துவிட முடியாது. வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். காட்டிலே வசிப்பவர்களாக இருந்தாலும் சாப்பிடாமல் யாராலும் இருக்கமுடியாது. காட்டு எல்லையில் காட்டிலாகாவுக்குத் தெரியாமல் சில சீனக் குடியானவர்கள் பயிரிடுவது வழக்கம். இவர்களுக்குக் கம்யூனிஸ்டுகளிடம் அநுதாபம் இருக்கும் என்று சொல்ல முடியாவிட்டாலும் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினால் யார்தான் பயந்து சோறுபோட

மாட்டார்கள்? இதற்காகத்தான் இப்போது ராணுவ அலுவல்களை அங்கே கவனித்து வரும் ஸர் ஹெரால்டு பிரிக்ஸ் என்பவர் ஆகாயவிமானத்தின் மூலம் இந்த மாதிரி இடங்களைச் சுலபமாகக் கண்டு பிடித்து அங்கங்கே உள்ள குடியானவர்களுக்கு நில உரிமையும் பாதுகாப்பும் அளிப்பதென்று திட்டமிட்டிருக்கிறார். 'இப்படி 4,00,000 பேர் இருக்கிறார்களே. இவர்களைப் பாதுகாக்க அத்தனை போலீஸ் படைக்கு எங்கே போவது? இந்த அளவுக்கு முள் கம்பி முதலியவைதான் எப்படிக் கிடைக்கும்? ஒரு சமயம் இந்த மாதிரி ஒரு கிராமத்தின் வழியாகக் கம்யூனிஸ்டுகள் பட்டப் பகலில் 2 மணிக்குப் போனார்கள். அவர்களை யாரும் தடுக்கவேயில்லை' என்று சில ஐரோப்பியர் தயங்குகிறார்கள்.

"மலேயாவில் பாதிப்பேர் சீனர்கள்தான். எப்படியாவது பணம் சம்பாதித்தால் போதும் என்ற மனப்பான்மை படைத்தவர்கள் இவர்கள். அங்குள்ள சீனக்கார பஸ் முதலாளிகள் சில சமயம் கம்யூனிஸ்டுகளுக்கு வாய்க்கிரை போட்டுவிடுவது வழக்கம். ரப்பர்த் தோட்டத்தில் வேலை செய்யும் கூலிகளாக இருந்தால் கூலியில் ஒரு பங்கைக் கம்யூனிஸ்டுகளிடம் கொடுத்துவிடுகிறார்கள். மலேயாவிலுள்ள சில பிரபல சீன வியாபாரிகள் அவ்வப்போது கம்யூனிஸ்டுகளுக்குப் பணம் கொடுத்து வருவதாகவும் தெரிகிறது. பாட்டையில் பாராக் கொடுக்கும் மலேயா போலீஸ்காரனை அக்கறையோடு சோதனை போடமாட்டான். இருந்தாலும் பிரிக்ஸ் சொல்லியபடி செய்தால் நாளடைவில் பயன் ஏற்படலாம். கலகக்காரர்கள் காட்டில் சோறு தண்ணீர் இல்லாமல் எத்தனை நாள் இருக்க முடியும்? அவர்களும் மனிதர்கள் தானே? இன்னும் ஆறு மாதம் அல்லது ஒரு வருஷத்தில் கொரியாவில் மேற்கத்தி வல்லரசுகள் தோற்றுவிடும்; அப்போது தங்களுக்குப் பக்க பலம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது" என்கிறார்.

தங்கள் கையில் சிக்கிமாண்ட சில கலகக்காரர்களின் முகத்தைப் படம் எடுத்து வெளியிட்டு, 'இனிமேலாவது பணிந்து விடுங்கள்' என்ற துண்டுப் பிரசுரங்களைப் பல இடங்களில் விமானத்திலிருந்து பிரிட்டிஷார் போட்டார்கள். அவைகளில் பெரும்பாலும் வீணாயின. இருந்தாலும் சிறிது பலன் ஏற்படாமற் போகவில்லை; ஏதோ சில கலகக்காரர் காட்டிலிருந்து திரும்பி வந்தார்கள்.

"காட்டிலுள்ள கம்யூனிஸ்டுகளைப் பட்டினி போட்டு இப்படிப் பணியவைத்துவிட்டாலும் அந்தக் கொள்கை எப்படிப் போய்விடும் என்பதுதான் பணக்காரரின் கவலை. கம்யூனிஸம் வந்தால் ஏழைகளுக்கும் எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கும் ஒன்றும் முழுகிப் போய்விடாது. ஆயினும், இந்தோ-சீனாவில் ஏழை பணக்காரர் என்ற வேறுபாடில்லாமல் கிறிஸ்துவ மக்கள் ஒரே லட்சியத்துடன் கம்யூனிஸக் கொள்கையை எதிர்க்கிறார்கள். மதப் பற்றுடன் தேச பக்தியும் அவர்களுக்கு இருக்கிறது. மலேயாக்காரரும் இதே மாதிரி ஏன் செய்து காட்டக் கூடாது? கருத்தைக் கொண்டுதான் கருத்தை வெல்ல முடியும்" என்கிறார் கிரீன்.

ஐம்பதாயிரம் எழுத்துக்களைக் கொண்ட அதிசய பாஷை

சீன மொழி

வி. ஜி. நாயர்

சீனமொழிக்கும் இந்திய அல்லது ஐரோப்பிய மொழிகளுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு. சீன மொழியில் தனியாக எழுத்து என்று ஒன்றும் கிடையாது; ஒவ்வொரு பதமும் அதில் ஓர் எழுத்தாகும். சித்திரக் கோடுகளே பின்னால் இப்படி எழுத்தாக மாறின. இப்படி மொத்தம் 50,000 சித்திர எழுத்துக்கள் சீன மொழியில் இருக்கின்றன. "இவ்வளவையும் எழுதப் படிக்கத் தெரிந்த அறிவாளிகள் சீனாவிலேயே இன்று ஏழுபேர்தான் இருக்கிறார்கள்" என்கிறார் பிரபல சீன அறிஞரான லின் யு-டாங். பழைய சீன நூல்களில் இந்த மாதிரி சுமார் 5,000 சித்திர எழுத்துக்கள் உண்டு. இப்போது சீனாவில் எட்டு அல்லது ஒன்பதாயிரம் எழுத்துக்கள் பொது வழக்கில் இருந்து வருகின்றன. அச்சுக்கூடங்களில் இப்படி 6,000 எழுத்துக்களே உபயோகப்படுகின்றன. பொதுவாக 4,000 எழுத்துக்கள் தெரிந்தால் சிரமம் இல்லாமல் சீனப் பத்திரிகைகளைப் படித்துவிடலாம். இவைகளுள் ஒவ்வொன்றும் நேரசை எழுத்துக்கள். சீன மக்கள் பேசுவதற்கும் எழுதுவதற்கும் வித்தியாசம் அதிகம். மண்டாரின் அல்லது குவான்-ஹுவா என்ற பேச்சு வழக்கை முதல் முதலில் பீக்கிங் நகரிலுள்ள அதிகாரிகள் வழங்கி வந்தார்கள். இதை ஒரு வரையறைப்படுத்தி, குவோ-யூ அல்லது தேசிய பாஷை என்று பின்னால் வழங்கினார்கள். இப்போது சீனாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எல்லாரும் இதைச் சகஜமாகப் புரிந்துகொண்டு பேசி வருகிறார்கள்.

சீனாவை ஆறு பாஷாவாரிப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம். இவைகளில் மொத்தம் 70 விதமான பேச்சு வழக்கு இருப்பதைக் காணலாம். சீனாவில் முக்கால்வாசிப் பகுதியில் மண்டாரின் பேசுகிறார்கள். வடக்கே வழங்கி வந்த மண்டாரின் பாஷையில் பீக்கிங் பேச்சு, நான்கிங் பேச்சு என்ற இரண்டு கிளைகள் உண்டு. இந்த இரண்டுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. ஆனால் பீக்கிங் பேச்சுக்கும் காண்டன் பேச்சுக்கும் உள்ள வித்தியாசம் இங்கிலீஷுக்கும் டச்சுக்கும் இத்தாலிய மொழிக்கும் ஸ்பானிஷ் மொழிக்கும் இருப்பதுபோல் மிக அதிகம். எல்லாம் ஒரு பொது மொழியிலிருந்துதான் தோன்றியிருக்கின்றன; எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரி எழுத்துத்தான். முதல் முதல் சீன மொழியில் 600 அடையாள எழுத்துக்கள் இருந்தன. இவைதான் அடிப்படை எழுத்துக்கள். இவற்றில் 214 எழுத்துக்களைத் 'தீவிர' எழுத்துக்கள் (Radicals) என்கிறார்கள்; அதாவது, இன்று வழங்

காப்பிரைட்: திரிவேணி (ஆங்கிலம்: ஜனவரி '52), மசூலிப்பட்டணம்.

கும் சீன மொழிக்கு இவை மிக மிக அவசியமானவை. ஒவ்வொரு பதத்துக்கும் கருத்துக்கும் தனித்தனி அடையாளம் உண்டு. சிற்சில விசேஷச் சொற்களைக் குறிக்க இன்னும் சில அடையாளங்களைச் சேர்த்து இவற்றைச் சீர்திருத்தி வந்தார்கள். பொதுவாக ஒலி வேறுபாட்டைக் குறிக்க இந்த மாறுதல்கள் ஏற்பட்டன.

சீனவில் கி. பி. 16-ஆம் நூற்றூண்டில் கிறிஸ்துவப் பாதிரிமார் மதப் பிரசாரம் செய்ய வந்தார்கள். சீன மொழியைக் கற்றுக்கொள்வது மிகவும் சிரமமாக இருக்கவே ரோமன் லிபியில் அதை எழுதத் தொடங்கினர்கள். முதலில் சீன அறிஞர்களில் சிலருக்கு இது பிடிக்கவில்லை. ஆனலும் அநேகம் பேர் இதில் சிரத்தை காட்டினர்கள். நாளடைவில் சீன அறிஞர்களே நாடு முழுதும் இதற்கு ஆதரவு தேட இயக்கம் ஒன்று ஆரம்பித்தார்கள். ஐரோப்பியர்களும் இதில் ஈடுபட்டு உழைத்தார்கள். 1943-இல் அமெரிக்கப் புரொபஸரான கென்னடி என்பவர் 'யேல்' முறையை வழக்கில் கொண்டு வந்தார். அதற்கு முன் இருந்தது 'வேடு' முறை. ஆனலும் சீன லிபியையே தனியாகக் கற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். ஏனென்றல், சீன இலக்கியமே அதில்தான் இருக்கிறது.

எவ்வளவு கஷ்டமான பாஷையையும் பழகப் பழகச் சுலபமாகக் கற்றுக்கொண்டு விடலாம். ஆனல் அதை முறை தெரிந்து கற்றுக் கொடுக்க வேண்டும்; கற்றுக் கொடுப்பவனுக்குத் திறமை, கற்றுக்கொள்பவனுக்குச் சிரத்தை இரண்டும் வேண்டும். பயிற்சி பெற்ற ஆசிரியரிடம், பீக்கிங் பேச்சில் உள்ள 5,000 எழுத்துக்களையும் உச்சரிப்புத் தவருமல் கற்றுக்கொள்வதற்குச் சுமார் 15 வருஷ காலமாவது ஆகும். எல்லா எழுத்துக்களையும் கசடறக் கற்பதென்றல் நிச்சயமாக 25 வருஷம் பிடிக்கும். ஒரு சீனக்காரன் இப்படித் தன் சொந்த பாஷையைக் கற்பதற்குள் இந்தியன் ஒருவன் வெகு சுலபமாக நம் நாட்டில் வழங்கும் எல்லா மொழிகளையும் கற்றுக் கொண்டு விட முடியும்!

சீன சரித்திரம், மதம், இலக்கியம், அரசியல், சமூகம், மொழி இவை சம்பந்தமாக ஆங்கிலத்திலே சீன அறிஞர்களும் ஐரோப்பியரும் பல நூல்கள் எழுதியிருக்கிறர்கள். இவைகளை ஒழுங்காகப் படித்து முடிப்பதற்குப் பத்து வருஷகாலமாவது ஆகும். அதோடு சீன எழுத்திலும் மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்தால் மூலத்திலேயே படித்து விஷயங்களை நன்றக அறிந்து கொள்ளலாம்.

கைல்ஸ், பிராண்ட், ராக்கில், கார்ல்கிரென், பீல், வாட்டர்ஸ் போன்ற ஐரோப்பிய அறிஞர்கள் சீனமொழி சம்பந்தமாக மிகவும் அக்கறையோடு ஆராய்ந்து பல அரிய விஷயங்களை வெளியிட்டார்கள். அதனல்தான் பழைய சீன நாகரிகம், கலாசாரம் இவற்றின் மேன்மையை நாம் உணர முடிந்தது. மேல்நாட்டில் படித்துவிட்டுத் திரும்பிய சீனர்களும் இந்தத் துறையில் ஈடுபட்டு உழைத்தார்கள். நமக்கும் சீனவுக்கும் 2,000 ஆண்டுகளாகக் கலாசாரத் தொடர்பு இருந்தும், சீன மொழியில் தேர்ச்சி பெற்ற இந்தியர் ஒருவர்கூட இப்போது இல்லை என்றல் பாருங்கள்! இப்போதுதான் ஏதோ சில பேர் இந்த

ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சீன மொழியிலும் லிபியிலும் ஓரளவு தேர்ச்சி பெறவே வருஷக்கணக்காகும்! இந்திய சர்க்கார் சீனுவுக்குச் சில மாணவர்களை அனுப்பிவைத்தார்கள். அவர்கள் 'யேல்' முறையில் சீன மொழியைக் கற்றுக்கொண்டு இரண்டு வருஷத்தில் திரும்பி வந்துவிட்டார்கள். ஆதி காலத்தில் சீனுவுக்குப் போயிருந்த பிட்சுக்கள் பலர் சீன மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். வடமொழியிலுள்ள மகாயான பௌத்த நூல்களை அவர்கள் சீனத்தில் மொழிபெயர்த்தார்கள். அந்நியரின் படையெடுப்பாலும் காலப் போக்கிலும் நம் நாட்டில் இருந்த அவற்றின் வடமொழி மூலங்கள் காணமற் போய்விட்டன.

சீனுவில் குடியரசு ஸ்தாபிதமான போது டாக்டர் ஹூ ஷி, மிஸ்டர் ஜேம்ஸ் யென் என்ற இரண்டு சீன அறிஞர்கள் சீன மொழியைச் சீர்திருத்தி அமைக்கப் பெரிதும் பாடுபட்டார்கள். 'பாய் - ஹூவா' என்ற பேச்சு வழக்கை ஆதரித்து அதையே இலக்கியத்துக்கும் உரை நடைக்கும் பொதுவாகப் பயன் படுத்த வேண்டும் என்று அவர் பிரசாரம் செய்து வந்தார். சீனுவில் எழுத்து வழக்கு ஒன்றே என்றாலும், இலக்கிய நடை என்றும், சாதாரண வசன நடை என்றும் இரண்டு நடைகள் வழக்கில் இருந்தன. பெரும்பாலான மக்களுக்கு எழுத்தறிவூட்டப் 'பாய் - ஹூவா' மிகவும் பயன்படும் என்று அதை ஆதரித்தவர்கள் பிரசாரம் செய்து வந்தார்கள். 1,000 எழுத்துக்களைக் கொண்டு இப்படி ஓர் இயக்கத்தை ஜேம்ஸ் யென் தொடங்கினர். சர்க்கார் இதை ஆதரித்தாலும் பொதுமக்களின் அபிப்பிராயம் இதற்குச் சாதகமாக இல்லை. பெருவாரியாக மக்களுக்கு எழுத்தறிவூட்டச் சீன லிபி பயன்படாது என்று பலர் வாதித்தார்கள். கடைசியில் ஹூ ஷி என்ற அறிஞரே, "ஏதோ சில அறிவாளிகளுக்குத்தான் இது பயன்பட்டதே தவிர மற்றப்படி பிரமாதமாக ஒன்றும் சாதிக்க முடியவில்லை" என்று சொல்லிவிட்டார்.

இதே சமயத்தில் சோவியத் யூனியனில் இருந்த சீன அறிவாளிகள் சிலர், ரோமன் லிபியை ஆதாரமாகக் கொண்டு 'லின்-வென்ஸ்' என்ற புதிய லிபியைச் சிருஷ்டித்தார்கள். ருஷியாவிலுள்ள சீனர்களுக்காக இந்த லிபியில் பாடப் புத்தகங்கள் வெளியிட்டார்கள். சீனுவில் தேசிய சர்க்கார் ஆட்சி புரிந்தபோதே இந்த இயக்கம் பரவத் தொடங்கியது. ஆனல் சீன சர்க்கார் இதைத் தடுத்து இந்த லிபியில் வெளியான புத்தகங்களைப் பறிமுதல் செய்து விட்டார்கள். இந்த இயக்கத்தை நடத்திய அநேகம் தலைவர்களைச் சிறையில் அடைத்தார்கள். பிரதானத் தலைவர் ஒருவரைச் சிலர் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். ஆயினும், இந்த இயக்கத்தைச் சீன லிபி எழுதுவதில் நிபுணரான லூ ஸூன் போன்ற அறிஞர்கள் ஆதரித்தார்கள். "பழைய லிபி நீடித்தால் சீனு நிச்சயமாக அழிந்துவிடும். ஆகவே, மக்களுக்கு எழுத்தறிவூட்ட லின்-வென்ஸ் லிபியே சிறந்தது. சீன லிபியைக் கற்றுக் கொள்வதற்கே வருஷக்கணக்காகிறது. இதற்காகப் பணச் செலவும் ஏராளமாகப் பிடிக்கிறது. பெரும்பாலான மக்கள் ஒரு நாளுக்கு 13 மணி நேரங்கூட வேலை செய்யவேண்டி

யிருக்கிறது. நேரமும் இல்லை; கையில் பணமும் இல்லை. இந்த நிலையில் சீன லிபியை அவர்கள் எப்படிக் கற்றுக்கொள்ள முடியும்? ஒலிவடிவுக்கு ஏற்றபடி வரிவடிவு அமைய வேண்டும். மக்கள் விரும்புவது இதுவே" என்று லூ ஸுன் வாதித்தார். மதாம் சுன்-யாட் ஸென், டாக்டர் சுன்-போ, டாக்டர் சென் போன்ற சீன அறிஞர்களும் இதை ஆதரித்தார்கள்.

இன்று சீனவில் உள்ள 45 கோடி மக்களில் 93 சதவிகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். இவர்களுக்கு எழுத்தறிவூட்டி, சீனவில் ஒற்றுமை ஏற்படுத்துவதே இந்தப் புதிய இயக்கத்தின் நோக்கமாகும். கம்யூனிஸ்ட் சீனவில் இந்த லிபி அமலுக்கு வந்தால் இலக்கியம், கலாசாரம் இந்தத் துறைகளிலும் சோவியத் ருஷியா அங்கே செல்வாக்குப் பெற்று விளங்குவது நிச்சயம்.

பாதிப் பணத்துக்குச் சிகிச்சை

டாக்டர் பேரன் என்பவர் உலகப் பிரசித்தி பெற்ற ஹங்கேரியன் ஸர்ஜன். பெருந்தொகை கொடுத்தால் தான் அவர் 'ஆபரேஷன்' செய்வார்; வெடுக்கு வெடுக்கென்று பேசுவார். ஒரு சமயம் அவரிடம் பெரிய ஆலை முதலாளி ஒருவர் வந்தார். தமக்கு ஆபரேஷன் செய்து விடும்படி கேட்டுக்கொண்டார்.

"ஆயிரம் கிரவுன் (சுமார் 2,500 ரூபாய்) கட்டணம் கொடுக்க வேண்டும்" என்றூர் டாக்டர்.

"அவ்வளவு பணமா! ரொம்ப ஜாஸ்தியாயிருக்கிறதே" என்றூர் முதலாளி.

"அப்படியா? அப்படியானல் இன்ன டாக்டரிடம் போங்கள். இதில் பாதித் தொகைக்கு அவர் ஆபரேஷன் செய்வார். தவிர, அந்தத் தொகையை நீங்கள் செலுத்த வேண்டிய அவசியமும் இல்லை; உங்கள் சந்ததிகள் செலுத்திவிடுவார்கள்" என்றூர் டாக்டர்.

—'மகஸீன் டைஜெஸ்ட்'

ஒத்துழைக்க வழி

பாரிஸ் நகரவாசி சொல்வது இது: "நாம் இரண்டு பேரும் ஒத்துழைப்போம்: உங்கள் கைக் கடிகாரத்தை என்னிடம் தாருங்கள்; உங்களுக்கு வேண்டியபோது நான் மணி பார்த்துச் சொல்லுகிறேன்."

—'லா ஃப்ரான்ஸ் லிப்ரே'

கார்ட்டூன் கதம்பம்



"பொல்லாத ஓநாய்க்குப் பயந்தவரா நாங்கள்?" என்று கேட்கின்றன மத்தியக் கிழக்கு நாடுகள்.

—'எல் டையம்போ', கொலம்பியா.



தேர்தல் காற்றிலே பறந்து கிழிந்த சீட்டுக்கள்.

—'சங்கர்ஸ் வீக்லி'



திருவாங்கூர் - கொச்சி மதில்மேல் பூனைகள்.

—'ப்ரீ இந்தியா'

தேர்தலுக்குப் பின்—

—'போரம்'

நட்சத்திரத்திலே பெயர் பொறித்தவன்

★

ஒவ்வொரு வால் நட்சத்திரத்துக்கும் அதைக் கண்டு பிடித்தவனின் பெயரைச் சூட்டுவது வழக்கம். இப்படி ஒன்றுக்குப் பெயர் கொடுத்த ஒரு குடியானவச் சிறுவனின் இந்த வரலாற்றுக்கு ஆதாரம் பிராங்க் ஸீடல் என்பவர் எழுதிய 'ஒஹியோ ஸ்டோரி' என்ற நூல்.

அமெரிக்காவிலுள்ள ஒஹியோ மாகாணத்தில் டெல்பாஸ் என்ற ஊரில் பெல்டியர் என்று ஒரு குடியானவச் சிறுவன் இருந்தான். வானசாஸ்திரப் புத்தகம் என்றால் வெகு ஆவலோடு படிப்பான். 'தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்று கிடைத்தால் போதும்; வேறொன்றுமேகூட வேண்டியதில்லை' என்று ஏங்குவான். 1916-இல் அவனுக்கு 16 வயதிருக்கும். ஒருநாள் விவசாய சம்பந்தமான விலைப்பட்டி ஒன்றில் 2 அங்குல தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்றைப்பற்றி ஒரு விளம்பரம் வெளியாகியிருந்ததைப் பார்த்தான். 'இதில் கவனித்தால் தொலைவில் இருக்கும் ஒரு பசுமாட்டின் முதுகில் எத்தனை ஈ உண்டு என்றுகூட எண்ணிவிடலாம்' என்று அதில் போட்டிருந்தது. விலை 18 டாலர்தான். அந்தப் பக்கம் வயல்களில் ஸ்ட்ராபெர்ரி என்ற பழச் செடி பயிரிட்டிருந்தார்கள். அதைப் பறித்துக் கிடைத்த கூலியைக் கொண்டு ஒன்றரை மாதத்தில் சிறுவன் ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடி வாங்கினான். அது கையில் கிடைத்த அன்றிரவு அவனுடைய உற்சாகம் சொல்லி முடியாது. பொழுது சாய்ந்தது முதல் மறுநாள் காலை விடிகிற வரையில் வயலில் உட்கார்ந்து வானவெளியிலுள்ள அற்புதங்களை - பால்வீதி மண்டலத்தில் இருந்த நட்சத்திரங்களையும், சந்திர மண்டலத்தில் அவிந்துபோன எரிமலைகளையும், சனிக் கிரகத்தைச் சுற்றியுள்ள வளையங்களையும் - கண்டு வியந்தான்.

இவைகளெல்லாவற்றையும் விட அற்புதம், சில மங்கலான நட்சத்திரங்கள் திடீரென்று பிரகாசமாகத் தெரிந்து மீண்டும் கண்ணுக்குத் தெரியாதபடி மங்கி விடுவதுதான். இந்த ஒளிமாறும் நட்சத்திரங்கள் (variable stars) பற்றி வானசாஸ்திர நிபுணர்கள் அதிகமாக ஆராயவில்லை; இந்த விஷயத்தில் அக்கறையுள்ள எவரோ சிலர் மட்டும் இதில் ஈடுபட்டு வந்தார்கள். லெஸ்லியும் இந்தத் தொண்டில் ஈடுபட்டான்.

ஹார்வர்டு சர்வகலாசாலையில் அவ்வப்போது இவர்களிடமிருந்து தகவல்கள் வந்து குவிந்து கொண்டேயிருக்கும். இவைகளை அங்குள்ள விஞ்ஞானிகளெல்லாரும் பரிசீலனை செய்வார்கள்.

இருட்டின பிறகு லெஸ்லியைப் பார்க்கவேண்டுமென்றால் வயலுக்குத்தான் போகவேண்டும். இப்படி

இரவு முழுதும் அவன் அங்கே இருந்து ஆராய்வான்.

கீழ்வகுப்பில் படிக்கும்போது வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்ததால் லெஸ்லி பள்ளிக்கூடம் போவதை நிறுத்திவிட்டான். படித்துப் பட்டம் பெற முடியவில்லையே என்ற குறை இருந்தாலும் வான ஆராய்ச்சியில் ஈடுபட்டு அதை ஒருவாறு மறந்திருந்தான். ஒவ்வோர் இரவிலும் தான் காணும் விநோதங்களைப் பற்றி ஹார்வர்டு வான ஆராய்ச்சி நிலையத்துக்குத் தெளிவாகத் தகவல் எழுதி அனுப்பி வந்தான்.

1918-இல் அந்த நிலையத்தின் டைரக்டரிடமிருந்து அவனுடைய தொண்டைப் பாராட்டி ஒரு கடிதம் வந்தது. அதில், "4 அங்குல டெலஸ்கோப் ஒன்று நாங்கள் அனுப்பி வைக்கிறோம். உபயோகித்துக்கொள்" என்று அவர் எழுதியிருந்தார். ஆகவே, அதற்காக வயலிலேயே ஓர் இடம் ஏற்பாடு செய்து கையில் இருந்த கொஞ்சம் தொகையைக் கொண்டு சிறுவன் ஒரு பெட்டியைத் தயாரித்தான். நாலு பக்கமும் நன்றாக டெலஸ்கோப் மூலம் கவனிக்கும்படி அதற்குள் வட்டமாகக் குடைந்தெடுத்தான். டெலஸ்கோப் நன்றாகச் சுற்றிவருவதற்குச் சக்கரமும் அமைத்தான்.

லெஸ்லியைக் காண வந்த ஒரு நண்பன் அதைப் பார்த்து, "நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் புது டெலஸ்கோப் வந்துதான் என்ன கண்டு பிடித்துவிட முடியும்? இதுவும் அப்படிப் பிரமாதம் என்று சொல்ல முடியாதே!" என்றான்.

"இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து கவனிக்க முடியும். பல நட்சத்திரங்களைப்பற்றி ஆராயலாம்; ஏன், ஏதாவது வால் நட்சத்திரமே கூட முதல் முதலாக என் கண்ணுக்குத் தட்டுப்படலாம்" என்றான் லெஸ்லி.

ஒரு வால் நட்சத்திரம் ஒரு முறை சுற்றிவர 500 வருஷத்துக்கு மேலேகூட ஆகும். பூமிக்குக் கிட்ட வரும்போதுதான் அது தெரியும்; அதுவும் மங்கலாக இருக்கலாம். இந்த நிலையில் அதைக் கண்டு பிடிப்பதென்றால் லேசல்ல.

"அப்படி நீ கண்டு பிடித்தால் அதற்கு உன் பெயரை வைப்பார்கள்; இல்லையா?" என்றான் நண்பன்.

"அதெப்படி நிச்சயமாகச் சொல்வது? இன்னும் அதன் கதி முதலியவற்றைக் கவனித்து ஹார்வர்டுக்குத் தகவல் அனுப்ப வேண்டும். அதற்குள் என்னைப்போல் இன்னும் எத்தனையோ பேர் இதையெல்லாம் கவனித்து எழுதியனுப்பிவிடக்கூடும்."

"அப்படி நீமட்டுமே கண்டு பிடித்தாய் என்று வைத்துக்கொள்ளேன். அப்போது?"

"அதற்கு என் பெயரையே சூட்டிவிடுவார்கள்" என்றான் லெஸ்லி.

1921 முதல் 1926 முடிய வானம் தெளிவாக இருந்த ஒவ்வோர் இரவும் வயலில் உட்கார்ந்துகொண்டு லெஸ்லி இப்படி ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தான். பகலில் ஆலையில் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தான். அந்த வேலையிலும் நல்ல பெயர் எடுத்தான்.

1925-ஆம் வருஷம் நவம்பர் 13-ஆம் தேதியன்று இரவு 10-45 மணி இருக்கும். சற்றுப் பனியும் குளிருமாக இருந்தது. படுக்குமுன் கடைசியாக மிருகசீர்ஷ நட்சத்

நட்சத்திரத்திலே பெயர் பொறித்தவன்

★

ஒவ்வொரு வால் நட்சத்திரத்துக்கும் அதைக் கண்டு பிடித்தவனின் பெயரைச் சூட்டுவது வழக்கம். இப்படி ஒன்றுக்குப் பெயர் கொடுத்த ஒரு குடியானவச் சிறுவனின் இந்த வரலாற்றுக்கு ஆதாரம் பிராங் ஸீடல் என்பவர் எழுதிய 'ஓஹியோ ஸ்டோரி' என்ற நூல்.

அமெரிக்காவிலுள்ள ஓஹியோ மாகாணத்தில் டெல்பாஸ் என்ற ஊரில் பெல்டியர் என்று ஒரு குடியானவச் சிறுவன் இருந்தான். வானசாஸ்திரப் புத்தகம் என்றால் வெகு ஆவலோடு படிப்பான். 'தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்று கிடைத்தால் போதும்; வேறொன்றுமேகூட வேண்டியதில்லை' என்று ஏங்குவான். 1916-இல் அவனுக்கு 16 வயதிருக்கும். ஒருநாள் விவசாய சம்பந்தமான விலைப்பட்டி ஒன்றில் 2 அங்குல தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்றைப்பற்றி ஒரு விளம்பரம் வெளியாகியிருந்ததைப் பார்த்தான். 'இதில் கவனித்தால் தொலைவில் இருக்கும் ஒரு பசுமாட்டின் முதுகில் எத்தனை ஈ உண்டு என்றுகூட எண்ணிவிடலாம்' என்று அதில் போட்டிருந்தது. விலை 18 டாலர்தான். அந்தப் பக்கம் வயல்களில் ஸ்ட்ராபெர்ரி என்ற பழச் செடி பயிரிட்டிருந்தார்கள். அதைப் பறித்துக் கிடைத்த கூலியைக் கொண்டு ஒன்றரை மாதத்தில் சிறுவன் ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடி வாங்கினான். அது கையில் கிடைத்த அன்றிரவு அவனுடைய உற்சாகம் சொல்லி முடியாது. பொழுது சாய்ந்தது முதல் மறுநாள் காலை விடிகிற வரையில் வயலில் உட்கார்ந்து வானவெளியிலுள்ள அற்புதங்களை - பால்வீதி மண்டலத்தில் இருந்த நட்சத்திரங்களையும், சந்திர மண்டலத்தில் அவிந்துபோன எரிமலைகளையும், சனிக் கிரகத்தைச் சுற்றியுள்ள வளையங்களையும் - கண்டு வியந்தான்.

இவைகளெல்லாவற்றையும் விட அற்புதம், சில மங்கலான நட்சத்திரங்கள் திடீரென்று பிரகாசமாகத் தெரிந்து மீண்டும் கண்ணுக்குத் தெரியாதபடி மங்கி விடுவதுதான். இந்த ஒளிமாறும் நட்சத்திரங்கள் (variable stars) பற்றி வானசாஸ்திர நிபுணர்கள் அதிகமாக ஆராயவில்லை; இந்த விஷயத்தில் அக்கறையுள்ள எவரோ சிலர் மட்டும் இதில் ஈடுபட்டு வந்தார்கள். லெஸ்லியும் இந்தத் தொண்டில் ஈடுபட்டான்.

ஹார்வர்டு சர்வகலாசாலையில் அவ்வப்போது இவர்களிடமிருந்து தகவல்கள் வந்து குவிந்து கொண்டேயிருக்கும். இவைகளை அங்குள்ள விஞ்ஞானிகளெல்லாரும் பரிசீலனை செய்வார்கள்.

இருட்டின பிறகு லெஸ்லியைப் பார்க்கவேண்டுமென்றால் வயலுக்குத்தான் போகவேண்டும். இப்படி

இரவு முழுதும் அவன் அங்கே இருந்து ஆராய்வான்.

கீழ்வகுப்பில் படிக்கும்போது வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்ததால் லெஸ்லி பள்ளிக்கூடம் போவதை நிறுத்திவிட்டான். படித்துப் பட்டம் பெற முடியவில்லையே என்ற குறை இருந்தாலும் வான ஆராய்ச்சியில் ஈடுபட்டு அதை ஒருவாறு மறந்திருந்தான். ஒவ்வோர் இரவிலும் தான் காணும் விநோதங்களைப் பற்றி ஹார்வர்டு வான ஆராய்ச்சி நிலையத்துக்குத் தெளிவாகத் தகவல் எழுதி அனுப்பி வந்தான்.

1918-இல் அந்த நிலையத்தின் டைரக்டரிடமிருந்து அவனுடைய தொண்டைப் பாராட்டி ஒரு கடிதம் வந்தது. அதில், “4 அங்குல டெலஸ்கோப் ஒன்று நாங்கள் அனுப்பி வைக்கிறோம். உபயோகித்துக் கொள்” என்று அவர் எழுதியிருந்தார். ஆகவே, அதற்காக வயலிலேயே ஓர் இடம் ஏற்பாடு செய்து கையில் இருந்த கொஞ்சம் தொகையைக் கொண்டு சிறுவன் ஒரு பெட்டியைத் தயாரித்தான். நாலு பக்கமும் நன்றாக டெலஸ்கோப் மூலம் கவனிக்கும்படி அதற்குள் வட்டமாகக் குடைந்தெடுத்தான். டெலஸ்கோப் நன்றாகச் சுற்றிவருவதற்குச் சக்கரமும் அமைத்தான்.

லெஸ்லியைக் காண வந்த ஒரு நண்பன் அதைப் பார்த்து, “நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் புது டெலஸ்கோப் வந்துதான் என்ன கண்டு பிடித்துவிட முடியும்? இதுவும் அப்படிப் பிரமாதம் என்று சொல்ல முடியாதே!” என்றான்.

“இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து கவனிக்க முடியும். பல நட்சத்திரங்களைப்பற்றி ஆராயலாம்; ஏன், ஏதாவது வால் நட்சத்திரமே கூட முதல் முதலாக என் கண்ணுக்குத் தட்டுப்படலாம்” என்றான் லெஸ்லி.

ஒரு வால் நட்சத்திரம் ஒரு முறை சுற்றிவர 500 வருஷத்துக்கு மேலேகூட ஆகும். பூமிக்குக் கிட்ட வரும்போதுதான் அது தெரியும்; அதுவும் மங்கலாக இருக்கலாம். இந்த நிலையில் அதைக் கண்டு பிடிப்பதென்றால் லேசல்ல.

“அப்படி நீ கண்டு பிடித்தால் அதற்கு உன் பெயரை வைப்பார்கள்; இல்லையா?” என்றான் நண்பன்.

“அதெப்படி நிச்சயமாகச் சொல்வது? இன்னும் அதன் கதி முதலியவற்றைக் கவனித்து ஹார்வர்டுக்குத் தகவல் அனுப்ப வேண்டும். அதற்குள் என்னைப்போல் இன்னும் எத்தனையோ பேர் இதையெல்லாம் கவனித்து எழுதியனுப்பிவிடக்கூடும்.”

“அப்படி நீமட்டுமே கண்டு பிடித்தாய் என்று வைத்துக்கொள்ளேன். அப்போது?”

“அதற்கு என் பெயரையே சூட்டிவிடுவார்கள்” என்றான் லெஸ்லி.

1921 முதல் 1926 முடிய வானம் தெளிவாக இருந்த ஒவ்வோர் இரவும் வயலில் உட்கார்ந்துகொண்டு லெஸ்லி இப்படி ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தான். பகலில் ஆலையில் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தான். அந்த வேலையிலும் நல்ல பெயர் எடுத்தான்.

1925-ஆம் வருஷம் நவம்பர் 13-ஆம் தேதியன்று இரவு 10-45 மணி இருக்கும். சற்றுப் பனியும் குளிருமாக இருந்தது. படுக்குமுன் கடைசியாக மிருகசீர்ஷ நட்சத்

திரத் தொகுதியை ஒரு தரம் கவனித்துக்கொண்டே சற்று மேலே வரும்போது, கண்ணுடியில் மங்கலாக மேகம்போல் சிறு திட்டு ஒன்று தெரிந்தது. அவனை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. முந்திய நாள் இரவு அதை அங்கே அவன் பார்க்கவில்லை. கண்ணுடியைச் சுழற்றிப் பார்த்தான். அந்தத் திட்டும் கூடவே சுழலவில்லை. வால்நட்சத்திரம் என்பதற்கு இது ஓர் அறிகுறி.

உடனே ஹார்வர்டுக்கு 'போன்' செய்ய வேண்டுமென்று துடித்தான். ஆனாலும் ஒரு மணி நேரமாவது பொறுத்திருந்து கவனித்தால்தான் அது நிச்சயமாகத் தெரியும். ஆகவே, வெளியே வந்து குளிர் தெரியாதிருக்கக் கை கால்களை ஒரு முறை தேய்த்துவிட்டுக் கொண்டான். கைக் கடிகாரத்தைக் காதருகில் வைத்துக்கொண்டு காத்திருந்தான். மணி 11-45-க்கு மறுபடியும் பெட்டிக்குள்ளே நுழைந்தான். மறு நிமிஷமே வெளியே வீட்டை நோக்கி விரைந்து ஓடினான். ஹார்வர்டுக்கு உடனே 'போன்' மூலம் விஷயத்தைத் தெரிவித்தான்.

அன்று இரவு நூற்றுக்கணக்கான விஞ்ஞான நிபுணர்களுந்தான் அவனிடம் இருப்பதைவிடப் பல மடங்கு விலையுயர்ந்த கருவிகளைக் கொண்டு வானத்தைத் துருவி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இதைக் காணவில்லை. லெஸ்லிதான் இதைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று இருக்கிறதே; அந்த அதிர்ஷ்டம் அவர்களுக்கு எப்படி வாய்க்கும்?

அதுமுதல் லெஸ்லி மிகவும் சிரமப்பட்டு வான ஆராய்ச்சியில் ஈடுபடலானுன். 1930, 1932, 1933 இந்த மூன்று வருஷங்களிலும் புதுப் புது வால் நட்சத்திரங்களைக் கண்டு பிடித்தான். அப்போதும் பகலில் மரச்சாமான் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டு வந்தான்.

1936-ஆம் வருஷம் மே மாதம் 15-ஆம் தேதி லெஸ்லி கண்டு பிடித்த ஒரு வால் நட்சத்திரந்தான் இன்று அவன் பெயரால் 'பெல்டியர் காமெட்' என்று வழங்குகிறது. அதைக் கண்டுபிடித்து முன்னதாகவே தெரிவித்தவன் இவன்தான். ஜூலை 1-ஆம் தேதி அன்று எல்லா மக்களும் பார்க்கும்படி அது பளிச்சென்று தெரிந்தது.

லெஸ்லியை ஹார்வர்டு சர்வகலாசாலையார் அழைத்துக் கௌரவித்தார்கள். 1947 ஜூன் 12-ஆம் தேதியன்று அவன் ஊருக்கு அருகில் இருந்த சர்வகலாசாலையார் அவனுக்கு 'விஞ்ஞான டாக்டர்' பட்டம் வழங்கினுர்கள்.

ஆண்-பெண் வித்தியாசம்

சட்டபூர்வமாகப் பெண்களின் அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்று பிரெஞ்சுப் பார்லிமெண்டில் ஓர் அங்கத்தினர் பேசுகையில், "பார்க்கப் போனுல், ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம் மிக மிக அற்பம்" என்றூர்.

உடனே சபையோர் அனைவரும் ஏகோபித்து எழுந்து, "அந்த வித்தியாசம் நீடு வாழ்வதாக!" என்று கோஷித்தார்கள்.

—மில்டன் வ்ரைட், 'சம்பாஷணைக் கலை' என்ற புஸ்தகத்தில்.

மின்சார சப்ளை எப்படி?

ஜான் ஸ்டீபென்

★★

பெரிய நகரம் ஒன்றுக்கு மின்சார சப்ளை எப்படி நடக்கிறது? நகரத்தில் உள்ளவர் அதை எப்படி உபயோகித்தால், முடிந்த மட்டும் நிறைய சப்ளை கிடைக்க வசதி ஏற்படும்?-இந்த விஷயங்களைக் கட்டுரையாளர் விளக்குகிறார்.

★★

மின்சாரத்தை யந்திரங்கள் படைப்பதாகவே பொதுவாக எல்லாரும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி எண்ணுவது சரியல்ல. மின்சாரம் என்பது ஓர் இயற்கைச் சக்தி. உதாரணமாக, மின்னலைப் பாருங்கள். அது மின்சாரந்தான். மின்சார யந்திரங்கள் மின்சாரத்தைப் படைக்கவில்லை என்றால், பின்னே என்ன செய்கின்றன? இயற்கையில் மின்சார சக்தி அமைந்து கிடக்கிறது. அதன் அமைந்த நிலையைக் கலைத்து மனிதனுக்கு வேலை செய்யக்கூடிய நிலைக்கு அதை மாற்றி விடுவது தான் மின்சார டைனமோ அல்லது ஜெனரேட்டர் புரியும் வேலை. இயற்கையில் அமைந்து கிடக்கும் மின்சார சக்தியைக் கலக்கிவிடும் போது, அது பழைய அமைந்த நிலையை அடைய முயல்கிறது. அப்போதுதான் அது நமக்கு வேலை செய்கிறது. இதற்கு ஓர் உபமானம் சொல்லலாம். ஏரியில் நீர் இருக்கிறது. அது இயற்கையான நிலையில் அமைந்து கிடக்கும்போது பாசனத்துக்கோ, அது போன்ற வேறு காரியங்களுக்கோ பயன்படாது. பம்புகளைக் கொண்டு, அந்தத் தண்ணீரை அடித்து வெளியேற்றி நமக்கு இஷ்டமான இடத்துக்கு அதை அனுப்புகிறோம். இயற்கையில் அமைந்து கிடக்கும் மின்சாரத்தை, இந்த மாதிரியே தான் டைனமோ அல்லது ஜெனரேட்டர் கலக்கி ஓடச் செய்கிறது.

பம்பாய் ராஜ்யத்தில் இப்போது மின்சார சப்ளை போதவில்லை. நிலைமையில் அபிவிருத்தி ஏற்படுகிற வரையில் மின்சார சப்ளையை ராஜ்யம் எங்கும் குறைத்து விடும்படி பம்பாய் சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. இதற்கு யாரைக் குற்றம் சொல்வது? அதுபற்றி எவரும் எவ்வித அபிப்பிராயமும் கொள்வதற்கு முன்பு, மின்சார சப்ளையில் உள்ள சில விசேஷச் சிக்கல்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மின்சாரத்தைச் சேகரித்து எதிலாவது வைத்துக்கொள்ளலாமே என்றால், அது சாத்தியமில்லை. மிகச் சொற்பமான அளவு மின்சாரத்தைத்தான் சேகரித்து வைத்துக்கொள்ள இயலும்; அதற்குமேல் இயலாது. நிலக்கரி, தண்ணீர், எண்

ணெய், விறகு முதலியவற்றை நிறையச் சேகரித்து வைத்துக்கொண்டு, நமக்கு வேண்டும்போது உபயோகித்துக்கொள்ளலாம். மின்சாரத்தை டைனமோ அல்லது ஜெனரேட்டர் கலக்கி ஓடச் செய்யும்போதே அதை உபயோகித்தாக வேண்டும். ஆகவே ஊரில் உள்ள ஜனங்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எந்த அளவு மின்சாரத்தை உபயோகிக்கிறார்களோ அந்த அளவு மின்சாரத்தையே, மின்சார நிலையங்களில் உள்ள யந்திரங்கள் வெளிப்படுத்தி ஓடச் செய்யும். ஒவ்வொரு ஜெனரேட்டரும் இன்ன அளவு மின்சாரத்தைத்தான் கலக்கி வெளியேற்ற முடியும் என்ற ஒரு வரையறை உண்டு. அதை மீறிய அளவு மின்சாரம் வேண்டுமென்றால், சாத்தியமில்லை. அதற்கு இன்னும் சில ஜெனரேட்டர்களைத்தான் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

யந்திரங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், ஒரு யந்திரம் இவ்வளவு வேலை செய்யும் என்பதை இத்தனை 'குதிரைச் சக்தி' (ஹார்ஸ் பவர்) என்று குறிப்பிடுவார்கள். உதாரணமாக, மோட்டார் - கார்களில் உள்ள எஞ்சின் முப்பது குதிரைச் சக்தி கொண்டது. மின்சாரம் வேலை செய்யும் சக்தியை இதே மாதிரி 'வாட்' என்று குறிப்பிடுகிறார்கள். மின்சார பல்புகளில் 40 வாட், 60 வாட், 100 வாட் என்று குறித்திருப்பதைக் கவனியுங்கள். அவை வேலை செய்ய இவ்வளவு வாட் மின்சார சக்தி பிடிக்கும் என்பதையே அது தெரிவிக்கிறது. மின்சார இஸ்திரிப் பெட்டி வேலை செய்ய அதிகமான கரண்ட் செலவாகும். 400 வாட் சக்தி பிடிக்கிற சிறு பெட்டி முதல் 1000 வாட் சக்தி பிடிக்கிற பெரிய பெட்டி வரைக்கும் இஸ்திரிப் பெட்டிகளில் பல வகைகள் இருக்கின்றன. மின்சார நிலையங்களில் உள்ள பெரிய ஜெனரேட்டர்கள், பல லட்சம் வாட் மின்சார சக்தியை உற்பத்தி செய்யக்கூடியவை. ஆயிரம் வாட் கொண்டது ஒரு கிலோவாட். கிலோவாட் என்பதையே ஒரு 'யூனிட்' என்று வைத்துக்கொண் டிருக்கிறார்கள். குறிப்பிட்ட நேரம் ஒன்றில் மின்சார நிலையம் சப்ளை செய்யும் மின்சார சக்தியை 'லோடு' (பாரம்) என்று சொல்லுகிறார்கள். இந்த 'லோடு' என்பதை இத்தனை கிலோவாட் என்று கணக்கிடுகிறார்கள். இந்த 'லோடு' ஒரு நாளின் எல்லா நேரங்களிலும் ஒரே அளவாயிருப்பதில்லை; மணிக்கு மணி மாறிக்கொண்டே யிருக்கும். மின்சார சக்தியைப் பலவிதமான வேலைகளுக்குப் பல பேர் செலவழிக்கும்போது, இந்த 'லோடு' கண்டபடி மாறுகிறது. மின்சார நிலைய எஞ்சினீர்களுக்கு அதுதான் பெரிய தலைவலியாயிருக்கிறது.

நடுத்தரமான ஆலைத் தொழில் நகரம் ஒன்றை எடுத்துக்கொள்வோம். அதன் மின்சார நிலையம் பலவித வேலைகளுக்கு மின்சார சக்தி அளிக்கவேண்டி யிருக்கிறது. இதைக் 'கலப்பு லோடு' (மிக்ஸெட் லோடு) என்று சொல்வார்கள். அதை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்:

(1) வீட்டு உபயோகங்களுக்கு:- விளக்கு, விசிறி, ரிபிரிஜெரேட்டர், ஏர்-கண்டிஷனர், பிற சிறு மின்சாரக் கருவிகள்.

(2) போக்குவரத்துக்கு:- மின்சார டிராம், அது சம்பந்தமான இதர வேலைகள்.



(3) ஆலைத் தொழிலுக்கு:- மில், தொழிற்சாலை முதலியன.

இந்த வேலைகளுக்கெல்லாம் சப்ளை செய்யும் மின்சார நிலையம் 20,000 கிலோவாட் சக்தி கொண்டது என்று வைத்துக்கொள்ளலாம். அதில் நாலு ஜெனரேட்டர் இருக்கும்; அவைகளில் ஒவ்வொன்றும் 5,000 கிலோவாட் சக்தி உள்ளதாயிருக்கும்.

இப்போது, மேலே உள்ள கோட்டு உருவத்தைப் பாருங்கள். மின்சார நிலையம் சப்ளை செய்ய வேண்டி இருக்கும் 'லோடு' ஒரு நாளின் வெவ்வேறு நேரத்தில் எவ்வளவு என்பதை அது காட்டுகிறது.

இரவு 12 மணி முதல் 4 மணி வரை: லோடு 2,000 கிலோவாட். பெரும்பகுதி வீட்டுக்காரியங்களுக்கு உபயோகமாகிறது.

இரவு 4 மணி முதல் காலை 6 மணி வரை:- லோடு 4,000 கிலோவாட்டுக்கு உயர்கிறது. வீட்டு உபயோகம் தவிர, டிராம்கள் ஓடத் தொடங்குகின்றன.

காலை 6 மணி முதல் 10 மணி வரை: லோடு 20,000 கிலோவாட்டுக்கு உயர்கிறது. டிராம்கள் சுறுசுறுப்பாய் ஓடுகின்றன; மில்களும் தொழிற்சாலைகளும் வேலை தொடங்குகின்றன.

காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரை: லோடு 20,000 கிலோவாட்டிலேயே நிலைத்திருக்கிறது.

பகல் 12 மணி முதல் 2 மணி வரை:- ஆலைகளின் இடைவேளை ஓய்வு காரணமாக, லோடு 10,000 கிலோவாட்டுக்கு இறங்கி விடுகிறது.

பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை:- மீண்டும் லோடு 20,000 கிலோவாட்டுக்கு உயர்ந்து அதிலேயே நிலைத்திருக்கிறது.

பிற்பகல் 5 மணி முதல் 6 மணி வரை: ஆலைத் தொழில்கள்

நின்றுவிடுவதால் லோடு, 10,000 கிலோவாட்டுக்கு இறங்கிவிடுகிறது.

மாலை 6 மணி முதல் இரவு 12 மணி வரை: லோடு 10,000 கிலோவாட்டிலிருந்து 2,000 கிலோவாட்டுக்குச் சிறுகச் சிறுக இறங்கி விடுகிறது. டிராம்கள் நின்றுவிடுவதும் ஜனங்கள் உறங்கச் செல்வதும் காரணம்.

உச்ச நிலையான 20,000 கிலோ வாட்டுக்கு ஒரு நாளில் ஐந்து மணி நேரந்தான் லோடு உயர்கிறது. மின்சார சக்தியைச் சேகரித்து வைத்துக்கொண்டு நாம் இஷ்டப் பட்டபோது வழங்க முடியாதாகை யால், இந்த நிலைமை மிகவும் அதிருப்திகரமாக இருக்கிறது. இப்போது இடை நடுவில் உள்ள புள்ளியிட்ட கோட்டைப் பாருங் கள். மின்சார சக்தியை உபயோ கிக்கும் சகல தொழில்களும் நாள் முழுவதும் பரவி ஒரே அளவாய் நடக்குமானால், 24 மணி நேரத்தில் எந்த வேளையிலும் 11,000 கிலோ வாட் சக்தியுள்ள லோடுதான் இருக்கும் என்பதை அது காட்டு கிறது.

இப்படித் தொழில்களெல்லாம் பரவி நடந்தால், சகல காரியங் களுக்கும் மின்சார சக்தியை மின் சார நிலையம் தட்டில்லாமல் சப்ளை செய்ய முடியும். இதற்காகவே மில்களையும் தொழிற்சாலைகளையும் 'ஷிப்ட்' வைத்து இரவும் பகலும் நடத்தவேண்டியிருக்கிறது. அத ஞல் மின்சார நிலையங்களில் உள்ள ஜெனரேட்டர்களுக்கு லோடு லேசாக இருக்கும். அப்போது அவைகளை ஓட்டுவதும் சுலப மாகிறது; எந்த நேரத்திலாவது அதிகப்படி கரண்ட் வேண்டுமாஞல் அதை சப்ளை செய்வதற்கான வசதி யும் இருக்கும்.

தவிர ஒரு நாளில் எந்த நேரத்தி லும் உயர்ந்த பட்சமாக 15,000 கிலோவாட் மட்டும் சப்ளை செய்யக் கூடிய நிலைமையில் மின்சார நிலையத்தைத் தயார் செய்து வைத்தால் போதும். அப்போது ஒரு ஜெனரேட்டரை ஓட் டாமல் இருப்பில் வைத்துக் கொள்ளலாம். ஓடுகிற மற்ற மூன் றில் ஒன்றை ரிபேர் செய்ய நேரிட் டால், இருப்பில் உள்ளதை உபயோ கித்துக்கொள்ளலாம். இப்படிச் செய்வதால், எந்தச் சந்தர்ப்பத்தி லும் தொழில்களுக்கு இடையூறில் லாமல் மின்சார சப்ளை கிடைக்கும். ஆனல், கோட்டுருவத்தில் கண்ட படி 'லோடு' வெவ்வேறு நேரத்தில் வெவ்வேறு அளவாக 2,000 கிலோ வாட் முதல் 20,000 கிலோவாட் வரைக்கும் ஏறி இறங்கினல், நிலையத் தில் உள்ள 4 ஜெனரேட்டர்களும் ஒவ்வொரு நாளும் ஓடவேண்டி யிருக்கிறது. ஒன்று பழுதானல், அது சீர்படும் வரைக்கும் தொழில் களில் தடுமாற்றம் ஏற்பட்டுவிடும்.

எப்படி?—ஏன்?

'எப்படி' என்று தெரிந்தவனுக்கு எங்கே போனலும் வேலை கிடைக்கும்; 'ஏன்' என்று தெரிந்தவன் அவனுக்கு (முதலில் சொன்னவனுக்கு) எஜமாஞயிருப்பான்.

—'தி கார்ப்பகோ ப்யூகிள்'

கண்ணிலே தெரியுமா?

★

* *

கதாபாத்திரங்களின் நடையுடை பாவனைகளையெல்லாம் வர்ணிக்கலாமா, கூடாதா? வர்ணிப்பதானால் எந்த அளவில் வர்ணிப்பது? பாத்திரங்களின் உள்ள இயல்பை விளக்கும் மனத்தத்துவச் சித்திரமான நவீன நாவல் களிலே இதற்குரிய இடம் எது? இந்தப் பிரச்னையை, 'ஜான் அவ் லண்டன் வீக்லி' என்ற பிரபல ஆங்கிலப் பத்திரிகையின் இந்தத் தலையங்கம் ஆராய்கிறது. நம் இளங்கதாசிரியரெல்லாம் இதைப் படிப்பது பலன் தரும்.

* *

ஒருவருடைய உள்ள உணர்ச்சியையோ குணத்தையோ அவருடைய கண் காட்டிவிடுவதாக நாவலாசிரியர்கள் எழுதுகிறார்களே, இதை ஒரு சமயம் ஒரு விஞ்ஞானி சுத்த அபத்தம் என்று கண்டித்தார். கண்ணுக்குள்ளே இந்த மாதிரி குறிப்பு எதுவும் நமக்குக் கிடைப்பதில்லையாம். அதற்கு அண்டை அயலில் உள்ள சதை அசைவுகளையும் சுருக்கங்களையும் கொண்டே, நாம் இப்படி நினைக்கிறோமாம். இது அந்த விஞ்ஞானி சொல்வது.

இதை நான் நம்பத் தயார். ஆனால், காரணம் எதுவாயிருந்தாலும் சரிதான், சில கண்கள் எப்படியோ நம் கண்ணைக் கவர்ந்துவிடுகின்றன. ஒன்று, அழகு நிறைந்திருக்கிறது; இன்னொன்று, அருள் செறிந்திருக்கிறது; மற்றொன்று, வஞ்சமற்றுத் துலங்குகிறது; வேறொன்று, குரூரமாயிருக்கிறது. விஞ்ஞான நுணுக்கங்களையெல்லாம் அநுசரித்து ஒரு நாவலாசிரியன் எழுதிக்கொண்டிருக்க முடியாது. ஒரு மனிதனின் கண்களை நாம் பார்க்கும் போது, அதைச் சுற்றிலும் நமக்குத் தென்படும் ஒளி, வர்ணம், கோடு, அசைவு எல்லாவற்றையும் சேர்த்துக் குறிக்கும் பொது வார்த்தையாகவே 'கண்' என்ற சொல்லை அவன் உபயோகிக்கிறான்.

பிறர் ஒருவரைப்பற்றி மிக மிக நுண்மையான பல அம்சங்கள் நம் மனத்திலே பதிகின்றன. அவை அனைத்தும் சேர்ந்தே அவரைப் பற்றி நமக்கு ஓர் அபிப்பிராயம் உண்டாகச் செய்கின்றன. சிலரை என்னவோ நமக்குப் பிடிக்கிறது, சிலரைப் பிடிக்க மாட்டேனென்கிறது. காரணம் சொல்லென்றால், நமக்குச் சொல்லத் தெரியாது. அநேக சமயத்தில் ஒருவரைப் பார்த்ததுமே அவரைப்பற்றி நம் மனத்தில் ஏதோ ஒருவித அபிப்பிராயம் விழுந்துவிடுகிறது. இப்படி நமக்கு ஏற்படும் அபிப்பிராயத்துக்குக் காரணம், நம் கண்ணில் பட்ட பல நுண்ணிய அம்சங்களாயிருக்கும். நம்மில் சிலருக்கு அந்த அபசங்கள் என்ன என்ன என்று தெரிவதுண்டு; சிலருக்குத் தெரிவதில்லை. 'கண்ணின் கரு விழிக்குக் கீழே வெண்மை இருப்பவனை

நம்பாதே'; 'மோவாய்க்கட்டை பிளந்திருப்பவன் சூழ்ச்சி செய்வான்'; 'உன் முகத்தைப் பார்க்க மாட்டேன் என்கிறானே, அவன் கபடன்' - இப்படியெல்லாம் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

எனக்கு இந்த மாதிரி லட்சணங்களையெல்லாம் கவனிக்கும் வழக்கமில்லை. 'ஒருத்தி என்ன உடுப்பு அணிந்திருந்தாள்? தலை பின்னியிருந்தாளா, இல்லையா?' என்றெல்லாம் நான் அறியேன். புது மனிதன் ஒருவனைப்பற்றி, 'அவன் மீசை வைத்திருந்தானா? மழுங்க க்ஷவரம் செய்துகொண்டிருந்தானா?' என்று என்னைக் கேட்டால், எனக்கு ஞாபகம் இருப்பதில்லை. ஒருவருடைய கண் வர்ணத்தை நான் கவனிப்பதில்லை. ஆனால், அந்தக் கண் அழகாயிருக்கிறதா, இல்லையா என்பது மாத்திரம் எனக்குப் புலப்படும். நான் முதல் தடவையாகப் பார்த்த ஒருவரை எனக்குப் பிடித்ததா இல்லையா என்றால், என்னால் சொல்ல முடியாது. அப்படி எப்போதாவது சொன்னேனானால், அவரிடம் நான் கவனித்த பற்பல சிறு அம்சங்களையும் ஞாபகத்துக்குக் கொண்டு வந்து, அவைகளைக் காரணமாகச் சொல்லுவேன்.

என்றாலும், வேறு தலைமுறையில் வாழ்ந்த ஜனங்கள் எப்படி இருந்தார்கள் என்பதை அறிய எனக்கு எப்போதும் ஆசை. நான் ஒரு நாவல் எழுதினால், அதில் வரும் பாத்திரங்களை எனக்குத் தோன்றுகிறபடி சுருக்கமாக வாசகர்களுக்குச் சித்திரித்துத் தருவேன். அவர்கள் தலை மயிரை எப்படி அலங்கரித்திருந்தார்கள், என்ன உடுத்திருந்தார்கள், அவர்களுக்கு மீசை இருந்ததா, காது நீளமாயிருந்ததா, மூக்கு நிமிர்ந்திருந்ததா என்றெல்லாம் குறிப்பிடுவேன். பேசும்போதோ, வேலை செய்யும்போதோ, மௌனமாயிருக்கும்போதோ அவர்களின் பார்வை எப்படி இருக்கும் என்பதையும் எப்போதும் குறிப்பிட முயல்வேன்.

இந்த விஷயத்தில் டிக்கன்ஸ் என்ற பிரபல நாவலாசிரியரையே நான் பின்பற்றுகிறேன். கற்பனை உருவங்களைக் கண்ணுக்கு முன் கொண்டு வர உதவுவதே இப்படி எழுதுவதன் நோக்கம். உருவச் சித்திரமில்லாத பாத்திரங்களின் சிந்தனையும் பேச்சும் மாத்திரம் ஒரு நாவலில் அடங்கி இருக்குமானால், அதில் ஜீவன் இருக்காது. ஆனால், பாத்திரங்களின் தோற்றத்தை ஏதோ இரண்டொரு வார்த்தைகளில் சுருக்கமாகக் கோடி காட்டுவதோடு நிற்காமல் சகல நுணுக்கமான அம்சங்களையும் விஸ்தாரமாய்ச் சொல்லி வர்ணித்துக்கொண்டிருந்தால், அந்த நாவலை யாரும் படிக்கமாட்டார்கள். சில சமயம் நம் உள்ளத்தைக் கவர்ந்த ஒரு கதாபாத்திரம், கதையில் பேரழகியாயிருப்பாள்; கதையின் சித்திர விளக்கமாக ஓவியர் வரைந்திருக்கும் படத்தில் இருக்கும் அவள் உருவம் அப்படி இராது. அப்போது நாம் பெரிதும் ஏமாற்றம் அடைவோம். இந்த அநுபவம் உங்களுக்கு ஏற்பட்டதில்லையா?

'ஒரு மனிதன் பேசும் மாதிரியைக்கொண்டே அவன் எப்படிப் பட்டவன் என்பதைச் சொல்லி விடலாம்' என்று கதாசிரியர் பால் ஸாக் கருதினார். கோனன்டாயில் எழுதிய கதைகளில் வரும் துப்பறியும் நிபுணர் ஷெர்லாக் ஹோம்ஸ் என்பவரும் இதே அபிப்பிராயந்தான் கொண்டிருக்கிறார்.

"ஒரு மனிதனின் கை விரல் நகம், அவன் மேல்சட்டைக் கை, பூட்ஸ், கால் சட்டையின் முழங்கால், ஆள் காட்டி விரலிலும் கட்டை விரலிலும் காய்த்துப் போயிருக்கும் தடிப்பு, முக ஜாடை, உள் சட்டைக் கைப் பொத்தான்- இவைகளில் ஒவ்வொன்றும் அவன் தொழில் என்ன என்பதைத் தெளிவாய்க் காட்டிவிடும்" என்று ஷெர்லாக் ஹோம்ஸ் சொல்லுகிறார்.

'கிரேக்க துபாஷியின் பிரதாபம்' என்ற கதையில், ஷெர்லாக் ஹோம்ஸ், அவருடைய சகோதரர் மைக்ராஃப்ட் இரண்டு பேரும் டயொஜினீஸ் கிளப் என்ற கட்டிடத்தில் ஜன்னலோரமாய் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். யாரோ இரண்டு அந்நியர்கள் அப்போது இவர்கள் கண்ணுக்குத் தென்படுகிறார்கள்.

"இந்த மகா அழகான ரூபங்களைப் பார்த்தாயா! இதோ நம்மை நோக்கி வரும் இரண்டு மனிதர்களையும் பார்" என்றார் மைக்ராஃப்ட்.

"பில்லியர்ட்ஸ் விளையாட்டில் மார்க் போடுகிறவர் ஒருவர்; அவருடைய துணைவர் மற்றவர்- இந்த இரண்டு பேரையுந்தானே?"

"ஆமாம்; அந்தத் துணைவர் யார்?"

அந்நியர் இருவரும் ஜன்னல் அருகே வந்ததும் நின்றுவிட்டார்கள். அவர்களில் ஒருவருடைய மேல் சட்டையில், சாக்கட்டிக் கோடுகள் சில இருந்தன. இவைகளைக் கொண்டே அவர் பில்லியர்டு-மார்க்கர் என்று ஊகித்துவிட்டார் ஷெர்லாக்! பில்லியர்டு - மார்க்கரின் துணைவர் மிகக் குள்ளமாய்க் கறுத்திருந்தார். அவர் தொப்பி பின் பக்கமாய்ச் சாய்ந்திருந்தது. கட்கத்திலே பல சிப்பங்களை அவர் இடுக்கிக்கொண்டிருந்தார்.

"பழைய சோல்ஜர் என்று தெரிகிறது."

"சரிதான். மிகவும் சமீபத்திலேயே வேலையை விட்டு விலகியிருக்கிறார்" என்றார் மைக்ராஃப்ட்.

"இந்தியாவில் சேவை செய்தவர்."

"சாதாரண ஆபீஸர்."

"பீரங்கிப் படையில் இருந்திருக்கவேண்டும்" என்றார் ஷெர்லாக்.

"மனைவியை இழந்தவர்."

"ஆனால், குழந்தை இருக்கிறது."

"குழந்தை அல்ல, தம்பி; குழந்தைகள் என்று சொல்" என்று மைக்ராஃப்ட் திருத்தினார்.

பக்கத்தில் இருந்த வாட்ஸன் என்ற நண்பருக்கு, இந்த இரு நிபுணர்களின் பேச்சையும் கேட்டு ஒரே பிரமிப்பாயிருந்தது. இருவரும் பிறகு சிரித்துக்கொண்டே தங்கள் ஊகங்களின் காரணங்களை விளக்கினார்கள்.

"மைக்ராஃப்டின் கண், நீரைப் போல் தெளிந்த அலாதியான மங்கிய பழுப்பு நிறமாயிருக்கும். தொலைவிலுள்ள எங்கேயோ பதிந்து உள்முகமாய்த் திரும்பிய சிந்தனையொன்று அந்தக் கண்ணில் எப்போதும் தேங்கியிருக்கும். ஷெர்லாக் தமது முழுச் சக்தியையும் செலுத்தி ஆலோசிக்கும்போது மட்டுமே அவர் கண்ணில் இந்தக் குறி தென்படும்" என்று ஷெர்லாக்கின் நண்பரான இந்த வாட்ஸன் என்பவரே கூறுகிறார்.

கற்பனைக் கதை கிடக்கட்டும்; இனிப் பிரத்தியட்ச உலகத்தைப் பார்ப்போம். கோலரிட்ஜ் என்ற கவிஞரின் கண்களைப்பற்றி இரண்டு பேரின் வர்ணனை இங்கே எனக்கு ஞாபகம் வருகிறது. "கோலரிட்ஜின் கண்கள் விசாலமானவை. அவை

களில் ஓர் இங்கிதம் ததும்பும்; அதோடு அலாதியான ஒரு மயக்கம்-கனவு காண்பது போன்ற ஒரு கோலம் - தென்படும்'' என்கிறார் டிக்வின்ஸி என்ற பிரபல நூலாசிரியர். ''அவைகள் லேசான மஞ்சள் கலந்த பழுப்பு நிறம். அவைகளில் அருள் கனிந்த துயரம் ஒன்று நிறைந்திருக்கும்; சிறிது வியப்புற்றபோது தோன்றுவது போன்ற மனங்குழம்பிய வேதனை ஒன்றும் அவைகளிலே படர்ந்திருக்கும்'' என்று அதே கண்களைக் கார்லைல் என்ற பிரசித்தமான நூலாசிரியர் வர்ணிக்கிறார். ஹாஸ்லிட் என்ற ஆசிரியரின் கண்களில் ஒருவிதக் கள்ளமும் சில சமயம் ஒரு குரூரமும் தென்படுமாம். 'முகத்தின் சுக்கான்' என்று மூக்கையே ஹாஸ்லிட் குறிப்பிடுகிறார். ஒரு மனிதனின் குற்றங் குறைகளை அவன் மூக்கைக்கொண்டு நாம் கண்டு பிடித்துவிடலாம் என்று அவர் சொல்கிறார். உங்கள் அபிப்பிராயம் என்ன? கண்ணா, மூக்கா - எது ஒருவனுடைய குணத்தை நன்றாய்க் காட்டும்?

நல்ல படிப்பாளியான நண்பர் ஒருவர் இந்த விஷயத்தைப்பற்றி எழுத்து மூலம் என்னோடு சர்ச்சை செய்தார். 'ஒரு மனிதன் இயல்பாய் நடந்துகொண்டால், அவன் தோற்றத்தைக்கொண்டு அவனுடைய குணத்தைக் கண்டுபிடிப்பது துர்லபம்' என்று அவர் கருதுகிறார். தம்முடைய இந்த அபிப்பிராயத்தை ஓர் ஓவியரிடம் ஒரு சமயம் அவர் சொன்னார். ''இல்லவே இல்லை. ஒரு மனிதனின் தோற்றத்தைப் பார்த்து அவன் குணத்தை நான் எப்போதும் கண்டுபிடித்து விடுவேன்; இதில் நான் ஏமாறவே மாட்டேன். 'ஒருவனுடைய முகத்திலே ஓயாத புன்னகை தவழலாம்; தவழ்ந்தும் அவன் பெரிய துஷ்டனாயிருக்கக்கூடும்' என்ற ஷேக்ஸ்பியரின் வாக்கை ஒருகால் நீங்கள் மேற்கோள் காட்டுவீர்கள்'' என்றார் ஓவியர். ''இல்லை. ஷேக்ஸ்பியர் வாக்கிலிருந்து மேற்கோள் வேண்டுமானால், இதைவிடச் சிறந்ததை நான் எடுத்துக் காட்டுவேனே. மக்பெத் என்ற நாடகத்தில் வரும் கிழ அரசன், மிகுந்த லௌகிக ஞானம் உடையவன் என்பார்கள். தனக்குத் துரோகியாகத் திரும்பிய ஒரு பிரபுவைப் பற்றி அந்த அரசன் 'அகத்தினழகை முகத்திலே காண்பதற்குரிய வழி எதுவும இல்லை. இவன் ஒரு கனவானாயிருந்தான்; அதைக் கண்டு இவனைப் பரிபூர்ணமாய் நம்பிவிட்டேன்' என்று சொல்கிறான்'' என்றார் நண்பர்.

என் நண்பர் சகல பிரிட்டிஷ் நாவல்களையும் விடாமல் படித்திருக்கிறார். ஆகவே, அவர் மேலும் பேசுகையில், ''டிக்கன்ஸ் சித்திரிக்கும் கதாபாத்திரங்கள், பிறருடைய நடையுடை பாவனைகளை மிக அதிகமாய்க் கவனிக்கிறார்கள். இப்படிக் கவனிக்கும் அபூர்வத் திறமை டிக்கன்ஸுக்கே உண்டு. இதை அவர் தம் பாத்திரங்கள்மீது ஏற்றிவிடுகிறார். சில சமயம் அவர் இதில் மிதமிஞ்சிப் போவதால், நம்மால் நம்ப முடியாமல் போகிறது'' என்றார். உதாரணமாக, டேவிட் காப்பர்பீல்டு என்ற சிறுவன் யூரா ஹீப் என்ற சிப்பந்தியைப்பற்றிப் பின்வருமாறு வர்ணிப்பதை நண்பர் எடுத்துக் காட்டினார்:

''அவன் என்னைப் பார்த்தான்; ஆக்னிஸ் என்பவளைப் பார்த்தான்; தின்பண்டத் தட்டுகளைப் பார்த்தான்; அறையில் உள்ள சகல

வஸ்துக்களையுமே பார்த்தான். ஆனால், எதையுமே பார்க்காதவனைப் போல் தென்பட்டான். சிவந்த தன் கண்களால் அவ்வளவு நேரமும் தன் எஜமானையே பரமவிசுவாசத்தோடு பார்த்துக்கொண்டிருப்பவனுகத்தான் தோன்றினுன்.''

இன்னும் இளமை மாருத பருவத்திலே, டேவிட் காப்பர்பீல்டு மற்ருேர் இடத்தில் சொல்வது இது: ''நான் ஒன்றையும் பார்க்கவில்லை. ஆனல், சகலமும் என் கண்ணில் தென்பட்டது. மிக்காபரிடம் நான் இருந்த காலத்திலேயே இந்தச் சக்தி எனக்கு ஏற்பட்டுவிட்டது.''

இப்படிக் கவனிக்கும் காட்சிகள் எப்போதும் பளிச்சென்று ஞாபகத்தில் துலங்குகின்றன. ஆசிரியர் டிக்கன்ஸ் இவ்விதம் கவனிப்பதில் நிபுணர். தம்மையே மறந்த ஒரு பரவச நிலையில், தாம் வர்ணிக்கும் காட்சிகளையெல்லாம் அவர் தத்ரூபமாய்க் காண்கிருர்; உணர்கிருர். தாம் சிருஷ்டிக்கும் பாத்திரங்களையெல்லாம் அவர் நன்ருய் அறிவார். நாமும் அவர்களைத் தெளிவாய்ப் பார்க்கும்படி, உணரும்படி, அறியும்படி அவர்களுடைய குணங்களையெல்லாம் திரும்பத் திரும்பச் சொல்லி, அழுத்தமாய் நம் மனத்தில் பதியவைக்கிருர். சுருங்கச் சொன்னல், தற்கால நாவலாசிரியர்கள் தொல்லைப்படும் ஓர் அவதியை அவர் சுலபமாய்க் கடந்துவிடுகிருர். 'ஐயோ! மனிதனின் மதிப்பை நிச்சயமாய்ச் சோதித்துச் சொல்லக்கூடிய மார்க்கம் எதுவும் இல்லையே! அவன் இயல்பிலேதான் எத்தனைவித முரண்பாடுகள்!' என்று யூரிபைட்ஸ் என்ற புராதன கிரேக்க நாடகாசிரியர் சொல்கிருரே, இதுவே அந்த அவதி.

மனித இயல்பில் பல குழப்பங்கள், பல முரண்பாடுகள், பல சிக்கல்கள் அடங்கியிருக்கின்றன. தற்கால ஆசிரியர்களுக்கு இது நன்ருய்த் தெரியும். புதைந்து கிடக்கும் உள் மனத்தைச் சலித்தெடுக்கவோ, நினைவு அருவியைத் துரத்திப் பிடிக்கவோ அவர்கள் முயலாதபோதுகூட, பாத்திரங்களின் தோற்றத்தை அவர்கள் லேசாகத்தான் சித்திரிக்க முடியும். பார்வை, ஜாடை இவைகளைக் கொண்டு குணத்தையும் உள்ள உணர்ச்சியையும் அவர்கள் கோடி காட்டத்தான் முடியும். டிக்கன்ஸின் மேதை அவர்களில் ஒருவருக்கு இருக்குமானுல்கூட, 'ஒரு மனிதனின் பெயரும் தோற்றமும் அவனுடைய குணுதிசயத்தைக் காட்டக் கடவுள் அருளிய தடையங்கள்' என்று டிக்கன்ஸ் கொண்ட கோட்பாட்டை அவரால் ஒப்புக்கொள்ள முடியாது.

டிக்கன்ஸின் 'வேட்டையாடப்பட்டவன்' என்ற நாவலில் கதையைச் சொல்பவன், ''உடம்பின் தோற்றத்தையும் நடையுடை பாவனையையும்விட உண்மையாக ஒருவனுடைய குணுதிசயத்தைக் காட்டக்கூடியது வேறில்லை. இந்தக் கலை கஷ்டமானது. இதை நன்ருய்ப் பயில்பவர் இல்லை. ஏதோ சில சர்வ சாதாரணமான முகபாவங்களைமட்டும் ஜனங்கள் பிரியமாக ஏற்றுக்கொண்டு விடுகிருர்கள். மிக நயமான முகபாவங்களே உண்மையானவை; அவைகளை அவர்கள் அசட்டை செய்கிருர்கள்'' என்று கூறுகிருன். பின்னல் அவனே செய்யும் தவறுகளுக்கெல்லாம், அவனைப் பிறர் கெடுத்ததுதான் காரணமாம். முதல் முதல் ஒருவரைப்பற்றி நம் மனத்தில் விழும்

தோற்றம் ஒரு நாளும் பிசகுவதில்லையாம்.

இதையெல்லாம் டிக்கன்ஸ் உண்மையிலே நம்பினரா? அல்லது நாவலாசிரியர் என்ற முறையில் தாம் கடைப்பிடித்த வழி சரி என்று சாதிக்கத்தான் இப்படி எழுதினரா? மேலே சொன்ன நாவலில், ஒரு துன்மார்க்கன் வருகிறன். அவன் கண்கள் விசாலமானவை. பார்வைக்குக் கள்ளங் கபடமற்றவன்போல் தோன்றுகிறன். ஆனல் தலைமயிரை என்னவோ நடுவிலே வகிடு பிரித்து வாரிக்கொண்டிருக்கிறன். அவன் பெயரோ ஜுலியஸ் ஸ்லிங்டன். இந்தப் பெயரைக் கேட்டதுமே, பெருந் தொகைக்கு இன்ஷியூர் செய்திருந்த பல மருகிகளைக் கொலை செய்தவன் என்று அவனைப்பற்றி மற்றவர் அறிந்து கொண்டிருக்கலாமாம். தலை நடுவிலே வகிடு பிரித்துக்கொண்ட இந்தத் 'துஷ்டத்தன'த்தைப்பற்றி நிபுணர் மைக்ராஃப்டைக் கேட்டால் என்ன சொல்லியிருப்பாரோ!

இதில் எல்லாம் ஒரு தொல்லை என்னவென்ருல், தங்கள் கதாபாத்திரங்களைப்பற்றித் தாங்கள் குறிப்பிடும் நடையுடை பாவனைகளின் கருத்து ஆசிரியர்களுக்கு முன்னடியே தெரிந்திருக்கிறது. சிக்கலான சந்தேகங்களையெல்லாம் வாட்ஸனின் வாய்ப் பிறப்பாய்க் கூறி, ஷெர்லாக்கைத் தூண்டி விடுகிறர் கோனன் டாயில். 'ரோகர் அக்ராய்டு கொலை' என்ற நாவலில், தம் கதாநாயகனுக்கு அமாநுஷ்ய சக்திகளை மிஸஸ் கிருஸ்டி அளித்து விடுகிறர். யூரியா என்ற கதாபாத்திரத்தைப் பற்றித் தமக்குத் தெரிந்ததையெல்லாம் டேவிட் காப்பர்பீல்டு வாக்கில் போட்டுவிடுகிறர் டிக்கன்ஸ். ஆனல், பிரத்தியட்ச உலகத்திலோ கொலைகாரர்கள், மகா அழகாயிருக்கலாம்; பொய்யர்கள், உண்மைபோல் பேசும் கலையில் தேர்ந்திருப்பார்கள்; அப்பாவிப் பெண்கள், பெரும் பிடாரிகளாய்க் கிளம்பி விடுகிறர்கள்; கள்ளமற்ற மக்களைத் தூர்த்தர்கள் ஏமாற்றி விடுகிறர்கள். நாமுங்கூட நம்ப முடியாததையெல்லாம் நம்பி விடுகிறேம். மனிதரை நாம் மதிப்பிடுவது கண்களைக் கொண்டா? மூக்கைக் கொண்டா? வாயைக் கொண்டா?

நான் ஒரு நாவலாசிரியன் என்ற முறையில் இந்த மாதிரி வர்ணனைகளை இனியுந்தான் எழுதிக்கொண்டிருப்பேன். ஏனென்ருல், இவைகள் ஓரளவு கதாபாத்திரங்களின் குணத்தைக் காட்டுகின்றன. இந்தச் சின்னஞ்சிறு குறிப்புக்களுங் கூடச் சரியில்லையோ என்று நாம் மனந் தளர வேண்டியதில்லை.

ஜனநாயகத்திலே பொய்யும் மெய்யும்

ஜனநாயகத்திலே பொய், மெய் என்று இரண்டு வகை உண்டு: 'நான் உனக்குச் சமம்' என்பது பொய் ஜனநாயகம்; 'நீ எனக்குச் சமம்' என்பது மெய் ஜனநாயகம்.

—'ஆன்ஸர்ஸ்'

எனக்குப் பிடித்தவர் வக்கீல்கள்

ஜெங்கின் லாயிடு ஜோன்ஸ்

இந்த ரஸமான கட்டுரையை எழுதியிருப்பவர், ஓக்லஹாமா என்ற அமெரிக்க மாகாணத்தைச் சேர்ந்த டுல்ஸா என்னுமிடத்தில் வெளியாகும் 'ட்ரிப்யூன்' என்ற பத்திரிகையின் ஆசிரியர். இதை, 'கேஸ் அண்டு காமெண்ட்' என்ற அமெரிக்க லாயர் சங்கப் பத்திரிகையில் அவர் எழுதியிருக்கிறார்.

வக்கீல் என்றாலே ஜனங்களுக்கு எவ்வளவு தப்பபிப்பிராயம் உண்டாகி விடுகிறது! இதைப்பற்றி நான் பல முறை சிந்தித்திருக்கிறேன்.

ஒரு சமயம் பாஸ்வெலுடன் டாக்டர் ஜான்ஸன் பேசிக்கொண்டிருந்தபோது, அவரே இந்த மாதிரி தப்பபிப்பிராயத்தைக் காட்டி விட்டார். அவர் சொன்னார்: "எந்த மனிதனைப்பற்றியும் நான் கெடுதலாகப் பேச மாட்டேன். ஆனால், இந்த ஆள் யார் தெரியுமோ? இவர் ஒரு வக்கீல்."

வக்கீல்களைப்பற்றிய இந்தத் தப்பபிப்பிராயத்துக்கு ஓரளவு காரணம் பத்திரிகைகள் தான். கடலிலே பிரம்மாண்டமான பனிக்கட்டி மிதக்கிறது. அதில் ஒரு சிறு பகுதிதான் நீர் மட்டத்துக்கு மேலே தெரியும். மிச்சமெல்லாம் நீரில் முழுகியிருக்கும்; வெளியே தெரியாது. இதைப் போலவே, எண்ணற்ற வக்கீல்கள் தொழில் புரிந்தாலும், சிலர் பெயரே பத்திரிகைகளில் வெளிவந்து அடிபடுகிறது. மற்றவரெல்லாம் அழகாகவும் அமைதியாகவும் தங்கள் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி பத்திரிகைச் செய்திகளில் இடம் பெறும் வக்கீல்கள் பெரும்பாலும் சுயவிளம்பரக்காரர்கள்; ஆர்ப்பாட்டக்காரர்கள். ஒழுங்காகவும் அமைதியாகவும் நடப்பவர் யாரானால் என்ன? அவர்களைப்பற்றிய செய்தி பத்திரிகைகளில் வந்தால்தான் ருசியாயிருப்பதில்லையே!

வக்கீல்களுக்கும் லட்சியம் உண்டு. ஆனால், அந்த லட்சியத்துக்கும் தினசரி நடைமுறைக்கும் இடையிலே அநேக சமயம் பெருத்த வித்தியாசம் நேர்கிறது. பத்திரிகைத் தொழிலிலுந்தான் இதே போல லட்சியத்துக்கும் நடைமுறைக்கும் இடையிலே வித்தியாசம் நேர்கிறது.

1850-ஆம் ௵ சட்ட மாணவர்களுக்கு ஆபிரகாம் லிங்கன் ஒரு பிரசங்கம் செய்தபோது வக்கீல் தொழிலின் லட்சியத்தை மிக உன்னதமாக வகுத்துத் தந்தார்: "யாரும் வழக்காடவே கூடாது என்று பிரசாரம் செய்யுங்கள். உங்கள் அண்டை அயலார்கள் வழக்காடினால், உங்களால் இயன்ற

மட்டில் அவர்களை ராஜி செய்து வையுங்கள். சண்டையிடுவோரைச் சமாதானம் செய்து வைக்கும் வக்கீலே உத்தமனாய் வாழ முடியும். அப்போதும் அவனுக்குப் போதிய தொழில் வருமானம் கிடைக்கும்.''

தாமஸ் புல்லர் என்பவர் சொன்னார்: ''நாவை மனச்சாட்சி குழப்பி விடக்கூடிய வழக்கிலே வாதிக்கப் போகாதவனே நல்ல வக்கீல்.''

ஆனால் இப்படிப்பட்ட உன்னத லட்சியத்தையும், அநுபவ பூர்வமாக நடந்துகொள்ள வேண்டிய லௌகிகத்தையும் ஒன்றோடொன்று போட்டு நாம் குழப்பலாகாது.

இதை எமெர்ஸன் வெகு தெளிவாக விளக்கியிருக்கிறார்: ''எல்லாக் கட்சி நியாயங்களையும் துருவி ஆராய்வதல்ல வக்கீலின் வேலை; தம் கட்சிக்காரனைக் காப்பாற்ற முழு மூச்சுடன் உழைப்பதே அவர் வேலை.''

ஜனங்களையெல்லாம் சமாதானம் செய்து வைப்பது, தூய நீதி எது என்று தேடித் தெளிவது, நீதிபதிக்குத் துணை புரிவது இவையே வக்கீலின் வேலை என்பது லட்சியம். வக்கீல் என்றால், தொல்லை விளைப்பவன், உண்மையைத் திரிப்பவன், நியாயத்தைக் காற்றில் பறக்க விட்டுக் கொடியவனாயிருந்தாலும் தன் கட்சிக்காரனை மூர்க்க வெறியுடன் ஆதரிப்பவன் என்பது பொதுவாய் நிலவும் அபிப்பிராயம். உண்மை இந்த இரண்டுக்கும் இடையிலே எங்கோ இருக்கிறது.

வக்கீல்களைப்பற்றி வெகு காலமாக எத்தனையோ விகடத் துணுக்குகள் வழங்கி வருகின்றன. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் ரோமன் நீதிஸ்தலம் ஒன்றில் மார்ஷல் என்ற புத்திமான் தம் வக்கீலைப் பார்த்து இப்படிச் சொன்னாராம்: ''என் வழக்கிலே அடிதடியில்லை; குத்துக் கொலையில்லை; விஷமிடல் இல்லை. மூன்றே மூன்று ஆடுகளைப்பற்றியது என் வழக்கு. அந்த ஆடுகளைப் பக்கத்து வீட்டான் திருடிக் கொண்டு போய் விட்டான் என்பதே என் பிராது. அதை நிரூபிக்கச் சொல்கிறார் ஜட்ஜி. ஆனால், நீங்களோ தடபுடலான வார்த்தைகளைக் கொட்டி, ஆர்ப்பாட்டமான அபிநயங்கள் பிடித்து, கன்னே ரணகளம்பற்றியும், மித்ரிடாடிக் யுத்தம்பற்றியும், கார்த்தேஜினியரின் துரோகம் பற்றியும் வர்ணித்து விஸ்தரித்துக் கொண்டிருக்கிறீர்கள். போதும், என் வக்கீல் துரையே; இனி என் மூன்று ஆடுகளையும்பற்றிக் கொஞ்சம் பேசுங்களேன்.''

இந்த வேடிக்கையெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். வக்கீல்களுக்கே பிரத்தியேகமான நற்குணங்கள் எவையேனும் உண்டா? உண்டு. அவர்களுக்குரிய துர்க்குணங்களுக்கு ஈடு கொடுத்து, அதற்கு மேலேயும் மிஞ்சக்கூடிய நற்குணங்கள் உண்டு. இது மிகைபடுத்திப் புகழும் புகழ்ச்சி அல்ல. ஏனென்றால், நானே ஒரு காலத்தில் அவர்களிடம் ஒரு நற்குணமும் இல்லை என்று தான் நினைத்திருந்தேன்.

நான் காலேஜில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், 'ஐயோ! சர்க்காரை அநியாயமாய் வக்கீல்கள் கைப்பற்றிக்கொண்டு ஆள்கிறார்களே' என்று வருத்தப் பட்டேன். என் புரொபஸர்களோ சகல விஷயமும் அறிந்தவர்களாய்த் தோன்றினார்கள். 'புரொபஸர்கள் சர்க்காரை ஏற்று நடத்தினால்

எவ்வளவு ஜோராயிருக்கும் என்று நான் எண்ணினேன்.

1933-இல் என் காலேஜ் படிப்பு முடிந்து வெளியே வந்தேன். உடனே புரொபஸர்களின் சர்க்கார் ஏற்பட்டுவிட்டது. ஆனால், அந்த மாதிரி சர்க்காரை இனி ஒரு போதும் காண எனக்கு விருப்பம் இல்லை.

தத்துவ ஞானிகளும் லட்சிய வாதிகளும் சர்க்காரை ஏற்று நடத்தினால் நன்றாயிருக்கும் என்று அன்று நான் நினைத்தேன். பிளேட்டோ என்ற அறிவாளியும் அப்படியே நினைத்தார். ஆனால், லட்சியவாதிகளுக்கு ஆவேசம் பிடித்து விடுகிறது. ஆவேசக்காரர்கள் சிலசமயம் கொடிய பிசாசுகளாய் மாறிவிடுகிறார்கள். பிரான்ஸிலே அவர்கள்தான் பலருடைய தலைகளை வெட்டினார்கள். எகாடெரின்பர்க் நகரத் தெருக்களில் அவர்கள்தான் பலரைப் படுகொலை செய்தார்கள். டாச்சா நகரில் அவர்கள் சுட்டெரித்த மனித அஸ்திக் குவியல்மீது நான் நின்றிருக்கிறேன். அவர்கள் இனி எனக்கு வேண்டவே வேண்டாம்.

வக்கீல்கள் நடத்தும் சர்க்கார் கொஞ்சம் நமக்கு எரிச்சல் மூட்டுவது உண்மை. அதிலே சீர்திருத்த வேலைகள் நிதானமாய் நடக்கின்றன. ஆனால், அதிக்கிரமச் செயல்களும் குரூரங்களுந்தான் அப்படியே நிதானமடைகின்றன. ரத்தம் கக்கிக்கொண்டிருக்கும் இந்த உலகத்தில் இது எவ்வளவோ மேல் இல்லையா?

வக்கீல்கள் ஒழுங்கை உணர்ந்த மாணுக்கர்கள். சம்பிரதாயத்தைப் போற்றுகிறவர்கள். நேற்றைய விதிகளை, இன்று - முடிந்தால் நாளைக்குந்தான் - பிரயோகிக்க விரும்புகிறவர்கள். இதைக் கண்டு லட்சியவாதிகளுக்கு ஆத்திரம் வருகிறது. ஆனால், நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டும் பொது மக்களின் உணர்ச்சிகளுக்கேற்றபடி ஆடிக்கொண்டும் சர்க்கார் நடக்குமானால் எந்த நாடுதான் முன்னேற முடியும்? சித்தம் போன போக்காய்ப் போகும் நாடு எதுவும் நெடுநாள் வாழாது.

வக்கீல்களின் இன்னொரு குணம் எனக்கு மிகவும் பிடித்தமானது. அவர்கள் தாராதரம் தெரிந்தவர்கள். ஆளைப்பற்றிக் கவனிக்காமல் விஷயத்தை ஆராயக்கூடியவர்கள். அவர்களுக்குக் கோபத்தை அடக்கத் தெரியும்; குரோதம் கொள்ளாதிருக்கத் தெரியும்; அபிப்பிராய வேற்றுமைகளை அவைகளுக்குரிய இடத்தில் ஒதுக்கி வைக்கத் தெரியும்.

'நீலி வசீகரம்' என்ற நாடகத்தில், ஷேக்ஸ்பியர் ஓர் அருமையான வரியை எழுதியிருக்கிறார்: "எதிர் எதிர் வக்கீல்கள் மகா கடுமையாய்த்தான் போராடுகிறார்கள்; என்றாலும், நண்பர்களாய் உண்டு குடிக்கிறார்கள்."

இது கேவலமா? ஒரு மனிதனின் நற்குணத்தை நம்ப முடியாதவனால் இன்னொரு மனிதனின் துர்க்குணத்தையும் நம்ப முடியாது. வாதிடும்போது உக்கிரமாய் வாதிக்கும் திறமையுள்ள வக்கீலே வாழ முடியும்.

வக்கீல்களிடம் உள்ள மற்றொரு தன்மையும் எனக்குப் பிடித்தமானது. நியாயம் எது என்று அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். நியாயத்தை அழிக்க முயலும் வக்கீல்களுக்குக்கூட இந்த அறிவு தேவை.

இந்த உலகத்திலே ஒரு பெரிய குறை எது என்றால், மிக்க அந்தரங்க சுத்தியும் நாணயமும் உள்ள மனிதர்களுக்கெல்லாம், நியாயம் எது என்று புரிவதில்லை. தங்கள் உணர்ச்சியில் படுவதே நியாயம் என்று அவர்கள் நினைத்து விடுகிறார்கள்; முறையாய்ச் சிந்தித்துப் பார்த்து நியாயத்தை அறிய அவர்களால் முடிவதில்லை. கிளிப்பிள்ளை போல அரைகுறை உண்மையான சில சூத்திரங்களை அவர்கள் கடைப்பிடித்து விடுகிறார்கள். அவர்களுடைய உத்தேசங்கள் தவறாயிருக்கின்றன; முடிவுகள் அபத்தமாயிருக்கின்றன. இந்தப் படுகுழிகளை வெட்டுகிறவர்கள் வக்கீல்கள் தான்; ஆனால், இந்தப் படுகுழிகளில் தாங்கள் விழ மாட்டார்கள்.

வக்கீல்களே, நீங்கள் தான் சமூகத்துக்கு நிலைப்புத் தரும் சக்தி. கடிகார மெயின் ஸ்பிரிங் ஒரேயடியாய்த் தளர்ந்துவிடாதிருக்கப் பூட்டிய 'பாலன்ஸ் சக்கரம்' போல், ஜனங்களின் வேகத்தைத் தடுத்துச் சிறிது சிறிதாக முன்னேற வழி வகுப்பவர் நீங்களே.

மனித சமூகத்துக்கு நீங்கள் புரியும் இந்த உன்னத சேவைக்காக உங்களிடம் நான் பெரிதும் பிரியம் செலுத்துகிறேன்.

சில சமயம் எங்களுக்கு உங்களோடு வாழ்வது கஷ்டமாயிருக்கிறது.

ஆயினும், நீங்களில்லாமல் நாங்கள் வாழ முயன்றால், அந்த வாழ்வு எவ்வளவு பெரிய அவந்தரையாகிவிடும்!

சட்டசபை அங்கத்தினர்

ஜிம்மி டியூராண்டி: நான் நம் சட்டசபை (காங்கிரஸ்) நடக்கும்போது பார்க்கப் போயிருந்தேன். அங்கே ரொம்பப் பரபரப்பாய் விவாதம் நடந்துகொண்டிருந்தது. 'நான் நம் கடற்படைக்கு 15 லட்சம் கோடி டாலர் வோட் செய்கிறேன்' என்றார் ஓர் அங்கத்தினர். இன்னொருவர் துள்ளி யெழுந்து, 'நான் நம் தரைப் படைக்கு 25 லட்சம் கோடி டாலர் வோட் செய்கிறேன்' என்றார். மற்றொருவர், 'இரவல்-குத்தகை இனத்துக்கு 60 லட்சம் கோடி டாலர் வோட் செய்கிறேன்' என்றார். இந்தச் சமயத்தில் சபையில் ஏதோ ஒரு பெரிய கலவரம் திடீரென்று ஏற்பட்டது.

காரி மூர்: அது என்ன விஷயம்?

டியூராண்டி: ஓ! அதுதானே சொல்ல வந்தேன். ஓர் அங்கத்தினர் போட்ட கூச்சல் கேட்டது. அது இதுதான்: 'என் நிக்கல் காசு ஒன்று கீழே விழுந்துவிட்டது. அது என் கையில் அகப்படுகிற வரையில் எவனும் இந்த ஹாலை விட்டுப் போகக்கூடாது.'

—'நியூ யார்க் போஸ்ட்'

ஊழலை உள்ளே வைத்து வெளிப்பூச்சுப் பூசுவதா? நம் பழைய சுத்த முறையை மேற்கொள்வதா? எது மேல்?

ஆரோக்கியத்தில் அழகு

திருமூர்த்தி ஸாம்பசிவ ராவ்

நம் பெரியோர்கள் நம் கடமையைச் செய்யும்போது ஆரோக்கியமும் ஆனந்தமும் கலந்து வரும்படி சில முறைகளை வகுத்திருக்கிறார்கள். அவற்றில் முக்கியமானது ஸ்நானம் செய்யும் முறை. ஸ்நான விதிகளைப்பற்றி ரிஷிகள் பலர், பல நூல்களில் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் கௌதமர் தாம் எழுதிய தர்மசூத்திரங்களில் ஸ்நான சூர்ணங்கள் சில வற்றைப்பற்றியும் அலங்காரங்கள் சிலவற்றைப்பற்றியும் விரிவாகச் சொல்லியிருக்கிறார். எண்ணெய் தேய்த்தபின் தலைக்கு உபயோகிக்கும் பொடிகள் வேறு, குளிக்கும் போதெல்லாம் சோப்புக்குப் பதிலாக உடலுக்கு உபயோகிக்கும் பொடிகள் வேறு என்ற இரு வகைகள் அவற்றில் இருந்தன.

எண்ணெய் தேய்த்துக்கொள்ளும்போது உடம்பைப் பிடித்து விடுவது என்பதைப்பற்றிய விவரத்தையும் அவர்கள் எழுதிய நூல்களில் காணலாம். நாம் இப்பொழுது அலட்சியம் செய்து கைவிட்டு வரும் சில ஸ்நான முறைகள், ரிஷிகளின் காலத்தில் மிகவும் பழக்கத்தில் இருந்தன. அவற்றால் உடலுக்கு நன்மையும் அழகும் சேர்ந்து அமைந்திருந்தன.

வேறு சில சூத்திரங்களில் ஸ்நானத்தை ஐந்து வகைப் படுத்தியிருப்பதைக் காணலாம்: 1. ஆக்கினேயம்-பஸ்ம ஸ்நானம். 2. வாருணம்-தண்ணீரால் செய்யும் ஸ்நானம். 3. பிராம்மியம் - ஆபோஹிஷ்டா மயோபுவ: என்னும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே செய்யும் ஸ்நானம். 4. வாயவ்விய ஸ்நானம்-பசுக்களின் அடிச்சுவடுகள் கிளப்பிய புழுதி உடலில் படிய நிற்பது; இது சுத்தி ஸ்நானம் எனப்படும். 5. திவ்ய ஸ்நானம் - வெயில் படும்படி நிற்பது. இந்த முறையைப்பற்றி நாம் மறந்துவிட்டாலும் பிற நாட்டார் வெகுவாக இதைக் கையாளுகிறார்கள். சூடு உறைத்து வேர்வையால் உடம்பு நனையும் வரையில் வெயிலில் நிற்பது பழைய முறை. இதைச் சிறிது மாறுதலுடன் இயற்கை வைத்திய நிபுணர்கள், 'சூரிய ஸ்நானம்' என்கிறார்கள். மேல்நாட்டுப் பெண்மணிகள் சுத்த வெள்ளையாகிய தம் உடல் நிறத்தைச் சற்று மங்கிய சிவப்பாக்கிக் கொள்ள 'ப்யூடி ட்ரீட்மெண்ட்' என்று சொல்லிக்கொண்டு ஸ்நான உடையுடன் வெயிலில் சமுத்திரக் கரையில் படுத்துக்கொண்டோ, உட்கார்ந்தோ இந்த ஸ்நான முறையைக் கையாளுகிறார்கள்.

நித்தியம், நைமித்திகம் என்று ஸ்நானங்கள் இருவகைப்படும். தினந்தோறும் செய்வது நித்திய ஸ்நானம். மேலே காட்டிய ஐந்தும்

மூலம்: சௌபாக்கிய (தெலுங்கு), சென்னை.

நித்திய ஸ்நானங்களே. நைமித்திக ஸ்நானம் என்பது அசுத்தப்பட்ட காலங்களில் செய்வது.

இல்லறத்தில் ஈடுபட்டிருப்பவன் நித்திய ஸ்நானங்களுக்குப் பின்பு சந்தனம் போன்ற வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண்டு உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று முனிவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வேறொரு சூத்திரத்துக்கு வியாக்கியானம் செய்யும் 'மஸ்கரீய பாஷ்யம்', சுகந்த ஸ்நானத்தைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறது. நெல்லிக்காயுடன் பல வாசனைப் பொருள்களைக் கூட்டிக் காய்ச்சிய எண்ணெயைத் தேய்த்து ஸ்நானம் செய்யும் முறைதான் அது. இடுப்பிலிருந்து கீழ்ப்பாகத்தைமட்டும் தண்ணீரில் சுத்தம் செய்து இடுப்புக்கு மேல் பாகத்தை ஈரத்துணியால் துடைத்துச் சுத்தம் செய்யும் முறையைக் 'காபில ஸ்நானம்' என்று சொல்லியிருக்கிறார்கள். விஷ்ணுபாதங்களைத் தியானித்துக்கொண்டே மனத்தால் ஸ்நானம் செய்வதற்கு 'மானவிக ஸ்நானம்' என்று பெயர்.

தினந்தோறும் ஸ்நானம் செய்வதற்கு உரிய காலங்களை விதித்திருக்கிறார்கள். 'விடியற்காலையில் நட்சத்திரங்கள் மறையாமல் மின்னிக்கொண்டிருக்கும் பொழுதே செய்யும் ஸ்நானம் முதல் தரம்; நட்சத்திரங்கள் வெலவெலத்துக் கிழக்கு வெளுக்கும் சமயத்தில் செய்யும் ஸ்நானம் நடுத்தரமானது; சூரிய உதயத்துக்குப் பின் செய்யும் ஸ்நானம் கடைத்தரமானது' என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள். இப்படியே, 'மாலையில் சூரிய அஸ்தமனத்துக்கு ½ மணி நேரம் முன்பே ஸ்நானம் செய்வது உத்தமம்; சூரியன் மறையும் தறுவாயில் செய்யும் ஸ்நானம் மத்திமம்; நட்சத்திரங்கள் தோன்றிய பின் செய்யும் ஸ்நானம் அதமம்' என்று விதித்திருக்கிறார்கள்.

தினந்தோறும் முதலில் சொல்லிய பிராம்ம முகூர்த்தத்தில் செய்யும் ஸ்நானமே நாம் கையாளத் தகுந்தது என்பது என் அபிப்பிராயம். பெரியோர்கள் எழுதிவைத்திருப்பது இருக்கட்டும்; தற்காலத்தில் மேல்நாட்டுச் சாஸ்திர நிபுணர்கள் ஸ்நான விஷயமாகக் கண்டுபிடித்த விசேஷம் ஒன்றும் பெரியோர் கொள்கையை வலுப்படுத்துவதாய் இருக்கிறது. பிராம்ம முகூர்த்தத்தில் (மேல்நாட்டார் கொள்கைப்படி) ஊதாநிறக் கிரணங்கள் ஆகாயம் முழுதும் பரவியிருக்கும். இந்தச் சமயத்திலே, ஸ்நானம் செய்து சுசியாக உடம்பின் ஈரம் உலரும்படி வழக்கப்படுத்திக்கொண்டால் மனிதர்கள் தம்மை அறியாமலே உடம்பில் 'அல்ட்ரா' ஊதா நிறக் கிரணங்களை ஏராளமாக ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டாகிறது. இதனால் மனத்துக்கு உற்சாகமும் உடலுக்கு ஆரோக்கியமும் ஏற்படும். 'அல்ட்ரா' ஊதாக்கிரணங்களைப் பெறவேண்டிய நோயாளிகள் இந்த முறையைக் கைக்கொண்டால், ஆயிரக்கணக்கில் ஆஸ்பத்திரிகளுக்குப் பணம் செலவழிக்கும் அவசியமும் நேராது. ஊதாக் கிரணங்களில் அழகுச் சிகிச்சையும் அமைந்திருப்பதால் ஆரோக்கியத்தையும் அழகையும் விரும்புவோர் விடியற்காலையில் எழுந்து ஸ்நானம் செய்யும் முறையைக் கடைப்பிடிப்பது நலம்.

பிராம்ம முகூர்த்தத்தில் ஸ்நானம் செய்வது பொதுவாகவே நன்மையைத் தருவது. அதிலும் நதிகளில் இந்த வேளையில் செய்யும்

ஸ்நானம் மிகச் சிறந்தது. அடுத்த படியாக, குளங்களிலும் ஏரிகளிலும் செய்யும் ஸ்நானம் சிறந்தது. வீட்டில் கிணறுகளிலும் குழாய்களிலும் செய்யும் ஸ்நானம் மூன்றாந் தரந்தான். சிறிய பாத்திரங்களில் நிரப்பிய ஜலத்தில் ஸ்நானம் செய்வதைப்பற்றி என்ன சொல்வது! எவ்வளவுக்கெவ்வளவு தண்ணீர் நிறைய இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நம் ஸ்நானம் வலுவைத் தரும். நதிகளிலும் குளங்களிலும் ஸ்நானம் செய்ய வசதி இல்லாதவர்கள், வீட்டிலே திறந்த வெளியில் தொட்டி கட்டுவித்து அதிலே முதல் நாள் மாலையில் தண்ணீரை நிரப்பவேண்டும். விடியற்காலையில் அந்தத் தண்ணீரில் ஸ்நானம் செய்யவேண்டும். இது பட்டண வாசிகளுக்கும் சௌகரியமான முறையே. ஸ்நானம் செய்யும் போது கழுத்தளவு தண்ணீரில் சற்று நேரம் அமர்ந்து சில நிமிஷங்கள் அடிவயிற்றைத் தேய்த்து விட வேண்டும். நாபி வட்டத்தில் நரம்பு மண்டலங்கள் சேருவதால் உடலில் தங்கிய தோஷங்கள் எல்லாம் தேய்த்தல் மூலம் ஜலமயமாய் வெளியேறிவிடும். தண்ணீரில் இருக்கும் விசேஷ சக்தி உடம்புக்குள் ஏறும். அதனாலேதான் நதிகளிலும் பெரிய நீர்நிலைகளிலும் ஸ்நானம் செய்யும்போது உடல் ஏராளமான சக்தியைப் பெறுகிறது. உடம்பின் அசுத்தம் முழுவதும் வெளியேறி விடுகிறது. விடியற்காலையில் மேலே கண்ட முறையில் ஸ்நானம் செய்பவர்கள் தம் உடல் லேசாகத் தோன்றுவதை அநுபவத்தில் காணலாம். அதனால் பல வியாதிகளை விரட்டலாம்.

இது சுத்தஜல ஸ்நானத்தைப் பற்றிய விசேஷம். அழகுச் சிகிச்சையைப்பற்றிச் சொல்லும்போது பழைய கிரேக்க அழகியான ஹெலனைப்பற்றிய நினைவு வருகிறது. பெரிய பானையில் பாலை நிரப்பி அவள் அதில் ஸ்நானம் செய்வாள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதனால் எவ்வளவு வயது சென்றும் அவள் இளமையும் கவர்ச்சியும் குன்றாமல் அழகுடன் விளங்கினாள் என்று சொல்வார்கள். இன்று மேல்நாட்டுப் பெண்மணிகள் உபயோகிக்கும் 'ஸ்நோ' போன்ற மெழுகு அல்லது களிம்புகள் நம் நாட்டில் அந்தக் காலத்தில் பல வகையில் இருந்திருக்கின்றன. அவைகளுக்கு 'லேபனம்' என்று பெயர். பாலில் ஸ்நானம் செய்யும் முறை தவிர, தயிர், நெய் இவைகளில் ஸ்நானம் செய்யும் முறைகளும் உண்டு. நாம் இப்பொழுது இவற்றால் உண்டாகும் நன்மை தீமைகளை ஆராயாமல் விட்டுவிட்டோம். தேவதைகளின் விக்கிரகங்களுக்கு மட்டும் சுத்தோதகம், பஞ்சாமிர்தம், பன்னீர் என்று அபிஷேகம் செய்யும் முறையைக் கையாண்டு வருகிறோம். அழகுச் சிகிச்சைக்காகப் பிற நாட்டு லேபனங்களுக்குப் பணம் கொட்டாமல் நம் சாஸ்திரரீதியில் ஸ்நான அலங்காரங்கள் செய்வதை நம் நாட்டவர் பழகவேண்டும்.

பெண் டிரைவர் சமிஞ்ஞை

ஒரு பெண் டிரைவர் வெளியே கையை நீட்டினால், அவள் காரை வலதுபுறம் திருப்புவாள் அல்லது இடதுபுறம் திருப்புவாள் அல்லது நிறுத்துவாள் என்று நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

—'காரொனெட்'

லிங்கன் தாடி வளர்த்த கதை

★

அமெரிக்காவின் 16-ஆவது ஜனாதிபதி லிங்கன் பிறந்த தினத்தைப் பிப்ரவரி 12-இல் அமெரிக்கர் கொண்டாடினார்கள். அவருடைய உத்தமமான இயல்பைக் காட்டும் இந்தச் சம்பவம், ஹொர்த்தா பாலி என்பவர் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் எழுதிய ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஐக்கியத்துக்காக அரும்பாடு பட்டவர். நீக்ரோக்களை அடிமைத் தளையிலிருந்து விடுவித்தவர். அதனால் எதிரிகளின் கோபத்துக்கு ஆளானார். ஜனாதிபதியாக இருந்தபோது ஒரு நாள் அவரை ஒரு முரடன் சுட்டுக் கொன்றுவிட்டான். ஆயினும் அவர் லட்சியம் ஈடேறிவிட்டது. அவரைப்பற்றிய ஒரு ரசமான தகவல் இது:

கிரேஸ் பெடல் என்ற பதினொரு வயதுப் பெண் ஒருத்தி நியூ யார்க்கைச் சேர்ந்த வெஸ்ட்பீல்டு என்ற இடத்தில் வசித்துவந்தாள். அவள் தகப்பனார் ஒரு நாள் சந்தையிலிருந்து ஒரு படம் வாங்கிவந்தார். முதல் முதலாகக் கிரேஸ் பார்த்த போட்டோ படம் அதுதான். படத்தில் இருந்த ஆசாமி தன்னையே உற்றுக் கவனிப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. மங்கிய அகல் விளக்கு வெளிச்சத்தில் அந்த முகத்தைப் பார்க்கப் பார்க்க அதைச் சுற்றி ஏதோ படர்வதுபோல் அவளுக்குப் பிரமை ஏற்பட்டது. குழி விழுந்த கன்னம் போய் அங்கே தாடி முளைத்தமாதிரி இருந்தது!

கிரேஸ், "இவருக்கு இப்படித் தாடி மட்டும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்: அப்போது பெண்கள் எல்லாரும், 'இவருக்குத்தான் நீங்கள் வோட்டுப் போட வேண்டும். இவர்தான் ஜனாதிபதியாக வேண்டும்' என்று தங்கள் புருஷன்மாரைப் பார்த்துச் சொல்லமாட்டார்களா? நான் இவ

ருக்கு ஒரு கடிதம் எழுதிப் போடு கிறேன்'' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

உடனே இப்படி எழுதித் தபா விலும் அனுப்பிவிட்டாள் :

“வெஸ்ட்பீல்டு
அக்டோபர் 15, 1860.

கனம் ஆப். லிங்கன் அவர் களுக்கு,

அன்புள்ள ஐயா,

நான் ஒரு சிறு பெண்; வயது 11 தான் ஆகிறது. இருந்தாலும் நீங்கள் அமெரிக்காவுக்கு ஜனாதிபதியாக வேண்டும் என்று எனக்கு ரொம்ப ரொம்ப ஆசையாக இருக்கிறது. அதனால்தான் நீங்கள் ரொம்பப் பெரியவராக இருந்தாலும் துணிந்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

உங்கள் வீட்டில் என் வயசுக்கு ஈடாக யாராவது சிறு பெண் இருக்கிறாளா? எனக்குப் பதில் எழுத உங்களுக்கு அவகாசம் இராவிட்டால் அவளையாவது கடிதம் போடச் சொல்லுங்கள். எனக்கு நாலு தமையன்மார் இருக்கிறார்கள். அவர்களில் இரண்டொருத்தர் நிச்சயமாக உங்களுக்கு வோட்டுப் போடுவார்கள். நீங்கள் மட்டும் மோவாயில் தாடி வளர்த்துக்கொண்டீர்களோ, மற்றவர்களையும் உங்களுக்கே வோட்டுப் போடும்படி சொல்வேன். இப்போது உங்கள் முகம் ஒட்டி உலர்ந்திருக்கிறது; தாடி வளர்த்தால் அப்படியிராது; நன்றாக இருக்கும், பாருங்கள். பெண்களெல்லாரும் உங்களுக்கே வோட்டுப் போடவேண்டும் என்று தங்கள் புருஷன்மாரிடம் சொல்லுவார்கள். அப்புறம் நீங்கள் ஜனாதிபதியாகி விடலாம்.

கிரேஸ் பேடல்.''

லிங்கனுக்கு அப்போதெல்லாம் ஒரு நாளைக்கு 50 கடிதங்களுக்குக் குறையாமல் வரும். நண்பர்கள் அல்லது முக்கியமான ஆசாமிகளில் யாராவது எழுதின கடிதங்களை மட்டுமே அவருடைய காரியதரிசிகள் அவரிடம் சேர்ப்பார்கள். இவர்களில் ஜான் ஹே என்பவர் ஒரு நாள், “இதோ சிறு பெண்களிடமிருந்து கடிதங்கள் வந்து குவிந்திருப்பதைப் பாருங்களேன்'' என்று நாற்காலியில் சாய்ந்தபடி மற்றக் காரியதரிசியான நிகோலே என்பவரிடம் சொன்னார்.

நிகோலே காரியத்தில் கண்ணாயிருப்பவர்; “குப்பைக் கூடையில் போடு'' என்றார்.

“இதோ ஒரு பெண் புது யோசனை ஒன்று சொல்லுகிறாள். அவர் மோவாயில் தாடி வளர்த்தால் நன்றாயிருக்குமாம்! எப்படி?'' என்றார் சிரித்துக்கொண்டே.

“அதைக் குப்பைக் கூடையில் எறி என்றால் கேட்கமாட்டாய்? காரியத்தைக் கவனி'' என்று சீறி விழுந்தார் நிகோலே.

அப்போது மிஸ்டர் ஹெர்ன்டன் என்பவர் அங்கே வந்தார். இவர் லிங்கனின் நண்பர். இவரிடம் ஹே விஷயத்தைச் சொல்ல வாயெடுத்தார். அப்போது நிகோலே, “போதும்; தாடியுமாச்சு, மீசையுமாச்சு! சிறு பெண்ணும்! வேறு வேலையில்லையா உனக்கு?'' என்று மறுபடியும் ஹேயை அதட்டினார்.

“சிறு பெண்ணா?'' என்று உரக்க ஆரம்பித்த ஹெர்ன்டன், லிங்கனின் அறைப் பக்கம் கதவு திறந்திருப்பதைக் கண்டு சற்றுத்

தாழ்ந்த குரலில், "என் ஐயா, சின்னஞ் சிறு பெண் குழந்தைகள் என்றால் அவருக்கு எவ்வளவு அன்பு தெரியுமா; தெருவில் இப்படி எந்தக் குழந்தையை யாவது பார்த்தால், 'அங்கச்சி' என்று அவர்களை நிறுத்திச் சற்று நேரம் பேசிக்கொண்டிருப்பாரே!" என்றார்.

நிகோலேக்குக் கோபம் கோப மாக வந்தது: "சீக்கிரம் பென் ஸில்வேனியா கவர்னருக்குப் பதில் எழுதி அனுப்பு, அப்பா! முக்கிய மான காரியமெல்லாம் இருக்க—" என்று மறுபடியும் எரிந்து விழ ஆரம்பித்தார். அப்போது உள் பக்கத்திலிருந்து லிங்கனின் குரல் கேட்டது:

"ஏன் அப்பா, அவ்வளவு அவ சரம்? இரண்டு நாள் தள்ளிப் போனால் பரவாயில்லை; அவர் பொறுத்துக்கொள்வார்."

இவர்கள் இத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்ததெல்லாம் லிங்கன் காதில் விழுந்துகொண்டு தான் இருந்தது. சீக்கிரமே அவர் கிரேஸுக்குப் பதிலும் எழுதி அனுப்பினார்.

"ஸ்பிரிங்பீல்டு,
அக்டோபர், 19, 1860

மிஸ் கிரேஸ் பெடல்,
வெஸ்ட் பீல்டு, நியூயார்க்.

அன்புள்ள மிஸ் கிரேஸ்,

உன் கடிதம் கிடைத்தது பற்றி மிகவும் மகிழ்ச்சி. எனக்குப் பெண் குழந்தைகளே இல்லையே, அம்மா! மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒருவனுக்கு வயது 17; இன்னொருவனுக்கு 9; கடைசிப் பையனுக்கு 7. இவர்களும் இவர்கள் தாயாரும் நானும்-எங்கள் குடும்பமே இவ்வளவுதான். மோவாயில் தாடி வளர்க்கச் சொல்கிறாயே! இதுவரைக்கும் வளர்க்காமல் இருந்து விட்டு, இப்போது வளர்த்தால் ஜனங்கள், 'இதென்னடா பைத்தியம்!' என்று நினைக்க மாட்டார்களா?

என் மனமார்ந்த ஆசீர்வாதம்.
ஏ. லிங்கன்."

நாலைந்து மாதம் கழித்து, 'புதிதாகத் தேர்ந்தெடுத்த ஜனாதிபதி மிஸ்டர் லிங்கன் வாஷிங்டனுக்குப் புறப்பட்டுப் போகிறார். வரும் வழியில் வெஸ்ட்பீல்டு ரெயில்வே ஸ்டேஷனில் அவர் வரும் ஸ்பெஷல் நிற்கும்' என்று செய்தி வந்தது. மற்ற ஜனங்களுடன் பெடல் குடும்பத்தாரும் அவரைப் பார்க்க அங்கே வந்திருந்தார்கள். எங்கும் வரவேற்புத் தோரணங்களும் நட்சத்திரம் பொறித்த கொடியும் பறந்தன. ஜனங்களின் இரைச்சல் சட்டென்று அடங்கியது. "அதோ வண்டி வருகிறது" என்று யாரோ சொல்வது கிரேஸின் காதில் விழுந்தது. அவள் கால்விரல் நுனியில் நின்று தன்னால் முடிந்த வரையில் எட்டிக் கவனித்தாள். நீண்ட கழுத்துடைய ஓர் எஞ்சின் புகை விட்டுக்கொண்டே போயிற்று; பின்னாலேயே இரண்டு மூன்று வண்டித் தொடர்கள் தெரிந்தன. மூன்றாம் தொடரில் நட்சத்திரம் பொறித்த அமெரிக்கக் கொடி பறந்துகொண்டே வந்தது. அதில் பல கறுப்பு ஹாட்கள் தெரிந்தன; அவற்றில் மிகவும் உயரமாக ஒரு ஹாட் இருந்தது. ஜனங்கள், "பிரசங்கம், பிரசங்கம்!" என்று கூவினார்கள். பிறகு கூட்டத்தில் நிச்சப்தம் ஏற்பட்டது. கிரேஸ்

மூச்சைப் பிடித்துக்கொண்டு கவனமாகக் கேட்கலானாள்:

"கனவான்களே, சீமாட்டிகளே, இப்போது பிரசங்கம் செய்யச் சந்தர்ப்பம் இல்லை. உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று தான் வந்தேன்" என்று யாரோ பேசுவது கேட்டது.

கிரேஸ் நிமிர்ந்து பார்த்தாள். போட்டோவில் பார்த்த அதே ஆசாமிதான் பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்தார். பெண்கள் தம்மைத் தேர்ந்தெடுக்கப் புருஷன்மாரைத் தூண்டியதற்கு அவர் நன்றி செலுத்தித் தமாஷாக இரண்டொரு வார்த்தை பேசினார்.

கூட்டத்தில் ஒரே குதூகலம்.

"இன்னும் ஒன்று கேட்கிறேன்: எல்லாரும் இந்தக் கொடியின் கீழ் ஒத்து எனக்குத் துணையாக இருந்து வரவேண்டும். சம்மதந் தானே?" என்றார்.

கையையும் ஹாட்டையும் கைக்குட்டையையும் ஆட்டி ஜனங்கள், "நிச்சயமாக அப்படியே இருப்போம், ஆப்" என்று சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

மறுபடியும் அவர் குரல் கேட்டது:

"இங்கே எனக்குக் கடிதம் எழுதிய சின்னஞ் சிறு பெண் ஒருத்தி இருக்கிறாள். அவளால் தான் நான் இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்கிறேன். அவள் மட்டும் இங்கே இருந்தால் அவளோடு சற்றுப் பேசுவேன்."

"அவள் பெயர் என்ன?" என்று ஜனங்கள் ஒரே மொத்தமாக ஆவலோடு கேட்டார்கள்.

"கிரேஸ் பெடல்" என்றார் லிங்கன். உடனே அவள் தகப்பனார் அவள் கையைப் பிடித்துக்கொண்டு லிங்கனிடம் அழைத்துச் சென்றார். ஜனங்கள் வழி விட்டது, தான் அவர்களிடையே நடந்து சென்றது, அவர்கள் தன்னைச் சுட்டிக் காட்டி மெதுவாகப் பேசிக்கொள்வது எதுவும் அவளுக்குத் தெரியவில்லை. நேராக லிங்கனிடம் போனாள். எதிரே படிக்கட்டுகள் தெரிந்தன. அவள் தகப்பனார் அவளைத் தூக்கிப் பிடித்தார். அவள் கண்ணுக்கெதிரே கறுப்பு பூட்ஸ் போட்ட இரண்டு பெரிய கால்கள் தெரிந்தன. லிங்கன் மெதுவாகச் சிரித்துக்கொண்டே, "என் மோவாயில் தாடி வளர்த்தால் நன்றாயிருக்கும் என்று எழுதினாள் ஐயா, இந்தப் பெண்!" என்றார். குனிந்து அவளைத் தூக்கினார். காற்றில் லேசாகப் பறப்பதுபோல் இருந்தது அவளுக்கு. அவள் கன்னம் இரண்டிலும் லேசாக முத்தமிட்டு மெதுவாய்க் கீழே இறக்கினார். அவளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை; தாடி வேறு உராயவே கன்னமெல்லாம் சுடுவதுபோல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது.

தன்னைச் சுற்றி ஜனங்கள் நிற்பதே அவளுக்குத் தெரியவில்லை. அவரையும் அவர் மோவாயிலுள்ள தாடியையும் பார்த்து மனம் விட்டுக் கலகலவென்று சிரித்தாள்.

"உனக்காக இதோ தாடி வளர்த்துக்கொண்டு விட்டேன், பார்த்தாயா?" என்றார் லிங்கன்.

ஆஜாநுபாகுவாக நிற்கும் லிங்கனை அப்படியே எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கலாம் போல் இருந்தது அவளுக்கு. அவர் அவள் கையைத் தொட்டு, "குழந்தை, இன்னொரு நாள் உன்னை வந்து பார்க்கிறேன்" என்றார். அவள் படிகளில் இறங்கும்போது கையைப் பிடித்து

ஜாக்கிரதையாக அவளைக் கொண்டு வந்து விட்டார். அவளும் அடக்க ஒடுக்கமாகத் தன் தகப்பனார் இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தாள். அவருக்குப் பெருமை தாங்கவில்லை.

கூ என்று கத்திக்கொண்டு ரெயில் வண்டி புகை விட்டுக் கொண்டே போய்விட்டது. ஜனங்கள் அது மறையும்வரை சந்தோஷ ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் கிரேஸின் காதில் மட்டும் 'குழந்தை.....' என்று லிங்கன் அன்போடு தன்னிடம் பேசுங் குரல் ஒலித்துக்கொண்டே யிருந்தது.

இன்றும் ஸ்பிரிங்பீல்டில் லிங்கன் வசித்துவந்த வீடு அவர் விட்டுப் போன மாதிரியே இருக்கிறது என்கிறார்கள். அதிலுள்ள சாமான்களையெல்லாம் அப்படியே வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து வருகிறார்கள். அங்கே ஓர் அறையில் ஒரு காகிதத் துண்டு மாட்டித் தொங்கவிட்டிருக்கிறது.

"அன்புள்ள ஐயா, நான் ஒரு சிறு பெண்; வயது 11தான் ஆகிறது...." என்று குழந்தையின் கிறுக்கல் எழுத்தில் எழுதிய அந்தக் காகிதத் துண்டுதான் கிரேஸின் கடிதம்.

அபிப்பிராயம் மாறியது

கிளெர்மாண்ட் என்ற நீராவிப்படகை முதல் முதலாக ஹட்ஸன் நதியில் விட்டு நீரோட்டத்தை எதிர்த்து ஓடும்படி கிளப்பிவிட முயன்றார்கள்.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு குடியானவன், "அது கிளம்பவே கிளம்பாது" என்றான்.

படகு கிளம்பி அதிவேகமாக ஓடத் தொடங்கியது. அதைக் கண்ட குடியானவன், "அது நிற்கவே நிற்காது" என்றான்.

—'ஃப்யூச்சர்'

என்ன டான்ஸ்?

இரண்டாவது உலக யுத்த காலத்திலும் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருந்தவர் வின்ஸ்டன் சர்ச்சில்தான். அப்போது தொழிற் கட்சியும் கன்ஸர்வேடிவ் கட்சியும் இணைந்த தேசிய மந்திரி சபை அமைந்திருந்தது. தொழிற் கட்சியைச் சேர்ந்த எர்னஸ்ட் பெவின் என்பவர் தொழில் மந்திரியாக இருந்தார். சர்ச்சில், பெவின் இரண்டு பேரும், லண்டனில் நடந்த ஏதோ ஓர் உல்லாச விருந்துக்குப் போயிருந்தார்கள். அங்கே ஆணும் பெண்ணுமாக ஜோடி சேர்ந்து பல பேர் நாட்டியமாடினார்கள். பாண்டு வாத்தியத்தின் டான்ஸ் சங்கீதத்தில் பெவின் உள்ளங் குழைந்துவிட்டார். அவரும் ஒரு சீமாட்டியைத் துணை சேர்த்துக்கொண்டு நாட்டியமாடத் தொடங்கினார். விருந்தாளிகளில் ஒருவர் சர்ச்சிலைப் பார்த்து, "பிரதம மந்திரி அவர்களே, இப்போது தொழில் மந்திரி ஆடிக்கொண்டிருக்கிறாரே; இது என்ன டான்ஸ் தெரியுமா?" என்று கேட்டார். உடனே சர்ச்சில், "இது டான்ஸ் அல்ல; தொழிலாளர் இயக்கம்" என்றார்.

—லியனார்டு லயான்ஸ்

குஜராத்திக் கதை:

சிரித்த முகம்

மூலர்: ஸுரேச ராவூத்

மொழிபெயர்ப்பு: கா. ஸ்ரீ. ஸ்ரீ.

தொழிலிலே அவன் கைதேர்ந்தவன். ஆனால் அவனுடைய வாழ்க்கையில் முதல் முதலாகக் கள்ளங்கபடமில்லாமல் பேசச் செய்துவிட்டது அந்தச் சிரித்த முகம்.

கதிரவன் மறைந்து வெகு நேரமாகிவிட்டது. ஊர் முழுவதும் தூங்கியது. எங்கே பார்த்தாலும் ஒரே இருள். பயங்கரமான அமைதி. இருட்டுக்கும் அமைதிக்கும் பயந்தால் என் தொழில் நடக்குமா?

அந்த வீட்டின் பின்புறத்தில் இருந்த குழாய்வழியாகப் பரபரவென்று மேலே ஏறினேன். இரண்டு படிகளை ஒரேயடியாகத் தாண்டி மாடிக்குத் தாவும் போக்கிரிச் சிறுவனைப்போல, பயமில்லாமல் ஏறினேன். மூன்றாவது மாடியில் ஒரு ஜன்னல் என் கைக்கு அகப்பட்டது. சற்று இருந்து நாலு புறமும் பார்த்தேன். ஆளரவம் கேட்கவில்லை. சட்டைப்பையிலிருந்து ஆயுதத்தை எடுத்து, ஜன்னல் கதவைப் பெயர்த்தேன். அது வெகு சுலபமான வேலை! மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தேன். எங்கும் இருள்; ஒரே அமைதி. வீட்டில் யாரும் நடமாடுவதாகவே தெரியவில்லை.

ஒரு காலை ஜன்னல் வழியே உள்ளே விட்டேன். பிறகு மற்றொரு காலை விட்டேன். ஓரடி எடுத்து வைப்பதற்குள் ஒரு முக்காலிமேல் என் கால் மோதியது. அதில் இருந்த காலிப் பாத்திரம் ஓசையோடு உருண்டது. நான் திகைத்து நின்றேன். ஆனால் வீட்டில் யாரும் இல்லை என்று எண்ணித் துணிவு கொண்டேன். அதே சமயத்தில் அந்த அறைக்குள், “யார் அங்கே?” என்ற கம்பீரமான ஒலி எழுந்தது.

நான் பயந்துவிட்டேன். ஜன்னல் திரையை இழுத்து என்னை மறைத்துக்கொள்ள முயன்றேன். சடக்கென்று அறையில் ஒளி வீசியது. நான் ஒளிந்துகொள்ள வேண்டிய அவசியமே நேரவில்லை. சட்டைப் பையில் கைவிட்டுக் கூரான பிச்சுவாவைத் தடவிக் கொடுத்தேன். இவ்வளவும் ஒரு நொடியில் நிகழ்ந்தது. எதிரே பார்த்தேன். சுமார் ஒன்பது வயதுள்ள ஒரு பையன் படுக்கையில் உட்கார்ந்திருந்தான். அவன் முகத்தில் பயம் தென்படவில்லை; கண்ணில் பரிதாபக் குறி இல்லை. வியப்போடு முகம் மலர்ந்து, “நீங்கள் திருடரா?” என்று என்னைக் கேட்டான்.

அவனுக்குப் பதில் சொல்லாமல் பிச்சுவாவை எடுக்க நினைத்தேன். சே! இந்தப் பையன்மேலா கூர் பார்ப்பது? குற்றமற்ற அவனுடைய சிரித்த முகத்தைப் பார்த்ததும் என் மெய் சிலிர்த்தது. நான் பக்காத் திருடன்; எத்தனையோ பேரைக் கொலை செய்திருக்கிறேன்; மென்னியை நெரித்திருக்கிறேன். ஆனால்

இவன் சிறு பையன். இவன் கண்ணில் ஏதோ ஒரு விசித்திர ஒளி வீசியது. எனக்குச் சுய உணர்வு வந்தது. சட்டைப்பையிலிருந்து கையை மட்டும் இழுத்துக்கொண்டு, "ஆமாம், நான் திருடன்தான்!" என்று சொல்லி, லேசாகச் சிரித்தேன்.

அவன் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தான். "நீங்கள் திருடரா! இருக்கவே முடியாது. உங்கள் கண்ணில் திருடனைப் போலக் கறுப்புப் பட்டை இல்லையே!" என்றான்.

"எல்லாத் திருடர்களும் கண்ணில் கறுப்புப் பட்டை கட்டிக் கொள்ள மாட்டார்கள்!" என்றேன்.

அவனுக்குச் சமாதானம் ஏற்படவில்லை. "உங்கள் கையில் கத்தி எங்கே? இரும்புப் பெட்டியையும் எஃகு பீரோவையும் உடைக்கும் ஆயுதங்கள் எங்கே?" என்று அவன் ஐயமுற்றான்.

நான் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து, "கெட்டிக்காரப் பையன் நீ. உன் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"என் பெயர் சந்திரஹாஸன். உங்கள் பெயர்?"

"என் பெயர் திருடன்" என்று சொல்லி, சட்டைப்பையிலிருந்து ஒரு சுத்தியலை எடுத்து அவனுக்குக் காண்பித்தேன். அப்போதுதான் அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. மொத்தத்தில் அவன் துணிச்சலான பையன். அந்தச் சுத்தியலைக் கையில் வாங்கிக்கொண்டு, "எங்கள் வீட்டில் உங்களுக்கு என்ன வேலை?" என்று கேட்டான்.



"என் வேலை திருடுவது. அது கிடக்கட்டும்; உன் அப்பாவும் அம்மாவும் எங்கே போயிருக்கிறார்கள்?"

"சினிமாவுக்குப் போயிருக்கிறார்கள்; இன்னும் ஒரு மணி நேரத்தில் வருவார்கள்."

"உன்னை அவர்கள் அழைத்துப் போகும் வழக்கம் இல்லையா?"

"அழைத்துப் போகாமல் என்ன? இந்தப் படத்தைச் சிறுவர்கள் பார்க்கக் கூடாதாம்; அதனால்தான் அழைத்துப் போகவில்லை."

"அப்படியா! நீ தனியாகவா வீட்டில் இருக்கிறாய்?"

"இல்லையே; எங்கள் சமையற்காரியம்மா எனக்குத் துணையாக இருந்தாள். சற்று நேரத்துக்கு முன்பு எவனோ ஒருவன் வந்து அவள் தம்பிக்கு மோட்டார் விபத்து நேர்ந்திருப்பதாகச் சொல்லவே அவள் போய்விட்டாள். அப்பா என்னைத் தனியாக விட்டுப்போகும் வழக்கமே இல்லை!" கள்ளங் கபடற்ற அவன் முகம் என்னை மயக்கியது.

ஆனால் நான் வந்த வேலையைப் பார்க்க வேண்டுமே. ஒரு கை பார்த்துக்கொண்டு விரைவில் திரும்ப வேண்டாமா! நான் சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்ததைக் கண்டு சந்திரஹாஸன், "ஆமாம், நீங்கள் எப்படித் திருடுகிறீர்கள்?" என்றான்.

"அது இப்போது உனக்குத் தெரியப்போகிறது."

அவன் ஆறுதலோடு சிரித்துக்கொண்டே, "பேஷ், பேஷ்! திருடர்கள் எப்படித் திருடுகிறார்கள் என்பதை இன்று நான் நேரில் பார்க்க முடியும்; இல்லையா?" என்றான்.

நான் அறை முழுவதையும் கண்ணால் அலசிப் பார்த்தேன். பயன்படக்கூடிய பொருள் ஒன்றுவது அங்கே தென்படவில்லை. "உங்கள் வீட்டில் நல்ல நல்ல துணிகளெல்லாம் எங்கே வைத்திருக்கிறீர்கள்?" என்று சற்று அதிகாரக் குரலிலேயே கேட்டேன்.

"வாருங்கள், காண்பிக்கிறேன்" என்று சொல்லி, என் பதிலை எதிர்பாராமலே அவன் என் கையைப் பிடித்து வேறோர் அறைக்கு அழைத்துச் சென்றான். ஒரு பீரோவைச் சுட்டிக்காட்டி, "இதில்தான் எங்கள் வீட்டுப் பட்டுத் துணிகளும் ஜரிகைச் சேலைகளும் ஜோரான உடைகளும் இருக்கின்றன. ஆனால் அப்பா சாவியை எடுத்துப் போயிருக்கிறாரே!" என்றான்.

"எனக்குச் சாவி எதுக்கு?" என்று, ஆயுதத்தினால் பூட்டை உடைத்துக்கொண்டே சொன்னேன். பீரோவில் பட்டுத் துணிகளும் கம்பளி ஆடைகளும் இருந்தன. பரபரவென்று அவற்றை வெளியே எடுத்துப் போட்டேன்.

"மெதுவாக எடுங்கள் துணிகளை. இஸ்திரி கலைந்துவிடுமே! இஸ்திரி கலைந்துபோனால் எந்த உடுப்பும் எனக்குப் பிடிக்காது" என்றான் சிறுவன்.

"அட தம்பி, இஸ்திரியைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தால் என் வேலை முடிந்தாற்போலத் தான்!"

பீரோவின் மேல்தட்டில் ஒரு பொன் கடிகாரம் இருந்தது. அதை எடுத்தேன்.

"இந்தக் கடிகாரத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளப் போகிறீர்களா? போன பொங்கலுக்கு மாமா அம்மாவுக்கு வாங்கிக்கொடுத்த கடிகாரம் இது; பிறகு அவர் இந்த வீட்டுக்கு வரவேயில்லை. இந்தக் கடிகாரத்தைப் பார்த்தால் அம்மாவுக்கு

அழுகையாக வருகிறது. நீங்கள் இதைக் கொண்டுபோனால் அவள் இன்னும் நிறைய அழுவாள்.'' சிறுவன் கண்ணில் நீர் தளும்பியது.

"இந்த மாதிரி பொன் கடிகாரத்தைக் கொண்டு போகாவிட்டால் நான் எப்படித் திருடனாக இருக்க முடியும்? இதே மாதிரி இன்னொரு கடிகாரம் உன் அம்மாவுக்கு அப்பா வாங்கிக் கொடுப்பார்.''

என் பதில் அவனுக்குச் சிறிது ஆறுதல் அளித்தது. நான் துணிகளை ஒரு பெரிய பையில் அடைத்துவிட்டு, "உன் அம்மாவின் நகைகளும் அப்பாவின் பணமும் எங்கே இருக்கின்றன?'' என்று கேட்டேன்.

"எங்கே என்றால்? ரகசியச் சுரங்கத்தில் வைத்திருக்கிறார்கள். பணத்தையும் நகைகளையும் பீரோவிலா வைப்பார்கள்?'' என்று என் முட்டாள்தனத்தைக் கண்டு அவன் சிரித்தான்.

"அதாவது, பாங்கில் இருக்கும் ரகசியச் சுரங்கத்தில்தானே?'' என்று ஏமாற்றத்தோடு கேட்டேன்.

"சேச்சே! இதோ சுவரில் காந்தி படம் இருக்கிறது பாருங்கள்; இதற்குப் பின்னால் ரகசியச் சுரங்கம் ஒன்று இருக்கிறது'' என்று சொல்லி அவன் அந்தப் படத்தை எடுத்து, ஒரு விசையை அமுக்கினான். சுரங்க வாசல் திறந்துகொண்டது. அதில் ஒரு சிறு மரப் பெட்டி இருந்தது. அதற்குச் சங்கேதப் பூட்டு இருந்தது. நான் சுத்தியலினால் பூட்டை உடைப்பதற்கு இருந்தேன். அவன் என் மதியீனத்தைக் கண்டு பரிகாசத்தோடு, "இப்படித் திறந்தால் வெகு நேரம் பிடிக்குமே! 'சந்திரஹாஸன்' என்று எழுத்தைத் திருப்புங்கள்; உடனே திறந்து கொள்ளும்'' என்றான்.

எனக்கு அதைக் கேட்டுச் சிரிப்பு வந்தது. பெட்டியையும் அந்த மூட்டையிலேயே கட்டிக்கொண்டு, "என் வேலை ஆகிவிட்டது; போய் வருகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டேன். வாசற் கதவண்டை வந்ததும், "இதை எல்லாம் நீங்கள் வீட்டுக்கா கொண்டுபோகிறீர்கள்?'' என்று அந்தப் பையன் கேட்டான். இப்போதுதான் அவன் முகத்தில் கவலை நிலவியது.

இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. நான் விரைவில் திரும்பியாக வேண்டும். சுத்தியலால் அந்தச் சிறுவனுடைய மண்டையில் ஓர் அடி போடலாம் என்ற கேவல எண்ணம் உதித்தது. ஆனால் எனக்குள் இருந்த மனிதத்தன்மை அதைத் தடுத்தது. எனக்கும் உணர்ச்சிகள் இருந்தன. போலீசாரின் 'கறுப்புப் புத்தக'த்தில் என் பெயர் இருந்தாலும் குழந்தைகளைத் துன்புறுத்தும் அளவுக்கு இன்னும் நான் மிருகமாகவில்லை. மூட்டையைக் கீழே வைத்துவிட்டு, "நான் திருடன்; திருடிய பொருளை நான் எடுத்துக்கொண்டுதான் போக வேண்டும்'' என்றேன்.

என் பேச்சு அவனுக்கு நியாயமாகப் பட்டது. "ஆமாம், நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் இந்தப் பொருள்களை நீங்கள் எடுத்துக் கொண்டு போகும்படி நான் விட்டால், அப்பா என்னைக் கோபித்துக்கொள்வாரே! அவர் யாருக்காவது ஏதாவது கொடுத்தால் ரசீது எழுதி வாங்கிக் கொள்வது வழக்கம். நீங்கள் எனக்கு ரசீது தருகிறீர்களா?'' என்று சொல்லி, சந்திரஹாஸன் டிராயரிலிருந்து ரசீதுப் புத்தகத்

தையும் பேனாவையும் எடுத்து என்னிடம் கொடுத்தான்.

எனக்குச் சிரிப்பாக வந்தது. "கட்டாயம் எழுதிக் கொடுக்கிறேன்" என்றேன்.

அவன் கொடுத்த பேனாவை வாங்கிக்கொண்டேன். "இப்படி எழுதுங்கள்: 'பட்டுத் துணியும் கம்பள ஆடையும் நிரம்பிய ஒரு மூட்டையையும், பணமும் நகைகளும் வைத்துள்ள பெட்டியையும் திருட்டுப் பொருளாகப் பெற்றுக் கொண்டேன்.' "

நான் அப்படியே எழுதிக் கையெழுத்திட்டுப் பேனாவையும் ரசீதுப் புத்தகத்தையும் அவனிடம் கொடுத்தேன். இனி எனக்கு நிற்க நேரம் இல்லை. அவன் தந்தை வந்துவிட்டால் என்னைச் செவிட்டில் அறைந்து போலீசாரிடம் ஒப்படைத்துவிடுவார்.

நான் அந்த வீட்டிலிருந்து புறப்பட்டு வேகமாக நடந்தபோது, "ஞாபகம் இருக்கட்டும்; மறுபடி எப்போதாவது வாருங்கள்" என்று அந்தப் பையன் சொன்னது என் காதில் விழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். வாசல் விளக்கு வெளிச்சத்தில் அவனுடைய சிரித்த முகம் நன்றாகத் தெரிந்தது.

நள்ளிரவு ஆயிற்று. சினிமா முடிந்ததனால் சாலைகளில் கொஞ்சம் போக்குவரவு இருந்தது. இந்தக் கூட்டத்தில்தான் சந்திரஹாஸனுடைய பெற்றோரும் இருப்பார்கள் என்று எண்ணியபடியே, நான் தங்கிய ஹோட்டலுக்குச் சென்றேன். வாசலில் காவற்காரன் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். என் காலடி யோசை கேட்டதும் விழித்துக் கண்ணைத் துடைத்து, "இவ்வளவு நேரம் எங்கே ஸார் போய் வறீங்க!" என்றான்.

"சினிமா பார்க்கப் போயிருந்தேன்" என்று அறைந்தாற்போலப் பதில் சொல்லிவிட்டு, என் அறைக்குள் போனேன். கையில் இருந்த பொருள்களை ஒழுங்காக வைத்துவிட்டு, உடுப்பை மாற்றிக் கொண்டு, சாய்வு நாற்காலியில் இளைப்பாறினேன். சந்திரஹாஸனுடைய சிரித்த முகமும், அவன் கேட்ட கேள்விகளும், நான் சொன்ன பதிலும், அந்தத் துணிகளும் நகைகளும் ரசீதும்-எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ரசீதா? ஆமாம், ரசீதுதான்! நான் அந்தப் பையனுக்குச் சொன்ன பதில் அத்தனையும் உண்மை. நான் திருடன் என்று உண்மையைச் சொன்னேன். அந்த ரசீதிலும் உண்மையான கையெழுத்திட்டேன். என் பெயர் போலீசாருக்குத் தெரிந்துவிடும்!

நான் எழுந்தேன். செருப்பை மாட்டிக்கொண்டேன். அந்த மூட்டையை எடுத்துக்கொண்டேன். தடதடவென்று படிகளில் இறங்கினேன். என் அறைக் கதவைச் சாத்தக்கூட மறந்தேன். வாசலில் இருந்த காவற்காரன் விழித்திருந்தான். "மறுபடி வெளியே போறீங்களா?" என்று கேட்டான்.

"போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் கொடுக்கப் போகிறேன்!" என்றேன். போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்தேன்.

வெளிநாட்டுக் கதை :

நம்பாதவன்

கெரால்டு கெர்ஷ்

★★★

பிசாசுக் கதைகளைக் கேலி செய்யும் ஒரு பிசாசுக் கதை இது. பாத்திர வர்ணனை, மனத்தத்துவம் எதுவும் இதில் கிடையாது. ஆனால், படிப்பதற்குச் சுவாரஸ்யமான கதை.

★★★

“முட்டாள்! மூடர்கள் தான் எதையும் நம்பமாட்டார்கள். புத்தியில்லாத கழுதைகளிலே இரண்டு ரகம்: ஒன்று, கேட்டதையெல்லாம் நம்பிவிடுகிறது; இன்னொன்று, ஒன்றையுமே நம்புவதில்லை. நீ இரண்டாவது ரகம். ஆனால், ரொம்ப வாலிபன். உனக்கென்ன தெரியும்? உன் மாதிரிதான் எதையும் நம்பாத ஒருத்தனை முன்னே நான் கண்டிருக்கிறேன்” என்றான் கார்மெலின்.

“ஊம்!”

“அவனை ஒரு குன்றின் உச்சியிலே கண்டேன்.”

“அப்புறம் என்ன நடந்தது?” என்று நான் கேட்டேன்.

“அதைச் சொன்னால் நீ நம்பமாட்டாய்.”

“சொல்லு, சொல்லு.”

“எதற்காக? நீதான் நம்பப் போவதில்லை என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியுமே.”

“எப்படியிருந்தாலும் சொல்லேன்.”

“அப்படியானால் ஒரு ஸிகரெட் கொடு” என்று சொல்லி வாங்கிக் கொண்டான் அவன். ஆடாமல் அசையாமல் உட்கார்ந்துகொண்டு, என்னையே உறுத்துப் பார்த்தான். அந்தப் பார்வையை எப்படி வர்ணிப்பதென்றே எனக்குத் தெரியவில்லை. எத்தனையோ வருஷங்களாய் அவனிடம் பழகி, அவன் சொன்ன பொய்யை எல்லாம் கேட்டிருக்கிறேன். இப்போதுதான் முதல் முதலாக அவன் உண்மை சொல்லப் போகிறான் என்று எனக்குத் தோன்றிற்று. பரம துக்கத்தோடு, “சொல்லுகிறேன், கேள்” என்றான்.

சொல்லத் தொடங்கினான்: “ஒரு நாள் என் உடம்பு என்னவோ ஒரேயடியாய் வெலவெலத்துப் போயிருந்தது. எங்கேயாவது போய்க் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்றியது. ராக்கி ஸெண்டர் என்ற குன்றுக்குப் போனேன்.

“அங்கே எதற்காகப் போனேன்? அந்த இடத்தில் ஒரே நிம்மதியாயிருக்கும். சுமார் மூவாயிரம் ஜனங்கள் அங்கே வசிக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் மீன் பிடித்து ஜீவிப்பவர்கள். ஆஹா! செம்பட

வர்களைக் கண்டாலே எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?

"ஆஹா! ஒரு நாள் ராத்திரி நான் இப்படி நடந்துகொண்டே போனேன். எங்கே பார்த்தாலும் ஒரே அழகாயிருந்தது. நிலா ஜோராய்க் காய்ந்துகொண்டிருந்தது. மனத்துக்கு ரொம்ப உற்சாகமாயும் அமைதியாயும் இருந்தது. குன்றின் உச்சியிலே கடல் ஓரத்தில் போய் உட்கார்ந்துகொண்டேன். கீழே நூறடி தூரத்தில், அலைகள் வந்து வந்து பாறையை மோதிக்கொண்டிருந்தன. சமுத்திரத்தில் வெகு தூரத்தில் 'பாஸ்பரஸ்' என்ற நிபாக்கினி இங்கும் அங்கும் பளிச்சுப் பளிச்சென்று தோன்றி ஒளிவிட்டது. அப்படியே சற்றுக் கண்ணயர்ந்துவிட்டேன்போல் இருக்கிறது. ஆனால் அது ஐந்து நிமிஷத்துக்கு மேல் இராது. விழித்துக்கொண்டபோது எனக்கு ஒரு தோழன் வந்து சேர்ந்திருப்பதைக் கண்டேன். அருகே உட்கார்ந்திருந்த அவனைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கவில்லை. மிகவும் சின்ன சரீரம்! மகா ஒல்லி. மூஞ்சி எப்படி இருந்தது, தெரியுமோ? நீ எலிக்குஞ்சு பார்த்திருக்கிறாயா, தம்பி? அது மாதிரிதான் இருந்தது அவன் மூஞ்சி. அவனை எந்த விஷயத்துக்கும் நம்பக்கூடாதென்று தோன்றியது. கள்ளத்தனமாய்ப் புகுந்த பொல்லாத குள்ளன்.

"'மன்னிக்க வேண்டும். என்னைப் பார்த்துத் திடுக்கிட்டு விட்டீர்களோ?' என்று அவன் கேட்டான்.

"'இல்லை; அப்படி ஒன்றும் இல்லை.'

"'இன்று ராத்திரி எங்கும் ரொம்ப அழகாயிருக்கிறதில்லையா?'

"'உம்' என்று தலையை அசைத்தேன். அந்தப் பயலோடு பேசவே எனக்கு இஷ்டம் இல்லை.

"'அதோ அந்தப் புல் மேலே நிலாக் காய்வது எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?'

"'பிசாசு படுத்த மாதிரி இருக்கிறது' என்று நான் பதில் அளித்தேன்.

"'பிசாசா? அப்படி ஒன்று உண்டா? இல்லவேயில்லை. அதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது.'

"'கிடையாதா?' என்றேன்.

"'கிடையாது. ஒருவன் செத்தால் செத்ததுதான். செத்தபிறகும் சீவன் உண்டு என்று சில பேர் என்னவோ நம்புகிறார்கள். நான் அதையெல்லாம் நம்பமாட்டேன். ஒன்றை நான் நேரிலே பார்த்தால் தான் நம்புவேன். நீங்களும் அப்படித்தானே?'

"'ஆமாம்' என்று இழுத்தேன்.

"'பேயும் பிசாசும் இருந்தால், நம் கதி என்னவாயிருக்கும்? ஒன்றையுமே நாம் நம்பி வாழ முடியாது. என்னைக் கேட்டால் செத்த பிறகு சீவன் இருக்கவே கூடாது; அது தொலைந்துவிட வேண்டும்.'

"'உம்' என்று தலையசைத்தேன். ஏதாவது பேசித் தொலைக்க வேண்டுமே; அதற்காக, 'உங்கள் வீடு எங்கே? பக்கத்திலேயா?' என்று கேட்டேன்.

"'ஆமாம். அதோ தெரிகிறதில்லையா, அந்த வீட்டிலே இருக்கிறேன்' என்றான் குள்ளன்.

"'அந்தப் பங்களாவா?' என்று கேட்டேன். என் அசதியெல்லாம் பறந்தது. பேச்சிலே கொஞ்சம் சுவாரஸ்யம் ஏற்பட்டது. ஏனென்

றால், அது நல்ல பணக்காரப் பங்களாவாகத் தோன்றியது.

"'ஆமாம்' என்றான் அவன்.

"நான் அவனை இப்போது கொஞ்சம் கவனித்துப் பார்த்தேன். நல்ல உடுப்புத்தான் அணிந்திருந்தான். ஆனால், கனவானாகத் தோன்றவில்லை. ஏதோ சிப்பந்தி மாதிரி இருந்தான். பணக்கார வீட்டுச் சிப்பந்தியாக இருக்கலாம் என்று எண்ணினேன்.

"அவன் மேலும் தொடர்ந்து, 'நான் சொல்வதை ஒருகால் நீங்கள் நம்பவில்லையோ? அது நியாயந்தான். யார் சொல்வதையும் நானும் நம்புவதேயில்லை. என் கண்ணால் கண்டதையே நான் நம்புவேன். ஆனால், உண்மையில் அந்தப் பங்களா எனக்குச் சொந்தம். தர்ஸ்டன் என்ற கிழவனாரிடமிருந்து அது எனக்குக் கிடைத்தது' என்றான்.

"'மகனா?' என்று கேட்டேன்.

"'இல்லை. அவரிடம் வேலை பார்த்த சிப்பந்தி. நானே அவருக்குச் சமையல்காரன், கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்கும் ஆள்-எல்லாம்.'

"'அப்படியா?'

"'ஆமாம். அவருக்குத் துணி துவைத்துப் போடுவதும் நான் தான். ஆனால், பாவம், துணி எப்படியிருந்தாலும் அவர் கவலைப்படுவதில்லை. சமையலும் நானே செய்து போட்டேன்.'

"'உம்!'

"'அதில் என்ன வெட்கம்? சமையல்காரன் இல்லாமல் நாகரிக கனவான் எவனும் வாழ முடியுமா? நானோ நல்ல சமையல்காரன். மீன் சமைப்பதில் எனக்கு ஈடு ஜோடி ஒருவனும் இல்லை.'

"'சரிதான்.'

"'ஆமாம்' என்று சொல்லிக் கொண்டே, கடலை நோக்கிக் கீழே சுட்டிக் காட்டி, 'அதோ அந்தப் பாஸ்பரஸ் வெளிச்சத்தைப் பார்த்தீர்களா?' என்று கேட்டான்.

"'உம்.'

"'எப்படிப் பிரகாசிக்கிறது!'

"'நன்றாய்த்தான்' என்று சொல்லிவிட்டு எழுந்தேன். அந்தக் குள்ளனை எனக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் என்னவோ அந்த இடத்தை விட்டுப் போக என் கால் எழும்பவில்லை.

"'அது என்ன தெரியுமா? விஷம்' என்றான் குள்ளன்.

"'என்னது?'

"'அந்தப் பாஸ்பரஸ் இருக்கிறதே, அது விஷம்; பிராணிகளின் உடலில் உண்டாவது. அதில் ஒரு பைண்ட் அளவு முகந்து நீங்கள் குடித்தால், உடனே மாண்டு போவீர்கள். எவரும் அங்கே போய் அப்படிக் குடிப்பதில்லைதான். ஆனால்...'

"'என்ன?'

"'ஆயிஸ்டர் என்ற சிப்பி அதைக் குடித்தே ஜீவிக்க முடியும். மஸ்ஸல் என்ற மட்டியும் அதைக் குடிக்க முடியும்.'

"'அப்படியா?'

"'தர்ஸ்டன் கிழவனாருக்கு அந்த மட்டி ரொம்பப் பிடிக்கும்.'

"'ஓஹோ!' என்றேன். என் உடம்பில் ஏதோ நடுக்கம் எடுத்தது.

"'ஒரு மட்டி அதைக் குடிக்கிறது; அந்த மட்டியை நீங்கள் தின்கிறீர்கள். அப்போது என்ன நடக்கும், தெரியுமா?'

"'நான் மாண்டு போவேன். அப்படித்தானே?'

"'பேஷ்!' என்றான் குள்ளன். மீண்டும் என்னைப் பார்த்தபடி, 'கிழவனார் தர்ஸ்டனுக்கு மட்டி பிடிக்கும். மோலீஸ் மாரினீர்ஸ்

என்ற ஒரு வகை மட்டி என்றால், அவருக்கு உயிர். அதை அடிக்கடி நான் சமைத்துப் போட்டேன். அதில் அவருக்கு என்னிடம் ரொம்ப நன்றி.'

“ 'ஊஹூம்?'

“ 'அதனால் சகலத்தையும் எனக்கே கொடுத்துவிட்டார்' என்று சொல்லி, என் முகத்தை நிமிர்ந்து பார்த்தான் குள்ளன்.

“ 'நீங்கள் பெரிய அதிருஷ்டசாலி தான்.'

“ 'ஆமாம்' என்ற குள்ளன், நான் திடுக்கிடும்படி, 'பிசாசிலே உங்களுக்கு நம்பிக்கை உண்டா?' என்று கேட்டான்.

“ 'இல்லே. ஏன் இந்தக் கேள்வி?'

“ 'ஒன்றுமில்லே. அதுகிடக்கட்டும். என்ன சொன்னேன்? இப்போது நான் ஒரு கனவான் ஆகிவிட்டேன். சகல சொத்தையும் கிழவனார் எனக்குக் கொடுத்துப் போய் விட்டார்; அதாவது, எறக்குறையக் கொடுத்த மாதிரிதான். கடைசி நேரத்தில் அவன் வந்து சேர்ந்தான் - வெகு நாளாய் எங்கேயோ தொலைந்திருந்த அவர் மருமகன்.'

“ 'ஊஹூம்' என்றேன். இனி வரப்போகிற விஷயம் என்னவாயிருக்கும் என்பதை ஒருவாறு ஊகித்துக்கொண்டு சந்தேகத்தோடு அவனைப் பார்த்தேன்.

“ 'மருமகனைக் கண்டதில் கிழவருக்கு வெகு சந்தோஷம். பணத்தைக் கண்டபடி யெல்லாம் தொலைத்துவிட்டு, காலித்தனமாய்த் திரிந்த பயல்! இதை நீங்கள் கவனிக்க வேண்டும். என்னைவிட அவனிடம் கிழவருக்குப் பற்றுதல் உண்டாகி விட்டது. நானோ முப்பது வருஷமாய் இவரையே கட்டிக்கொண்டு அழுகிறேன். மருமகன் ரொம்ப அழகாம். என் அழகான மருமகன் என்றெல்லாம் சொல்லத் தொடங்கினார்.'

“ 'சரி, சரி.'

“ 'இப்படி ஆச்சா. ஒரு நாள் சாயங்தரம் அவர்கள் மோலீஸ் மாரினீர்ஸ் என்ற மட்டி தின்ன ஆசைப்பட்டார்கள். மட்டி சமைப்பதில் நானோ மகா கெட்டிக்காரன்.'

“ 'சரிதான்.'

“ 'நான் அதைச் சமைத்தேன். அவ்வளவுதான்...'

“ 'அப்புறம்?'

“குள்ளன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டே, 'யார் அதை நிரூபிக்க முடியும்?' என்றான்.

“ 'எதை?'

“ 'அதுதான்...அவர்கள் மாண்டு போனார்கள்-கிழவனாரும் மருமகனும்.'

“நான் மென்று விழுங்கினேன். அந்தப் பயங்கரக் குள்ளனைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. பாஸ்பரஸ் விஷத்தை வட்டித்துக் கிழவனையும் மருமகனையும் குள்ளன் கொன்றிருக்கிறான். 'மட்டியைப் போட்டு ஜோரான குழம்பு காய்ச்சி விட்டீர்களாக்கும்?' என்று கேட்டேன்.

“ 'குழம்பல்ல. அந்த மட்டி கடுக்காயளவுதான் இருக்கும்; அதன் தாடியைக் கிள்ளி யெறிந்துவிட்டு, அதோடு பார்ஸ்லி என்ற கீரையைக் கொஞ்சம் அரிந்துபோட்டு, சிறிது வெண்ணெய்விட்டுத் துவட்டல் செய்துவிட வேண்டும். அதை ஜலத்தில் வேக வைக்கக்கூடாது. ஆச்சா! இரண்டு பேரும் மாண்டு போனார்கள். நான் அதைத் தின்னவில்லே; சாகவும் இல்லே. கிழவனாரின் அசல் உயில் நிலைத்துவிட்டது. அதை மாற்றி எழுத அவருக்கு அவகாசம் இல்லாமல் போச்சு

நானே அவர் சொத்துக்கு வாரிசானேன். சுமார் இரண்டாயிரம் பவுன் பெறுமான வீடு வாசல், நில புலம் எல்லாம் எனக்குக் கிடைத்தன.'

" 'ஆகவே, நீங்கள் ஒரு பணக்காரராகிவிட்டீர்கள்?'

" 'ஆமாம்' என்று சொல்லிய குள்ளன், கீழே குனிந்தான். அவன் உடம்பு நடுங்கியது. 'என்ன பயங்கரமான பாறை! பயங்கரம்! பயங்கரம்! அதைத் தடவிப் பார்த்தீர்களானால் தெரியும்; ஓநாயின் பல் வரிசை மாதிரி அது உங்களைத் துண்டு துண்டாய்க் கிழித்துவிடும்' என்றான்.

" 'கற்பனை செய்து பார்த்தாலே அது எனக்குத் தெரிகிறது.'

" 'ஆனால், அது உங்களுக்கு வலிக்காது' என்றான் குள்ளன்.

"அவன் கண்களை ஏறிட்டுப் பார்த்தேன். அந்தச் சின்னஞ்சிறு பயங்கரக் கண்கள் பளபள என்று மின்னின. 'நீங்கள் ஒரு கொலைகாரர்' என்றேன்.

" 'இல்லை; அப்படி இல்லை.. அது போகட்டும். பேய், பிசாசு, செத்த பிறகு ஆவியாய்த் திரிய வேண்டும் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு, கொலை செய்யச் சிலபேர் பயப்படுகிறார்கள். எனக்கு அந்த நம்பிக்கையெல்லாம் இல்லை. நீங்கள் ஒரு தடவை செத்தால் செத்ததுதான். தெரிஞ்சுதா?'

"நான் ஒன்றும் சொல்லவில்லை.

"அவன் மேலும் தொடர்ந்து, 'ஆச்சா! கிழவர் சொத்துக்கு நான் வாரிசானேன். ஆனால், இங்கே ஒண்டியாய் இருக்க வேண்டியிருக்கிறது' என்றான்.

" 'நெஞ்சு வேறே கொலை செய்தோம் என்று குறுகுறுக்கிறது!'

"குள்ளனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'செய்தால் என்ன? அவர்களை நான் கொலை செய்தால் என்ன? அதை யார் நிரூபிக்க முடியும்? சட்டபூர்வமாக நிரூபிக்க முடியாதபோது, ஒரு மனிதனை எப்படித் தண்டிக்க முடியும்? முடியுமா?' என்றான்.

" 'எனக்குத் தெரியாது.'

" 'எனக்குத் தெரியும்; தண்டிக்க முடியாது. நீங்கள் செத்தால் செத்ததுதான். இதை நான் நிச்சயமாய்ச் சொல்ல முடியும். இதுவே உண்மை என்று நான் நம்புகிறேன். சாவுக்குப் பிறகு ஒன்றும் மிஞ்சுவதில்லை; இல்லை.'

" 'அதனாலே?'

"அவன் மௌனமானான். அவன் மீது நிலா வீசிக்கொண்டிருந்தது. பாறையை அலைகள் வந்து மோதிக்கொண்டிருந்தன. கடல் 'ஹோ' என்று இரைந்துகொண்டிருந்தது.

"திடீரென்று மீண்டும் அவன் பேசத் தொடங்கினான்: 'எனக்கு ஒரு விஷயந்தான் புரியவில்லை.'

" 'ஓஹோ! அதென்ன?'

" 'ஒரே ஒரு விஷயம்: ஒருவன் செத்தால் செத்ததுதான்-அது எனக்குத் தெரியும். ஆனால், ஒரு விஷயம்: நீங்கள் பாருங்கள்...' என்று சொல்லி அவன் நிறுத்தினான். அவன் முகம் ஒரு பயங்கர மாறுதலை அடைந்தது.

" 'சரி; என்ன, சொல்லுங்கள்.'

" 'ஒவ்வொருவருந்தான் சாகிறார்கள்.'

" 'ஆமாம்; சந்தேகமில்லாமல்.'

" 'ஆனால், நான் சாக முடியவில்லை. நான் சாக முடியவில்லை.'

"அவனை வெறித்துப் பார்த்தேன். அவன் பின்னே திரும்பிப் பார்த்தான். அவன் கண்களிலே ஒருவித ஆவேசம் நிறைந்திருந்

தது. 'இதோ பாருங்கள்' என்ருன்.

"நான் முன்னே நகர்ந்து அவனைப் பிடித்துத் தடுப்பதற்குள்ளே, தடதடவென்று பாறையின் முனைக்கு நடந்து அதற்கும் அப்பாலே அவன் போய்விட்டான்.

"நான் பயந்தாங்கொள்ளி அல்ல; என்ருலும், பதினைந்து நிமிஷம் வரைக்கும் என்னுல் கீழே குனிந்து பார்க்கவே முடியவில்லை. அப்புறம் பார்த்தபோது, அந்தக் குள்ளனின் சுவடே தெரியவில்லை. பாறையும், அதன்மீது நுரைத்து மோதிய அலைகளுந்தான் என் கண்ணுக்குத் தென்பட்டன."

இப்படிச் சொல்லி நிறுத்தினுன் கார்மெவின்.

"அப்புறம் நீ என்ன செய்தாய்?" என்று நான் கேட்டேன்.

"நான் நகரத்துக்குள் ஓடினேன். 'கொலை! கொலை!' என்று கூச்சலிட்டேன். குன்றின் மேலேயிருந்து சமுத்திரத்தில் ஒரு மனிதன் குதித்துவிட்டான் என்று நகர மக்களிடம் சொன்னேன். அவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். 'ஒல்லி ஆசாமி; குள்ளன்; கறுப்புச் சட்டை போட்டிருப்பான் - அது தானே?' என்று கேட்டார்கள். 'ஆமாம்' என்றேன். 'என், எத்தனையோ பேர் அதைப் பார்த்திருக்கிருர்கள். அதுதான் குள்ள ஹென்ரி; தர்ஸ்டன் கிழவனுரின் வேலையாள். வருகிற மைக்கேல் மாஸ் பண்டிகை வந்தால், அந்தக் கிழவர் செத்துப் பதின்மூன்று வருஷமாகிறது' என்று சொன்னுர்கள்" என்ருன் கார்மெவின்.

பிறகு அவன் மேலும் தொடர்ந்து, "அவ்வளவுதான். இதைக்கூட நீ நம்பமாட்டாய். எனக்கு உடம்பு என்னவோ போலிருந்தது என்று நான் ஒப்புக்கொள்கிறேன்; சில நிமிஷ நேரம் கண்ணயர்ந்துவிட்டேன் என்பதும் உண்மை. ஆகவே, வெறுங் கனவு என்று நீ சொல்வாய். ஆனுல் அது முற்றும் உண்மை. முட்டாள்கள் நம்பாததால், உண்மை பொய்யாகிவிடாது. எங்கே, ஒரு ஸிகரெட் கொடு. எனக்கு உடம்பு சரியில்லை" என்ருன்.

நான் மீண்டும் அவனுடன் பேசு முன்பு, ஸிகரெட்டைப் புகைத்துத் தீர்த்துவிட்டான். "இது வழக்கமாக எல்லாரும் சொல்லுகிற பிசாசுக் கதை மாதிரிதான் இருக்கிறது. ஆனுல், ஒரு மாறுதல்: பிசாசுக்கே, பிசாசில் நம்பிக்கை இல்லாதது வேடிக்கைதான். அதற்கப்புறம் என்ன நடந்தது? திரும்பவும் அங்கே போய்ப் பார்த்தாயோ?" என்று கேட்டேன்.

கார்மெவின் என்னை விழித்து நோக்கினுன். அவனுடைய உருண்டைக் கண்கள் சுழன்றன. "என்னை யாரென்று நினைத்தாய்? முட்டாள் என்ரு?" என்ருன்.

"இல்லை; ரொம்பப் பயமாயிருந்திருக்குமே என்றுதான் இப்படிக் கேட்டேன்" என்றேன்.

கார்மெவின் சிரித்தான்: "எனக்குத் துளிகூடப் பயம் உண்டாகவில்லை. இதை முன்னுடியே உனக்கு நான் சொல்லியிருக்கவேண்டும். மறுநாள் ராத்திரியும் அங்கே நான் போனேன். அப்போதும் அந்தக் குள்ளன் தோன்றினுன். இந்தத் தடவை, 'வாரும் ஐயா; உட்காருங்கள். இன்றைக்கு நான் கொஞ்சம் பேச இடங்கொடுங்கள்' என்றேன். அவன் என்னை நோக்கியபடி உட்கார்ந்தான்.

"'இதைக் கேளுங்கள்' என்று அவனிடம் பேசத் தொடங்கினேன்: 'எதிலும் நம்பிக்கை இல்லாதிருப்பது ஓரளவுக்கு நல்லதுதான். பேஷ்! பிசாசுகளில் உங்களுக்கு நம்பிக்கையில்லை. அது நல்லதுதான். ஆனால், உண்மையில் என்னவோ நீங்களே ஒரு பிசாசுதான். ஏனென்றால், வெகு நாளைக்கு முந்தியே நீங்கள் செத்துப்போனீர்கள். என் பைசாச நண்பரே, உங்களை நீங்களே ஏன் ஏமாற்றிக் கொள்கிறீர்கள்? என்னைத்தான் ஏன் ஏமாற்ற முயல்கிறீர்கள்? நீங்கள் யாரோடு பேசிக்கொண்டிருக்கிறீர்கள் தெரியுமா? நான்தான் கார்மெவின். என்னைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாமே. விஞ்ஞான சாஸ்திர ரீதியாகத் திட்டமிட்டு முன்னேற்பாடுகள் செய்து, எத்தனையோ முதலாளிகளைக் கொள்ளையடித்திருப்பவன் நான். இப்போது நமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளலாமே...'

"நான் யாரென்று தெரிந்தவுடனே, பிசாசுக் குள்ளன் நடுங்கி விட்டான். 'ஏன் இப்படி உங்கள் காலத்தையெல்லாம் குன்றிலிருந்து குதிப்பதிலேயே வீணாய்க் கழித்துக்கொண்டிருக்கிறீர்கள்? இதனால் உங்களுக்கு ஒருவித ஹானியும் உண்டாகாதென்று உங்களுக்கே நன்றாய்த் தெரியும். இந்த சுயநலத் தற்கொலை முயற்சியில் ஒவ்வொரு நாள் ராத்திரியையும் ஏன் கழிக்கிறீர்கள்? உங்கள் சகோதர மனிதர்களுக்கு நீங்கள் ஏன் உதவியாயிருக்கக்கூடாது? உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்: நாம் இருவரும் தோழர்களாகிவிடுவோம்' என்றேன்.

"நானே-என் கொள்ளைகளில் துணைவரைச் சேர்த்துக்கொள்ளாத நானே-இப்படித் தனக்கு அளிக்கும் கௌரவத்தைக் குள்ளன் புரிந்து கொண்டான். 'நாம் இருவரும் சேர்ந்து தொழில் புரிவோமே' என்று நான் மேலும் சொன்னேன்.

"ராத்திரி பூராவும் நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். பொது விடிந்ததும் மிஸ்டர் கில்டேர் என்ற ஓர் எஸ்டேட் ஏஜெண்டை நான் போய்ப் பார்த்தேன். ஓர் அழகான பழைய நாள் பங்களா காலியாயிருந்தது. புழக்கத்துக்கு வேண்டிய மேஜை நாற்காலிகளெல்லாம் நிறையப் போட்டிருந்தார்கள். அதை மிகச் சொற்ப வாடகைக்கு அமர்த்திக்கொண்டேன். பிறகு அதைப் பணக்கார அமெரிக்கர் ஒருவருக்கு நான் குடிக்கூலிக்கு விடுவதாகச் சொன்னேன். ராத்திரிக்கு ராத்திரி ஒரு பிசாசு வந்து வேடிக்கை செய்யும் என்று உத்தரவாதம் கொடுத்தேன். அதனால் மிகப் பெருந்தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டேன்.

"அமெரிக்கக் கனவான் ஆனந்தம் அடைந்தார். ஆனால், குடிக்கூலி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமுன் பிசாசைத் தாம் பார்க்கவேண்டுமென்று சொன்னார். ஒரு நாள் ராத்திரி பங்களாவில் வந்து தங்கி, அவரே பிசாசை நேரில் பார்த்துக் கொள்ளலாம் என்று அழைத்தேன். விஷயம் ரொம்ப ஜோராகவே நடந்தது. சாயந்தரம் ஆறரை மணிக்கு, என் குள்ள ஹென்ரி அவருக்குப் பிரத்தியட்சமானான். ஆவிமயமான கால்சராய் ஒன்றைப் போட்டுக்கொண்டு, அவருடைய அறையின் குறுக்கே அவன் ஜிலு ஜிலு என்று வழுக்கிக்கொண்டே போனான். பதினொரு மணிக்கு அமெரிக்கக் கனவான் படுக்கப் போனார். அப்போது என் ஹென்ரி

பனிக்கட்டி போல் சில்லிட்ட தன் விரல்களால் அவருடைய நெக்டையை அவிழ்த்து விடவே, அவர் ஓர் அந்தரடித்துவிட்டார்.

" 'பலே பேஷ்! இந்த இடத்தை நான் குடிக்கூலிக்கு எடுத்துக் கொள்கிறேன். என்ன குடிக் கூலி?' என்று அவர் கேட்டார்.

" 'இரண்டாயிரம் பவுன்.'

" 'இரண்டாயிரம் பவுனா? அடேயப்பா!'

" 'யோசித்துப் பாருங்கள். உங்கள் நண்பர்களுக்கெல்லாம் எவ்வளவு தமாஷாயிருக்கும்!' என்றேன் நான்.

"கன் ஒழுங்காகக் கோடையில் அவர் அதில் வந்து தங்கினர்.

"ஹென்ரியின் குணத்தில் உள்ள அதிருப்திகரமான சில அம்சங்களை முன்னதாகவே நான் கவனிக்காமல் போனேன். சமையல்காரப் பெண்ணை மோவாய்க் கட்டையிலே ஒரு தட்டுத் தட்டி, அவள் ஒரே அடியாய்க் கூப்பாடு போடச் செய்துவிட்டான். மாடிப் படியண்டை நிற்கும் இரண்டாவது வேலையாளோடு ஓயாமல் சச்சரவிட ஆரம்பித்தான்.

"ஹென்ரி இருக்குமிடத்தில், பிராந்திப் புட்டி எதுவும் பத்திரமாய் இருப்பதில்லை. அமெரிக்கரின் பெட்டியிலிருந்து திருட்டுப் போன விகரெட்டுகளெல்லாம் புகைந்தபடி ஆகாயத்தில் மிதந்தன. அவருடைய பொத்தான்கள், காலுறைகள் எல்லாம் மாயமாய் மறைந்தன. என்றாலும், மொத்தத்தில் எல்லாருக்கும் ரொம்பவும் திருப்திதான்.

"ஆனல், எனக்கு மாத்திரம் நான் எதிர்பார்த்தபடி காரியங்கள் நடக்காதது வருத்தமாயிருந்தது. ஒரு பிரமாதமான திட்டம் வகுத்து அதில் ஹென்ரியை உபயோகிக்கவேண்டுமென்று நான் எண்ணியிருந்தேன். பற்பல பங்களாக்கள், மாளிகைகள், பண்ணை வீடுகளையெல்லாம் வாடகைக்குப் பிடித்து, இவை அனைத்திலும் ஒவ்வொரு நாள் இரவும் ஒரு தடவை ஹென்ரி விஜயம் செய்யும்படி அவனிடம் சொல்லியிருந்தேன். பிசாசு என்றால், அதிவேகமாகப் பிரயாணம் செய்ய முடியும். நேரமும் தூரமும் பிசாசுக்கில்லை. ஆனல், ஹென்ரி நம்பிக்கையாக நடந்துகொள்ளவில்லை. அவன் சதாகாலமும் அந்த அமெரிக்கக் கனவானின் பங்களாவுக்குள்ளேயே சுற்றிக்கொண்டிருந்தானே யொழிய வெளியே வரவேயில்லை. ஹிதமாக அவனோடு வாதித்தேன். நல்ல காற்றில்லாமல் இப்படி ஒரு பங்களாவுக்குள்ளேயே எந்நேரமும் அடைந்து கிடப்பது உடம்புக்கு ஆகாது என்று என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தேன்... அவன் ஒன்றையும் கேட்கவில்லை.

"எனக்கு இதன் சூட்சுமம் புரியவில்லை. ஜூன் மாதம் எட்டாந் தேதி இரவு, அமெரிக்கக் கனவானின் விருந்தாளியாக நான் அந்தப் பங்களாவில் போய்த் தங்கினேன். எனக்குத் தூக்கம் வரவில்லை. ராத்திரி மணி இரண்டிருக்கும். கீழே லைப்ரரிக்குப் போய் ஒரு புஸ்தகம் எடுத்து வரலாமென்று இறங்கினேன். லைப்ரரி அறைக் கதவின் அருகே போனபோது, அதற்குள் இரண்டு குரல்கள் கேட்டன: ஒன்று, ஹென்ரியின் கீச்சுக் குரல்; மற்றது, ஒரு பெண்ணின் குரல்.

"உள்ளே போய்ப் பார்த்தால், ஹென்ரி ஜம்மென்று ஒரு ஸோபாவில் படுத்திருந்தான். அமெரிக்

கரின் பிராந்திப் புட்டியை எடுத்துக் காலி செய்துவிட்டு, ஸிகரெட்டுகளை ஊதிக்கொண்டிருந்தான். பதினாறும் நூற்றாண்டைச் சேர்ந்த உடுப்பணிந்த ஒரு சீமாட்டியின் கழுத்தைச் சுற்றி அணைத்திருந்தது அவனுடைய ஒரு கை. அந்தப் பெண் மிகவும் நாணிக் கோணி, தன் இடது கைப் பக்கம் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டிருந்தாள். இடையிடையே தலை நிமிர்ந்து, அவன் காதிலே ஏதோ கிசு கிசு என்று ஓதி, கிக்கிக்கி என்று இளித்துக்கொண்டிருந்தாள். இதையெல்லாம் பார்த்தால் எனக்கு எப்படியிருக்கும், நீயே சொல்.

"தரித்திரப் பயல்! லேடி ஜேன் யூல் என்பவளிடம் அசாத்தியக் காதல் கொண்டுவிட்டான்; காதல்! எட்டாவது ஹென்ரியின் காலத்தில் அவள் தலையை வெட்டிவிட்டார்கள். அதுமுதல் அவளுடைய ஆவி இந்த மாளிகையில் புகுந்து இதையே சுற்றிக்கொண்டிருக்கிறது! அவர்கள் இரண்டு பேரிடமும் நான் வெகுவாக மன்றாடிப் பார்த்தேன். 'கண்ணியம் வாய்ந்த பிசாசுகள், கண்ணியம் வாய்ந்த வேலையாட்களைப் போல், தம்பதிகளாகவே பற்பல வீடுகளுக்குள்ளும் புகலாம்; ஆனால், முறைப்படி திருமணம் செய்துகொள்வது அவசியம்' என்று எவ்வளவோ எடுத்துச்சொன்னேன். பலனில்லை. லேடி ஜேன் என் பேச்சைக் காது கொடுத்தே கேட்கவில்லை. வேலை செய்யப் போவதா? அவள் தலையை ஒரு முழ உயரம் நிமிர்த்தி, என்னை மிகவும் அவமதிப்போடு பார்த்தாள்.

"என் திட்டம் பலிக்காமல் போயிற்று. அதில் ஒன்றும் எனக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால், மனசுக்கு ரொம்ப வருத்தமாயிருந்தது. என் நண்பனே, உனக்கு நான் ஓர் எச்சரிக்கை செய்கிறேன்: கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது. கூட்டாளிகள் உன்னைக் கைவிட்டு விடுவார்கள். இந்தத் திட்டத்தைத் துறந்துவிட்டு, சில நாளைக்கெல்லாம் வேறு வியாபாரத்தில் நான் ஈடுபட்டேன். இரண்டு வருஷம் கழித்து விசாரித்தபோது, ஹென்ரி, லேடி ஜேன் இரண்டு பேரையும் அந்தப் பங்களாவில் காணவில்லை. ஏதோ ஒரு பெரிய கம்பெனியில் அவர்களை டைரெக்டர்களாய்ச் செய்துவிடுவதாக ஏதோ அபத்தமாக ஆசை காட்டி, அந்த இரண்டு பிசாசுகளையும் அமெரிக்காவுக்கு அந்தக் கனவான் அழைத்துச் சென்றுவிட்டாராம்!"

இரும்புத்திரைக்குப் பின்னே

ஒரு ஹங்கேரிய மந்திரி (ஒரு குடியானவனைப் பார்த்து): "புதிய திட்டப்படி உருளைக் கிழங்கு விளைச்சல் எப்படி?"

"மகிமை வாய்ந்த நம் ஸ்டாலின் தலைமையிலே உருளைக் கிழங்கு விளைச்சல் அற்புதம்! நம் உருளைக் கிழங்குகளையெல்லாம் ஒரே குவியலாய்க் குவித்தால், அது மலைபோல் வானம் முட்ட உயர்ந்து கடவுளின் பாத கமலங்களை எட்டிவிடும்."

"கடவுளா! கடவுள்தான் கிடையாதே."

"உருளைக் கிழங்கா? அதுவுந்தான் கிடையாதே."

—பாத் பைண்டர்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

தொழிலும் கலையும்

யூதர்களின் புராதனக் கதை ஒன்று உண்டு. ஸாலமன் என்ற அரசன் ஒரு கோயில் கட்டினான். அது பூர்த்தியானதும், அதைக் கட்ட உதவிய சகல தொழிலாளிகளுக்கும் ஒரு விருந்து நடத்தினான். அரசன் தன் சிம்மாசனத்தில் அமர்ந்தான். அவனுக்கு வலது கைப்பக்கத்தில் ஒரு நாற்காலி காலியாகக் கிடந்தது. தொழிலாளிகளுக்குள்ளே பெருங் கௌரவம் பெறத் தக்கவனுக்காக அதைப் போட்டிருந்தான். விருந்து நடக்கும்போது வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அதைத் திறந்ததும், நாட்டுப்புறத்தான் ஒருவன் அநாகரிகமான தோற்றத்துடன் உள்ளே வந்தான்.

அரசன் புருவத்தைச் சுளித்துக்கொண்டு, "நீ யாரப்பா?" என்று கேட்டான்.

"பிரதானமான தொழிலாளியை நீங்கள் அழைத்திர்களாமே; அதனால் நான் வந்தேன்" என்றான் நாட்டுப்புறத்தான்.

"நானறியேன் இவனை" என்றார் கர்ப்பக்கிருகத்தில் கந்தர்வச்சிலை செதுக்கிய சிற்பி.

"நானும் அறியேன்" என்றார் தங்கவிமானம் செய்த கலைஞர்.

"நானும் அறியேன்" என்றார் அழகிய சுவர்களை எழுப்பிய கொத்தனார்.

"நானும் அறியேன்" என்றார் தேவதாரு மரத்தில் சித்திர வேலைப்பாடு செய்த தச்சர்.

வந்த நாட்டுப்புறத்தான் அங்கிருந்த இனிய பானத்தைத் தானே எடுத்துப் பருகிக்கொண்டே, "கலைஞர்களே, இதைச் சொல்லுங்கள்: செதுக்கியும் தட்டியும் பூசியும் இழைத்தும் நீங்கள் படைத்த படைப்புக்கெல்லாம் தேவையான கருவிகளைச் செய்தவன் யார்?" என்று கேட்டான்.

"கருமான்" என்றார்கள் கலைஞர்கள்.

"அவன் நான்தான். அனலும் புகையும் புழுங்கும் என் உலைக்களத்திலே அவைகளை நான் படைத்திராவிட்டால், உங்கள் அழகிய சிருஷ்டியெல்லாம் தோன்றியிராது" என்றான் வந்தவன்.

"உண்மை. வா; என் வலது பக்கத்திலே வந்து உட்கார்" என்று அழைத்தான் அரசன்.

டி. வ்ரைட், 'மேஸானிக் கதைகள்'.

March '52 Regd. No. M. 4975

மஞ்சரி

கர - பங்குனி

ஊரும் உலகமும் 1
எலிஸபெத் ராணி 3
ரமணர்: வாழ்வும் வாக்கும் 8
அங்கதனின் சோர்வு 12
எது நாகரிக ப்ராணி? .. .. ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் 16
யாருக்கு என்ன பதவி? .. .. சங்கர்ஸ் வீக்லி 20
ஓவியர் அவனீந்திரர் .. .. ப்ரபாஸி 25
நத்தைகள் சங்கம் 28
மலேயாக் குழப்பம் 33
சீன மொழி .. .. திரிவேணி 36
கார்ட்டூன் கதம்பம் (படம்) 40
நட்சத்திரத்தில் பெயர் பொறித்தவன் 42
மின்சார சப்ளை எப்படி? .. .. போரம் 45
கண்ணிலே தெரியுமா? 49
எனக்குப் பிடித்தவர் வக்கீல்கள் 55
ஆரோக்கியத்தில் அழகு .. ..சௌபாக்ய 59
லிங்கன் தாடி வளர்த்த கதை.. 62
சிரித்த முகம் (குஜராத்திக் கதை) .. .. ஸுரேச ராஜூத் 67
நம்பாதவன் (வெளிநாட்டுக் கதை) .. கெரால்டு கெர்ஷ் 72
தொழிலும் கலையும் .. .. 3-ஆம் அட்டை